Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு + 11

விலை: ரூபா 8.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர்:04 திருவள்ளுவர் ஆண்டு: 2036 மார்கழி 16 ஹிஜ்ரி 1428 துல்கதா 28 (31.12.2005) சனிக்கிழமை இதழ் 92


MANOJ AIR TOURS (PVT) LTD.

MANOJ EXPRESS

The Finest Express Service in the Field.

உள்நாட்டு, வெளிநாட்டு விமான ரிக்கெட்டுக்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்

இல.32, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(பொலிஸ் நிலைய வீதி, யாழ்ப்பாணம்)
021 222 3916, 0777 801038



## இராணுவ வன்முறைகளை வேடிக்கை பார்க்கமுடியாது!

### அரசியற்துறை பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் எச்சரிக்கை

கிளிநொச்சி —

தமிழ்மக்கள் மீதான இராணுவ வன்முறைகளை நாம் கைகட்டி நின்று வேடிக்கை பார்க்க முடியாது என்று தமிழீழ அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் எச்சரித்துள்ளார்.

கிளிநொச்சியில் ஆயர்கள் குழுவை நேற்று வெள்ளிக்கிழமை சந்தித்த பின்னர் ஊடகவியலாளர்களுக்கு சு.ப.தமிழ்ச்செல்வன் கருத்துத் தெரிவிக்கையில் -

ஆயர்கள் மற்றும் திருச்சபையின் முக்கிய தலைவர்களும் அமைதிநிலை திரும்ப எத்தகைய வழிமுறைகளைக் கையாளலாம் என்பது பற்றி எங்களுடன் விவாதித்தார்கள்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை அரசாங்கமும் படைத்தரப்பும் முழுமையாக நடைமுறைப்படுத்தாமல் எங்கள் மக்களுக்கு எப்படி ஏமாற்றத்தையும், விரக்தியையும் உருவாக்கினார்கள் என்பதை முழுவிபரமாக எடுத்துக்கூறினோம். (02 ஆம் பக்கம் பார்க்க)



## மட்டக்களப்பில் நேற்று 5 பொலிஸார் காயம்!

மட்டக்களப்பு —

மட்டக்களப்பு நகரில் நேற்று இரு வேறு இடங்களில் நடத்தப்பட்ட தாக்குதல்களில் ஐந்து பொலிஸார் காயமடைந்தனர்.

பேய்த்தாழையில் நேற்றுக்காலை 11.30 மணியளவில் ரோந்து சென்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## படையினர் மீது அரசடியில் தாக்குதல்

யாழ்ப்பாணம் —

யாழ்.இந்து மகளிர் சந்திக்கு அண்மையாக - அரசடி வீதியூடாக மதிய உணவு கொண்டுசென்ற படையினர் மீது நேற்றுப் பிற்பகல் 2.15 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன. (12 ஆம் பக்கம் பார்க்க)

# மகிந்தவின் இந்திய விஜயம் தோல்வி; வெறும் கையுடன் நாடு திரும்பினார்!



புதுடெல்கி —

சமாதான முயற்சிகளில் இந்தியாவை அனுசரணையாளராக்குவது, இணைத்தலைமை நாடுகளுடன் இந்தியாவையும் இணைத்துக் கொண்டு -

அதன் பாதுகாப்புக்குள் இருந்தபடியே விடுதலைப் புலிகளுக்கு எதிரான நகர்வுகளை முன்னெடுக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டிருந்த திட்டங்கள் யாவும் தோல்வியில் முடிந்திருக்கிறது.

இதனால் அவர் வெறும் கையுடன் இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ளதாக புதுடெல்கி அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு ரீதியாக இந்தியாவின் முழுமையான


## இலங்கைக்கு எந்தவித உதவியும் இந்திய அரசு வழங்கக்கூடாது!

### சென்னை மாநாட்டில் தீர்மானம்

சென்னை —

எந்தக் காரணத்தைக் கொண்டும் இலங்கை அரசுக்கு எத்தகைய உதவிகளையும் இந்தியா வழங்கக்கூடாது என - சென்னையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திராவிடர் கழகத்தின் சார்பில் நேற்றுமுன்தினம் மாலை சென்னை - பெரியார் திடலில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்ற ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேலும் குறிப்



திருக்கிறது.

இதனால் அவர் வெறும் கையுடன் இந்தியாவிலிருந்து நாடு திரும்பியுள்ளதாக புதுடெல்கி அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

பாதுகாப்பு ரீதியாக இந்தியாவின் முழுமையான உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் நோக்கிலும், அரசியல் ரீதியான ஆதரவைப் பெறும் வகையிலும் இந்திய மத்திய அரசிடம் மகிந்த (12 ஆம் பக்கம் பார்க்க)

நடைபெற்ற ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திராவிடர் கழகத்தின் சார்பில் நேற்றுமுன்தினம் மாலை சென்னை - பெரியார் திடலில் திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி தலைமையில் நடைபெற்ற ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

இலங்கைத் தீவில் கடந்த அரை நூற்றாண்டு காலத்திற்கு மேலாக சிங்களப் (12 ஆம் பக்கம் பார்க்க)



# படையினரது அத்துமீறல்கள்; கண்காணிப்புக்குழுவுக்கு கடிதம்!

மன்னார் —

யாழ்.குடாநாட்டில் படையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் அத்துமீறல்கள் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவுக்கு யாழ்.மாவட்ட அரசியற்துறை கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் -

கடந்த சில நாட்களாக படையினர் அப்பாவிப் பொதுமக்களைக் கொன்று வருகின்றனர். அத்துடன் பெண்கள், சிறுவர்கள், முதியவர்களும் படையினரால் தாக்கப்படுகின்றனர் -அவமானப் படுத்தப்படுகின்றனர். படையினரால் கைதுசெய்யப்பட்டு இளைஞர்கள் காணாமற்போயுள்ளனர்.

மேற்படி விடயங்கள் சம்பந்தமாக பாதிக்கப்பட்டவர்கள் - படையினரது அச்சுறுத்தல் காரணமாக உங்களை அணுகி முறைப்பாடுகளைச் செய்ய முடியாதுள்ளது.

முத்திரைச்சந்திப் பகுதியில் பரஞ்சோதி பிரதீபன், யோகராசா கஜேந்திரன் ஆகிய இளைஞர்கள் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கொடிகாமம் - வரணிப் பகுதியில் 16 வயதுச் சிறுவன் தம்பிராசா அருள். அஜந்தன் வீட்டில் வைத்தே பெற்றோர் முன்னிலையில் இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இந்தக் கொலைகள் சட்டபூர்வமாக நியாயப்படுத்த முடியாத, வேண்டுமென்றே படைகளால் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகளாகவே கருதப்பட வேண்டும். இந்தக் கொலைகள் சட்டத்தையும், ஒழுங்கையும் பேணுவதற்கு அல்லது பொதுமக்கள் பாதுகாப்பு என்ற சட்டவரைக்குள் நியாயப்படுத்த முடியாத படைகளது ஆயுதப் பிரயோகத்தால் ஏற்பட்டுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் மக்கள் கூடுகின்ற இடங்களில் படையினர் - பொதுமக்களை தான்தோன்றித்தனமாகத் தாக்குகின்றனர். முதியவர்கள், பெண்கள், சிறுவர்கள் என வயது வேறுபாடின்றித் தாக்கப்பட்டு மருத்துவமனைகளில் (12 ஆம் பக்கம் பார்க்க)

**நாளை முதல் 10/=**

**தவிர்க்கமுடியாத சுமைகளாலும் அச்சக செலவின அதிகரிப்பாலும் நமது ஈழநாடு நாளிதழின் விலை நாளை முதல் ரூபா 10 ஆக அதிகரிக்கப்படுகின்றது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருகின்றோம்.**

**நாளை கலண்டர்**

நாளைய நமது ஈழநாடு நாளிதழுடன் 2006 ஆம் ஆண்டுக்கான அழகிய நான்கு வர்ணக் கலண்டர் இலவச இணைப்பாக வெளிவருகிறது.

# யாழ். படையதிகாரிகளுக்கு ஹெலி வசதி தேவையாம்!

## இராணுவத் தளபதியிடம் கோரிக்கை

கொழும்பு —

யாழ்.மாவட்டத்தில் நிலைகொண்டுள்ள இராணுவ உயரதிகாரிகள் தமது போக்குவரத்துக்கு ஹெலிகளை வழங்குமாறு இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் சரத் பொன்சேகாவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புலோலிப் பகுதியில் இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து பாதுகாப்பு நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக யாழ். குடாவிற்கு விஜயம் செய்த இராணுவத் தளபதியிடமே அவர்கள் தமது கோரிக்கையை முன்வைத்தனர்.

டிவிசன்களுக்குப் பொறுப்பாக இருக்கும் மேஜர் (12 ஆம் பக்கம் பார்க்க)

# வரணியில் நேற்றிரவு தாக்குதல்!

சாவகச்சேரி —

தென்மராட்சி - வரணியில் அமைந்துள்ள இராணுவத்தின் 52 ஆவது டிவிசன் தலைமையக முகாம் மீது நேற்றிரவு தாக்குதல் நடத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

வரணி சந்தைக்கும் மகாவித்தியாலத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் - பருத்தித்துறை - கொடிகாமம் வீதியில் அமைந்திருக்கும் இந்த முகாம் பகுதியில் நேற்றிரவு 9 மணியளவில் பாரிய குண்டுச்சத்தம் கேட்டது.

இதையடுத்து துப்பாக்கி வேட்டுச் (12 ஆம் பக்கம் பார்க்க)

# இராணுவ வன்முறைகளை...

இப்போது மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள நெருக்கடிகளையும் எடுத்து விளக்கினோம்.

தற்போது பொதுமக்கள் மீது இராணுவம் பாரியளவில் வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. எமது மக்கள் அமைதி வழி, ஜனநாயக வழியில் வெகுஜனப் போராட்டங்களை முன்னெடுத்தபோது அதை வன்முறைக்குள் தள்ளிய பொறுப்பு அரசாங்கத்துக்கும் படைத்தரப்பினருக்குமானது.

மக்கள் மீது திணிக்கப்பட்டிருக்கிற இராணுவ வன்முறைகளை உடனடியாக நிறுத்தினால்தான் மக்களின் கொந்தளிப்பைத் தணிக்கலாம் என்பதே எங்கள் மக்களின் எதிர்பார்ப்பு. இந்த நிலைமையை ஆயர்களுக்கு நாங்கள் எடுத்து விளக்கினோம்.

இதை நீங்கள் அரசுக்கும், படைத்தரப்பினருக்கும் வலியுறுத்தி இயல்பு நிலையைக் கொண்டுவர ஆக்கபூர்வமாக முயற்சித்தால் அதற்கு நாம் முழுமையாக ஆதரவளிப்போம் என்று கூறினோம்.

மட்டக்களப்பில் புனித நாளில் தேவாலயத்துக்குள் வழிபாட்டில் ஈடுபட்டிருந்த தமிழ் மக்களால் பெரிதும் மதிக்கப்படுகிற நாடாளுமன்ற உறுப்பினர் மாமனிதர் ஜோசப் பரராஜசிங்கம் சுட்டுக்கொல்லப்பட்டதை திருச்சபை உடனடியாக கண்டிக்காததும், நடவடிக்கை எடுக்காததும் எங்கள் மக்களுக்கு மனவருத்தத்தை ஏற்படுத்தியிருப்பதாக நாங்கள் சுட்டிக் காட்டினோம். இதை அவர்கள் ஏற்றுக்கொண்டார்கள். தங்களுக்கு உடனடியாகத் தகவல் கிடைக்காததால் தாமதமாகிவிட்டது என்று கூறினார்கள்.

போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இயல்பு நிலையை திரும்பக் கொண்டுவர வேண்டும். பொதுமக்கள் மீதான இராணுவ வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும். யுத்தநிறுத்த அமுலாக்கப் பேச்சுக்களை விரைவாகத் தொடங்க வேண்டும் என்பதுதான் ஆயர்களின் கோரிக்கையாக இருந்தது.

போர்நிறுத்த அமுலாக்கத்தைப் பற்றி பேசத்தயாராக இருக்கிறோம். இதற்கு முன்பு எங்கள் மக்கள் மீது திணிக்கப்படும் இராணுவ வன்முறைகளை நிறுத்தினால்தான் மக்களின் கொந்தளிப்பைத் தணிக்கமுடியும் என்றும் தெரிவித்தோம்.

மக்களே இராணுவத்தினது தாக்குதல்களுக்கும் பதில் கொடுக்கத் தொடங்கியுள்ளனர். மக்கள் இன்று கொந்தளித்த நிலையில் உள்ளனர். மக்கள் மீதான தொடரும் வன்முறைகள் குறித்து நாங்கள் கைகட்டி வேடிக்கை பார்க்க முடியாது. அனுசரணையாளர்கள் என்ற வகையில் நோர்வேத் தரப்புக்கும், சர்வதேச சமூகத்துக்கும் நாங்கள் எடுத்து விளக்கிக் கொண்டுள்ளோம்.

மிகவிரைவில் பொதுமக்கள் மீதான வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து, பொதுமக்கள் மீதான வன்முறைகளை இராணுவம் நிறுத்தி மக்கள் வாழ்விடங்களிலிருந்து இராணுவம் வெளியேற வேண்டிய சூழல் வரவேண்டும் என்பதை நாம் வலியுறுத்தி வருகிறோம். இன்றைய சந்திப்பின்போதும் இதை சுட்டிக்காட்டியுள்ளோம். நிலைமைகளை எங்களுடைய தலைமைப் பீடம் உன்னிப்பாக அவதானித்து வருகிறது.

மலையகத் தலைவர்கள் எங்களுடன் வந்து பேசியுள்ளனர். அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் ஒன்றிணைந்து செயற்படுவதற்கு எல்லோரும் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

நடைமுறையில் அதை வலுவாக்கிக் கொள்வதற்கு தொடர்ந்து நாம் கலந்துரையாட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

இப்போது நிலைமைகள் இறுக்கமடைந்து கொண்டிருப்பதால் அதற்கான முயற்சிகள் காலதாமதமடைகிறது. இருந்தாலும் கொள்கையளவில் அனைவரும் இணக்கப்பட்டுக்கு வந்துள்ளோம்.

யாழ்ப்பாணம் மட்டுமல்ல இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகள் அனைத்திலிருந்துமே மக்கள் பாது காப்பான இடங்களை நோக்கி நகருகிற சூழல் இப்போது உருவாகி வருகிறது.

இராணுவத்தினது அடாவடித்தனங்களும், யார் எவரின்றி சிறுவர் பெண்கள் உட்பட அனைவரும் கொல்லப்படுகிற சூழல் உருவாகியுள்ளது. உண்மையிலேயே பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் செல்வது தவிர்க்கமுடியாதது.

மக்கள் தங்களைத் தற்காத்துக்

(12 ஆம் பக்கம் பார்க்க)


## உடுப்பிட்டி ப.நோ.கூ சங்கம் (வ-து)

## பதவி வெற்றிடம்

**எமது சங்கத்திலுள்ள கீழ்வரும் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது**

பதவி :- வர்த்தக முகாமையாளர் (நிரந்தரமானது)

குறியீட்டு இல :- 31/99/106/08

சம்பளத் திட்டம் 5250 - 7750 / 120 - 10 - 130 - 10

இத்துடன் அங்கீகரிக்கப்பட்ட சம்பளக் கணிப்பீடுகளும்

வயதெல்லை: 30 - 50 வயதிற்கும் இடையில்

**தகைமைகள்**

01 கூட்டுறவு ஊழியர் சம்பளத் திட்டத்தில் அனைத்து முகாமை மட்டப் பதவியொன்றில் அல்லது வர்த்தகம் தொடர்பான மேற்பார்வை மட்ட பதவியில் பெற்றுள்ள 3 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது மேற்சொன்ன பணிநிலைகளில் கூட்டுறவுப் பணிபாளர் 10 ம் சம்பளத் திட்டத்தில் அமைந்த பதவியொன்றில் பெற்றுள்ள 6 வருட அனுபவம்

*அல்லது*

02 அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பெற்றுள்ள பட்டம் அல்லது அதற்கு சமமான தகுதிகளுடன் வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டப் பதவியில் அல்லது சந்தைப் படுத்தல், வழங்கல் விநியோகம், ஏற்றுமதி, இறக்குமதி போன்ற துறைகளிலான பதவிகளில் ஒன்றிலோ அல்லது மேற்பட்ட பதவிகளிலோ பெற்றுள்ள 4 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

*அல்லது*

03 கூட்டுறவுப் பணியாளர் உயர்தரப் பத்திரம் (க.பொ.த) உயர்தரம் 3 பாடங்களில் பெற்றுள்ள சித்தியுடன் வர்த்தக கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டப் பதவியில் அல்லது சந்தைப்படுத்தல் வழங்கல் விநியோகம், ஏற்றுமதி, இறக்குமதி போன்ற துறைகளிலான பதவிகளில் ஒன்றிலோ அல்லது மேற்பட்ட பதவிகளிலோ பெற்றுள்ள 6 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது என்பதுடன் அவர்கள் தமது விண்ணப்பத்தை தாம் பணிபுரியும் சங்கத்தினூடாகவே அனுப்பிவைத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாது நேரடியாக விண்ணப்பம் அனுப்பிய ஒருவர் அவர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர் என்பது பின்னர் தெரியவருமிடத்து தமது பதவியை இழப்பதற்கு காரணமாக அமையக் கூடும் என்பதையும் கவனிக்கவும்.

விண்ணப்பங்களை பெயர், முகவரி, வயது, கல்வித் தகைமை, வதிவிடம் மற்றும் தொழில் அனுபவங்கள் என்பவற்றை தெளிவாக்கும் வண்ணம் சுயமாகத் தயாரித்து சான்றிதழ்களின் நிழற்பிரதியுடன் **பொது முகாமையாளர், உடுப்பிட்டி பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், உடுப்பிட்டி.** என்ற முகவரிக்கு 16.01.2006ந் திகதிக்கு முன்னர் நேரிலோ, பதிவுத் தபாலிலோ அனுப்பி உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

(சி-4962) **தலைவர்**



## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அண்மையில் கொள்வனவு செய்யப்பட்ட ரைட்டருடன் கூடிய P-4 கணினி (128 ரம்) விற்பனைக்குண்டு. விலை - 55000/=. தொடர்புகளுக்கு லஜன்ஸ், நாவலர் வீதி (ஸ்ரான்லி கல்லூரி முன்பாக), யாழ்ப்பாணம். T.P:0776291552.

**HIGH SPEED INTERNET BROWSING**

OPEN - 09.00 AM to 11.00 PM

நல்லைக்கந்தன் நெற்கபே

62, வைமன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

தொ.பே. - 021 222 2779

**நாதன்ஸ்** யாழ்ப்பாணம் (குளிரூட்டப்பட்டது)

அர்ஜுன், நமீதா, வடிவேல் மற்றும் பலர் நடித்த

**ஆணை**

காட்சிகள்;- 10.30, 2.00, 5.15, 8.15, (புதிய நேரம்)

**ராஜா** யாழ்ப்பாணம்

சத்தியராஜ் (இருவேடம்) சங்கவி, ஆனந்தராஜ் நடித்த **அய்யர் I.P.S**



காட்சிகள்:-10.30, 2.00மட்டும் (பு.நேரம்)

**மனோகரா** யாழ்ப்பாணம்

இந்தியா இலங்கை ஒரேதின வெளியீடாக

சூரியா, திரிஷா, வடிவேல், நடித்த

DIGITAL dts SOUND ஒலிநயத்துடன்



**ஆறு**

காட்சிகள் 10.30, 1.30, 4.30, 7.30, 10.30

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

ரஜினி, மீனா, சரத்பாபு மற்றும் பலர் நடித்த **முத்து**

காட்சிகள் 11.00, 2.00, 5.00 (புதிய நேரம்)


**கல்வியியற் கல்லூரிகளுக்கான**

# நேர்முகப் பரீட்சைகள் ஜனவரி 5 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரிகளுக்கு புதிய நேர்முகப் பரீட்சை ஜனவரி 5 ஆம் திகதி ஆரம்பமாகும் என யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் பதில் பீடாதிபதி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 5, 6, 7 ஆகிய திகதிகளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியிலும், 8 ஆம் திகதி கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்திலும், 9, 10 ஆகிய திகதிகளில் வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியிலும், 12, 13 ஆகிய திகதிகளில் மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியிலும் நடைபெறவுள்ளது.

நேர்முகப் பரீட்சைக்குத் தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான கடிதம் பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## கல்வியியற் கல்லூரி ஜனவரி 9 இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம் —

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 2006 ஆம் ஆண்டுக்கான கல்விச்செயற்பாடுகள் அடுத்த மாதம் 9 ஆம் திகதி ஆரம்பமாகும் என தேசிய கல்வியியற் கல்லூரியின் பதில் பீடாதிபதி தெரிவித்தார்.


**இளையோர் அறிவியற் கழகம்**

## தொழில்நுட்பக் கற்கைநெறி ஆரம்பம்



கணினியியல் இலத்திரனியல்



ஆகிய உயர் தொழில்நுட்ப மற்றும் ஆய்வுகூட வசதிகளுடன் ஆரம் பமாகின்றது.

கற்கை நெறிக்கு

- ❖ க.பொ.த சா/த, உ/த மாணவர்கள் உட்பட உயர் தொழில்நுட்பக் கல்லூரியில் கல்வி கற்பதற்காக காத்திருக்கும் மாணவர்கள்
- ❖ பாடசாலைக் கல்விக்கு இடையூறு இல்லாத நிகழ்ச்சி நிரல்.
- ❖ பயிற்சியை நிறைவு செய்வோர்க்கு உயர் தொழில்நுட்பவியல் வேலை வாய்ப்புகள்
- ❖ மட்டுப்படுத்தப்பட்ட மாணவர்கள்

**அனுமதிக்கு முந்துங்கள்.**

| தொடர்புகளுக்கு : | |
|---|---|
| மாவீரர் படிப்பகம், விசுவமடு. | இளையோர் அறிவியற் கழகம் விசுவமடு மகாவித்தியாலய அருகாமை, விசுவமடு. |

(சி/4958)

அனுமதிக்கான முடிவுத் திகதி : 15.01.2006


## காணி தொடர்பான முக்கிய அறிவித்தல்

1) ஒவ்வொரு மாவட்டங்களிலும் உள்ளடக்கப்பட்ட பிரதேசங்களில் அரச/பொதுத் தேவைகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட அரச காணிகளை எவரும் அத்துமீறிப் பிடிக்காத வகையில் ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிகளுக்குரிய நிறுவனம்/திணைக்களம்/சபை தமக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட காணிக்குள் விளம்பரப் பலகை ஒன்றை மக்கள் பார்வையிடக்கூடியதாக நாட்டி காணியை அடையாளப்படுத்தி பாதுகாக்குமாறு வேண்டுகின்றோம்.

2) ஒதுக்கீடு செய்யப்பட்ட அரச காணிகளை எவரும் அத்துமீறி கையகப்படுத்தியிருப்பின் அல்லது ஆட்சிப் படுத்தியிருப்பின் அந்தக் காணிக்குரிய நிறுவனம்/திணைக்களம்/சபை தமது காணி என்பதற்கான ஆதாரத்துடன் அந்தக் காணி தொடர்பான தற்போதைய நிலையையும் பொறுப்பாளர், காணிப்பகுதி, தமிழீழ நிர்வாக சேவை, நடுவப் பணியகம், பாரதிபுரம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.


3) அனுமதிப்பத்திரம் பெற்றுள்ள, அனுமதிப்பத்திரம் பெறாதுள்ள காணிகளை விற்பனை செய்வது தடைசெய்யப்பட்டுள்ளது. இருப்பினும் காணி ஒன்றை விற்கவேண்டிய அத்தியாவசிய தேவை ஒருவருக்கு ஏற்படின், அவர் அந்த மாவட்டத்துக்குரிய தமிழீழ நிர்வாக சேவை காணிப்பகுதியுடன் தொடர்புகொண்டு, அதன் அனுமதியைப் பெற்ற பின்னரே விற்பனை செய்தல் வேண்டும். இந்த அறிவித்தல் வெளியிடப்பட்ட 22.12.2005 நாளிலிருந்து அனுமதி பெறப்படாது காணி விற்பனை செய்யப்பட்டால் சம்பந்தப்பட்டவர்கள் மீது தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

**காணிப்பகுதி**
**தமிழீழ நிர்வாகசேவை**
**நடுவப் பணியகம்** - கிளிநொச்சி

(சி/4433)

# இலங்கை அரசை - புலிகளுடன் பேச்சு நடத்த வற்புறுத்த வேண்டும்!

## இந்திய அரசிடம் ராமதாஸ் தெரிவிப்பு



சென்னை—

ஈழத்தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் நோர்வே அரசின் அனுசரணையுடன் பேச்சு நடத்த இலங்கை அரசாங்கத்தை இந்திய அரசு வற்புறுத்த வேண்டும் என பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாஸ் இந்திய அரசிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக சென்னையில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் –

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு சுமுகத் தீர்வு ஏற்படாமல் காலம் கடத்தப்பட்டு வருவதற்கு சிங்கள அரசுகள் தான் காரணமாக இருந்து வருகின்றன.

1959 இல் பண்டாரநாயக்கவுக்கும் தமிழர் தலைவர் செல்வநாயகத்துக்கும் இடையே ஏற்பட்ட ஒப்பந்தத்தில் இருந்து இப்போது நோர்வே நாட்டின் முயற்சியில் நடக்கும் அமைதிப் பேச்சு மற்றும் அதன்மூலம் உருவான போர் நிறுத்த உடன்பாடு வரையில் சிங்களவர்கள் இதைத்தான் செய்து வருகிறார்கள்.

எப்போதெல்லாம் ஒப்பந்தங்கள் மீறப்பட்டு, அதனால் இலங்கையில் நெருக்கடி ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் இலங்கைத் தலைவர்கள் புதுடெல்கி வந்து இந்தியத் தலைவர்களைச் சந்தித்துப் பேசுகின்றனர்.

தங்கள் நிலையை இந்தியா ஆதரிக்கிறது என்பதைப் போன்ற கருத்தை உருவாக்கவே இவ்வாறு செய்கின்றனர்.

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்கு நோர்வே அனுசரணையோடு தீர்வுகாண நடத்தப்பட்ட அமைதிப் பேச்சு முறிந்து போனதற்கு முழுக்காரணமாக இருந்தவர் இப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ.

நோர்வே நாட்டின் சமரசம் தேவையில்லை. அந்த இடத்தை இந்தியா நிரப்ப வேண்டும் என்று அவர் கோரி வந்திருக்கிறார். இதன் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியை மேலும் பல ஆண்டுகளுக்கு இழுத்தடிக்க வேண்டும். இலங்கைத் தமிழர்களின் உணர்வுகளை நசுக்க வேண்டும் என்பதே அவருடைய திட்டம். இதற்கு இந்தியா ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.

இந்தப் பிரச்சினையில் இந்தியத் தமிழர்களின் உணர்வுகளுக்கு எதிராகவும், அவர்களது ஒட்டுமொத்த உணர்வுகளைப் புறக்கணிக்கும் வகையிலும் இந்திய அரசு செயற்படாது என்று இங்குள்ள தமிழர்களுக்கு நம்பிக்கை இருக்கிறது.

அரசியல் மற்றும் பொருளாதார உரிமைகளைப் பெற்று சிங்களவர்களுக்குச் சமமாக இலங்கைத் தமிழர்கள் வாழ வழிகாண வேண்டும். இதற்கு இந்தியா உதவ வேண்டும். இதுதான் இங்குள்ள தமிழர்களின் ஒட்டுமொத்தமான நிலை.

இலங்கை ஜனாதிபதியுடன் பேச்சு நடத்தும்போது இந்திய அரசு இதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

நோர்வே நாடு சமரச முயற்சியைத் தொடர வேண்டும் என்றும், இலங்கை அரசு அதனை ஏற்க வேண்டும் என்றும் இலங்கை ஜனாதிபதியை இந்தியா வலியுறுத்த வேண்டும்.

இலங்கைத் தமிழர்களைப் பொறுத்தவரையில் விடுதலைப் புலிகள்தான் தங்களது ஏக பிரதிநிதிகள் என்ற நிலைமையில் அங்குள்ள தமிழர்கள் உள்ளனர்.

எனவே எந்தத் தீர்வானாலும் அது விடுதலைப் புலிகளுடன் மட்டுமே செய்து கொள்ள வேண்டும். அப்படி ஏற்படும் உடன்பாட்டை வெற்றிகரமாக அமுல்படுத்தும் கண்காணிப்புப் பொறுப்பை இந்தியா ஏற்க வேண்டும்.

இது மட்டும்தான் இலங்கை இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும். இதை இந்தியப் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருக்கிறேன். அவருக்குக் கடிதமும் எழுதியிருக்கிறேன் என்று ராமதாஸ் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.

# கிழக்கு சிங்கள முன்னணி திருமலையில் ஆர்ப்பாட்டம்!

## புலிகளை அழிக்க வேண்டுமாம்

திருகோணமலை —

விடுதலைப் புலிகளை நாட்டிலிருந்து இல்லாதொழிக்க வேண்டுமென்று கோரி கிழக்கு சிங்கள மக் கள் முன்னணி என்ற அமைப்பு திருகோணமலை மணிக்கூட்டுக் கோபுர முன்றலில் நேற்று ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியது.

நேற்று பகல் 11 மணியிலிருந்து 12 மணிவரை சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டப் பேரணி ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜயந்த விஜேசேகர தலைமையில் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டப் பேரணியின் இறுதியில் இடம்பெற்ற கூட்டத்தில் –

வடக்கு கிழக்கில் வாழும் சிங்கள மக்களுக்கு போதிய பாதுகாப்பில்லை, விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு படைகளில் இணைந்து போராடத் தயார், எமது பிரதேசத்தைப் பாதுகாப்பதற்கு அனைவரும் ஒன்றிணைவோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் அறைகூவல் விடுத்தனர். (04)

# மன்னாரில் கிரனேட் வீச்சு கிளைமோர்கள் மீட்பு!

கொழும்பு —

மன்னாரில் படையினர் மீது கடந்த புதன் கிழமை இரவு 9.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டது.

மன்னார் விளையாட்டு மைதானம் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ காவலரண் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. இதில் படையினர் எவரும் காயமடையவில்லை.

இதையடுத்து இராணுவத்தினர் மூர் வீதி, சின்னக்கடை, உப்புக்குளம் ஆகிய பகுதிகளில் பாரிய தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டதோடு, மன்னார் பஸ் நிலையப் பகுதியில் பயணித்தோர் மீது துப்பாக்கியால் சுட்டும், தாக்கியும் அடாவடித்தனம் புரிந்தனர்.

இந்தத் தாக்குதலை அடுத்து சந்தேகத்தின் பேரில் மூவர் கைதுசெய்யப்பட்டதாக படைத்தலைமையகம் தெரிவித்துள்ளது.

அதேவேளை மன்னாரில் படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கைகளில் மூன்று கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

கடந்த டிசெம்பர் 24 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் படையினர் மீது மேற்கொண்ட கிளைமோர் தாக்குதலை அடுத்து படையினரின் பாதுகாப்பு நடவடிக்கைகள் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், தேடுதல் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

மன்னார் சந்திவெளியில் கடற்படையினரால் ஒரு கிளைமோர் குண்டும், பறையனாலங்குளம் சந்தியில் இருந்து மூன்று கிலோமீற்றர் தூரத்தில் இரண்டு கிளைமோர் குண்டுகளும் மீட்கப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை மன்னாரில் மீனவர்கள் கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு கடந்த புதன்கிழமை முதல் கடற்படையினர் கடும் கட்டுப்பாடுகளை விதித்துள்ளனர்.

தற்போது 25 குதிரைவலு கொண்ட வெளியிணைப்பு இயந்திரங்களை தற்காலிகமாகப் பயன்படுத்துமாறும் ஆனால் வருங்காலத்தில் பயன்படுத்தக்கூடிய வகையில் 8 குதிரை வலுக்கொண்ட இயந்திரங்களை கொள்வனவு செய்யுமாறும் தெரிவித்துள்ள கடற்படையினர், காலை 6 மணிக்கு கடலுக்குச் சென்றால் மாலை 3 மணிக்கு திரும்பிவிட வேண்டுமெனவும், இவ்வாறு செல்லும் போது அடையாள அட்டைகளை கடற்படை முகாமில் ஒப்படைத்த பின் செல்லவேண்டும் எனவும், படகில் இருவர் மட்டுமே இருக்க வேண்டுமெனவும் தெரிவித்துள்ளனர்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்தவேண்டும்

## பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர்

கொழும்பு —

இலங்கையில் பயங்கரவாதத் தடைச் சட்டம் மீண்டும் அமுல்படுத்தப்பட வேண்டுமென்று பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் எச்.எம்.ஜி.பி.கொட்டகதெனிய தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது –

வடக்கு – கிழக்கில் இடம்பெற்றுவரும் கொலைச் சம்பவங்களைத் தடுப்பதற்கு போர் நிறுத்த உடன்படிக்கையை மீளாய்வு செய்வதுடன், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை மீண்டும் அமுல்படுத்த வேண்டும். இவற்றை அமுல்படுத்தினால் விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டு சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு உடனடியாக வருவார்கள்.

அத்துடன், நாட்டின் தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு போர் நிறுத்த உடன்படிக்கையை மாற்றியமைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. இந்த விடயம் குறித்து ஏனைய தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம். வடக்கு–கிழக்கில் படையினருக்கு எதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களுக்கு, பதில் தாக்குதல் மேற்கொள்வதற்கு இராணுவத்தினர் தயாராக இருக்கின்றனர்.

முக்கிய பொருளாதார மையங்களைத் தாக்குவதற்கு விடுதலைப் புலிகள் திட்டமிட்டிருக்கின்றனர். இராணுவப் புலனாய்வுத் துறையினரின் அறிக்கைகளிலிருந்து இந்த விடயம் தெரியவந்திருக்கிறது.

இந்தத் தகவலைத் தொடர்ந்து இராணுவத்தினரும், பொலிஸாரும் நாட்டின் பல்வேறு பாகங்களிலும் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதாகவும் பாதுகாப்பு அமைச்சின் ஆலோசகர் கொட்டகதெனிய மேலும் தெரிவித்தார்.

# இராணுவத் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி!

கொழும்பு —

இலங்கை இராணுவத்தின் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி கடந்த புதன்கிழமை பதவியேற்றார்.

இராணுவத்தின் இரண்டாவது நிலைப் பதவியான, தலைமை அதிகாரியாகப் பொறுப்பேற்றுள்ள மேஜர் ஜெனரல் நந்த மல்லவராச்சி கடைசியாகத் தொண்டர் படைகளில் தளபதியாகப் பதவி வகித்தவராவார்.

இராணுவத் தலைமையத்தில் நடைபெற்ற சமயச் சடங்குகளை அடுத்து இவர் தனது பதவியைப் பொறுப்பேற்றார்.

1971 ஏப்ரல் 26ஆம் திகதி இராணுவத்தில் இணைந்த இவர் திபத்தலாவ பயிற்சி முகாமில் பயிற்சி பெற்ற பின்னர் 1972 மே 25ஆம் திகதி 1வது இலகு காலாற் படை பற்றாலியனில் ஒரு அதிகாரியாக இணைத்துக் கொள்ளப்பட்டார்.

1981 ஏப்ரல் 26 இல் மேஜராக பதவி உயர்வு பெற்ற இவர், 1990இல் லெப். கேணலாகவும், 1992 இல் கேணலாகவும், 1994இல் பிரிகேடியராகவும், 1999 பெப்ரவரி 24இல் மேஜர் ஜெனரலாகவும் பதவி உயர்வு பெற்றார்.

சாவகச்சேரி பிரிகேட் தளபதியாகவும், 1997 இல் கொடிகாமம், கச்சாய், மீசாலை வடக்கு இணைப்பதிகாரியாகவும், வரணி 52 வது டிவிசன் பிரதி கட்டளை அதிகாரியாகவும் பணியாற்றிய இவர் மின்னேரியா, 23 வது டிவிசன் தளபதியாகவும், வன்னி மற்றும் கிழக்கு படைத்தலைமையக தளபதியாகவும், மற்றும் இராணுவத்தலைமையகத்தில் உயர்நிலை அதிகாரியாகவும் பதவிவகித்தார்.

இவர் இந்தியாவில் இளம் அதிகாரிகள் பயிற்சிநெறி, இளம் தளபதிகள் கற்கை நெறி, அதிகாரிகள் கல்லூரி பயிற்சி நெறி, சிரேஷ்ட தளபதிகள் கற்கை நெறி, தேசிய பாதுகாப்பு கற்கை நெறி ஆகியவற்றை இந்தியாவிலும், அமெரிக்காவில் அதிகாரிகளுக்கான மேலதிக காலாற் படை கற்கை நெறியையும் கற்ற இவர், சுவிட்சர்லாந்து, எகிப்து ஆகிய நாடுகளிலும் இராணுவப் பயிற்சியைப் பெற்றார்.

ரணவீர பதக்கம் என்ற உயர் விருது பெற்ற இவர் இங்கு காலாற்படையின் தளபதியாகவும் தொடர்ந்து பதவி வகிப்பார்.

# நோர்வேயின் சமாதான முயற்சிக்கு கனடாவும் பங்களிக்க வேண்டும் !

## கன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளர் தெரிவிப்பு

ரொரண்டோ —

நோர்வேயின் அனுசரணையுடன் இலங்கையில் நடைபெறும் சமாதான முயற்சிகளை ஆதரிக்கும் கனடா, இந்த நடவடிக்கையில் காத்திரமான பங்கை வகிக்க வேண்டும் என கனடிய கன்சர்வேட்டிவ் கட்சி முக்கியஸ்தர்கள் தெரிவித்தனர்.

கன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளர்களான றொண்டா தோமஸ், ஜிம் பிளகெற்றி, றிம் டொப்சன் ஆகியோரும் டர்காம் பிரதேச தமிழ்ப் பிரமுகர்களுக்குமிடையேயான புரிந்துணர்வுச் சந்திப்பு நேற்று முன்தினம் டர்காம் பிரதேசத்தில் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் இலங்கை இனப் பிரச்சினை தொடர்பான கட்சியின் நிலைப்பாடு குறித்து வினவப்பட்ட போது, நோர்வேயின் சமாதான முயற்சியைக் கனடியக் கன்சர்வேட்டிவ் கட்சி பூரணமாக ஆதரிப்பதாகவும், சர்வதேச நாடுகளின் ஆதரவுடன் இடம்பெறும். இந்தப் பேச்சு முயற்சியின் மூலம் இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும் என்பதுமே கனடியக் கன்சர் வேட்டிவ் கட்சியின் இலங்கை இனப்பிரச் சினை தொடர்பான நிலைப்பாடு எனவும் மேற்படி மூவரும் தெரிவித்தனர்.

கனடாவில் 3 லட்சம் தமிழர்கள் வாழ்கிறார்கள். எனவே கனடாவும் இந்தப் பேச்சு முயற்சியில் காத்திரமான பங்கை வகிக்க வேண்டும் என்பதைத் தாங் கள் உறுதியாக நம்புவதாகவும் பேச்சுவார்த்தையில் கனடாவின் நேரடிப்பங்கை தாங்கள் தமது கட்சியினூடாக வலியுறுத்துவோம் எனவும் அவர்கள் தெரிவித்தனர்.

கடந்தகாலத்தில் தமிழர் தரப்பு விவகாரத்தில் காட்டமான போக்கைக் கொண்டிருந்த இந்தக் கட்சி – தற்போது மென்போக்கு அணுகுமுறையைக் கடைப்பிடிக்க ஆரம்பித்துள்ளது என்பதோடு, இலங்கை இனப் பிரச்சினை தொடர்பிலான உண்மையான நிலையை உள்வாங்க ஆரம்பித்துள்ளது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

மறுசீரமைப்புக்கட்சி, அணிசேர் கட்சி, பழமைவாதக் கட்சி ஆகியவற்றின் கூட்டாக இரு வருடங்களுக்கு முன் உதயமான தற்போதைய கன்சர்வேட்டிவ் கட்சியானது புதிய பரிமாணம் எடுத்து வருகிறது. எனவே கனடியத் தமிழர்கள் அந்தக் கட்சியில் இணைந்து தம்மையும் கட்சியையும் வலுப்படுத்த வேண்டுமென அஜக்ஸ் தொகுதியின் வேட்பாளரான றொண்டா தோமஸ் கேட்டுக்கொண்டார்.

கன்சர்வேட்டிவ் கட்சியின் கொள்கைகள் பலவும் தமிழர்களின் கலாசாரத்துடன் ஒத்துப் போகின்றவை குடும்பம், கலாசாரம், பிள்ளை வளர்ப்பு போன்ற பல விடயங்களில் நிறையவே ஒத்துப்போகின்றன. தமிழினமும் கன்சர்வேட்டிவ் கட்சியும் தம்மிடையேயான உறவை உறுதியாக வளர்க்க வேண்டுமெனவும் பிக்கறிங் வேட்பாளரான ரிம் டொப்சன் தெரிவித்தார்.

சர்வதேச மயப்படுத்தப்பட்டுள்ள தமிழர்கள் பிரச்சினை பற்றிய மேலதிக விளக்கங்களைப் பெற்று அப்பிரச்சினை தொடர்பான பரிந்துரைகள் கட்சியின் மேலிடத்துக்குக் கொண்டு செல்ல முடியும் என நம்புவதாகவும் ஒசாவா பிரதேச வேட்பாளரான ஜிம் பிளகெற்றி தெரிவித்தார்.

கடந்த காலங்களில் கசப்பான அனுபவங்கள், தொடர்பாடல்கள் இடம்பெற்றிருக்கலாம். ஆனால் அவ்வாறு தெரிவிக்கப்பட்டவை அந்தக் காலத்துக்கே உகந்தவை. தற்போதைய கட்சித் தலைமையும், கட்சியும் சகல இன மக்களுடன் ஒன்றிணைந்து சேவையாற்ற முன்வந்துள்ளது என்பதை அங்கு கூடியிருந்த மக்களுக்கு அவர்கள் தெளிவுபடுத்தினர்.

# ஐ.நா.வில் தமிழீழக் கொடி பறக்கும்!

## சென்னை மாநாட்டில் வைகோ ஆவேசம்

சென்னை —

ஐ.நா.சபையில் விரைவிலே தமிழீழக்கொடி பறக்கும் என்று சென்னை ஈழத்தமிழர் பாதுகாப்பு மாநாட்டில் ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ ஆவேசமாக உரையாற்றினார்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த மாநாட்டில் பேசிய அவர் -

தமிழ்நாட்டின் வரலாற்றில் மறக்கமுடியாத முரசுகொட்டும் திருநாள் இது. ஆர்ப்பரிக்கும் ஆவேச உணர்ச்சிகளோடு இந்த மண்டபத்துக்குள்ளும் வெளியேயும் தன்மானத் தமிழர்களாய் திரண்டுள்ளீர்கள்.



பத்திரிகையாளர்களும் தொலைக்காட்சியாளர்களும், மத்திய மாநில உளவுத்துறையினரும், சுருக்கெழுத்தாளர்களும், எந்தக்காலத்திலும் இல்லாத அளவில் ஒரு பெரிய இடைவெளிக்குப் பின்னால் இங்கே கூடியிருக்கிறார்கள்.

தமிழர்களுடைய உணர்ச்சி. அது அழியாது. நீறு பூத்த நெருப்பாக இருக்கும். நாங்கள் கருத்துக்களைப் பேசுவதற்கு முன்பாக எங்களை விடுதலைப்புலிகளின் ஆதரவாளர்கள் என்று எண்ணிக்கொண்டு, ஒரு கருத்தை தங்களுக்குள் உருவாக்கிக்கொண்டு பத்தரிகையாளர்கள் பார்ப்பதால் பிரச்சினையின் இன்னொரு பக்கம், ஐம்பது ஆண்டு காலத்துக்கும் மேலான வரலாறு - தமிழர்களின் பக்கமுள்ள நியாயம் இருட்டடிப்புச் செய்யப்படுகின்றது.

இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தமிழர்கள் மீதான மனித உரிமை மீறல்களை, ஆவணங்களைத் துணைக்கு வைத்துக்கொண்டு எடுத்துவைத்த வாதங்கள் சிங்கள பேரினவாத அரசுகளுக்குச் சம்மட்டி அடியாக விழுந்தது, சவுக்கடியாய் இருந்தது, அப்படிப்பட்ட மனித உரிமைக்குக் குரல் கொடுத்தவர், சர்வதேச நாடுகளுக்குச் சென்று இலங்கைத் தீவில் சிங்கள தேசம் கட்டவிழ்த்துவிட்ட கொடுமைகளை, மனித உரிமைகளை உரத்துச் சொன்னவர் ஜோசப் பரராஜசிங்கம். இதுவரை இருந்த அரசுகள் அனைத்தையும் விட வஞ்சகத்துக்கு பேர்போன அரசு என்று சொல்லப்பட்ட சந்திரிகாவை விட கொடிய அரசை நடத்துகிறவர்தான் இந்த மகிந்த ராஜபக்ஷ.

1983 ஆம் ஆண்டு மதுரையில் நடைபெற்ற ஈழத்தமிழர் மாநாட்டை தொடக்கிவைத்து உரையாற்றும் வாய்ப்பைப் பெற்றிருந்தேன். அதேபோல் 22 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போது பேசுகிறேன். இந்த டிசெம்பர் மாதம் மட்டும் ஈழத்திலே நடைபெற்றிருக்கிற சம்பவங்களைச் சுட்டிக்காட்டுகிறேன். இதற்கு உலகம் என்ன பதில் சொல்லப்போகிறது? சர்வதேசம் என்ன பதில் சொல்லும்? நடுநிலையாளர்கள் என்ன பதில் சொல்வார்கள்?

டிசெம்பர் 17ஆம் நாள் இளையதம்பி தர்சினி என்கின்ற 20 வயது இளம் நங்கையை இலங்கைக் கடற்படையினர் கடத்திப் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி கொன்றுவிட்டு, கிணற்றிலே மிதந்துவிடும் என்பதால் கல்லைக் கட்டி கிணற்றிலே போட்டார்கள். உலகத்திலே எங்கும் நடக்காத இத்தகைய அக்கிரமங்களை இலங்கை இராணுவத்தினர் கடந்த காலங்களிலும் செய்தார்கள் என்பதை நினைவூட்டுகிறேன்.

நான் ஜெனீவாவில் மனித உரிமைகள் ஆணையத்திடம் ஈழத்தமிழர் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக மனுக்கொடுத்தபோதும் இதேகொடுமை கிருஷாந்தி என்ற இளம்பெண்ணிற்கு ஏற்பட்டது. அந்தப் பெண்ணைப் பாலியல் வல்லுறவுக்குட்படுத்திய பின்னர் இலங்கைக் கடற்படையினர் செய்த அக்கிரமத்தை அருமைச் சகோதரிகள் உள்ள இந்த மண்டபத்திலே என்னால் சொல்ல முடியாத அத்தகைய கொடுமை அது.

மானத்தையும், வீரத்தையும், பண்பாட்டையும் பாதுகாக்கும் கூட்டம்தான் ஈழத்திலே உள்ளது. இந்த விடயங்களை அவர்கள் எளிதிலே எடுத்துக்கொள்ள மாட்டார்கள். ஈழத்தில் இப்படிப்பட்ட ஆயுதப்போராட்டம் வருவதற்கே இத்தகைய வன்முறைகள்தான் அடிப்படை.

இளையதம்பி தர்சினிக்கு நேர்ந்த கொடூரத்தால் மக்கள் கொந்தளித்தார்கள். மக்களைத் தொடர்ந்து மாணவர்கள் கொந்தளித்தார்கள். நியாயங்கேட்க யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ் தலைமையிலே அமைதி ஊர்வலம் நடத்தப்பட்டபோது, இராணுவம் தடுத்துநிறுத்தி துப்பாக்கிச் சூடு நடாத்தி துணைவேந்தரை, பேராசிரியரை, மாணவர்களைத் தாக்கியது. 20 ஆம் திகதியன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்குள் பத்தாண்டு காலத்துக்குப் பின்னர் இராணுவம் உள்ளே நுழைந்தது.

வட்டுக்கோட்டையில் தந்தை செல்வா தமிழீழத் தமிழ்நாடு நிறைவேற்ற வேண்டும் என்று நிறைவேற்றிய தீர்மானத்தை இலங்கை நாடாளுமன்றத்திலே கொண்டுவந்தார்.

இலங்கை ஒரே நாடாக இருக்கவேண்டும் என்று இந்தியாவில் இருக்கிறவன் சொல்கிறான். இலங்கைத் தீவிலே தமிழீழம் அமைய வேண்டும் என்று சொல்பவர்களைப் பிரிவினைவாதிகள் என்று சொல்லும் மேதாவிகளைப் பாாத்துக் கேட்கிறேன்.

1999ஆம் ஆண்டு இந்தோனேசியாவிலிருந்து கிழக்குத் தீமோர் பிரிந்து செல்வதற்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்டபோது இதை நீங்கள் ஏன் சொல்லவில்லை?

ஒரு நாட்டின் இறையாண்மையைத் தீர்மானிப்பது யார்? அந்நாட்டு மக்கள். ஒருமைப்பாடு என்பது என்ன? அங்கே தமிழீழத் தனிநாடு வந்தால் இங்கே தனித் தமிழ்நாடு வந்துவிடும் என்று பேசுகிறார்கள்.

தனிநாடு அமைவது தொடர்பான கருத்துக்களைப் பேசுவதற்கு நீங்கள் யார்? உலகத்துக்கு நாட்டாமைகளா?

அப்படியானால் பாகிஸ்தானிலிருந்து வங்க தேசத்தைப் பிரித்து உலக வரைபடத்திலே வங்கதேசத்தை உருவாக்கிக் கொடுக்க இந்திய இராணுவம் சென்றதே! அப்போது எங்கே போனீர்கள்? வாதாட வாருங்கள், எங்கள் பக்கம் நியாயமிருக்கிறது.

ஆயுதப்போராட்டம் ஏன் வந்ததங்கே? யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது. நடுவீதிகளிலே தமிழர்கள் வெட்டிக் கொல்லப்பட்டார்கள். தமிழர்களின் மாமிசம் கிடைக்கும் என்று தொங்கவிட்டார்கள்! அதனால்தான் தங்களைப் பாதுகாக்க ஆயுதப்போராட்டத்தைத் தொடங்கினார்கள். அதேகாலகட்டத்தில் அமெரிக்காவில் 1981 மாசாசூட்டெஸ் மாகாணத்திலே ஈழத்தை ஆதரித்து ஈழத்திருநாள் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கையில் ஒப்பந்தம் செய்யும்போதெல்லாம் நயவஞ்சகமாக அதைக் கிழித்தெறிகிறவர்கள் சிங்களவர்கள். 1983 இல் வெலிக்கடைச் சிறையில் கோரமாகத் தமிழர்கள் கொல்லப்பட்டனர். அந்தக் காலகட்டத்தில் தமிழகமே கொதித்தெழுந்தது.



ஈழத்திலே இனப்படுகொலை நடக்கிறதென்று நாங்கள் மட்டும் சொல்லவில்லை. அன்று நாடாளுமன்றத்திலே இந்திராகாந்தி அம்மையாரும் தெரிவித்தார். வடக்கு - கிழக்கு தமிழ் மக்கள், அந்தத் தீவின் பூர்வ குடித் தமிழ் மக்கள் என்றார்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் அடிப்படைச் சுயாட்சி உரிமையை நிராகரித்து, தமிழர் தாயகமே இல்லையென்றார். தமிழரின் பூர்வீகப் பகுதிகளில் இருந்து சிங்களக் குடியேற்றங்களை அகற்றக் கோரிய திலீபன் உண்ணாவிரதம் இருந்து நினைவு திரும்பாமலேயே மறைந்துபோனார்.

அன்று ஜெயவர்த்தனா நயவஞ்சகமாக இந்தியாவுடன் ஒப்பந்தம் செய்துகொண்டார். இன்று மகிந்த ராஜபக்ஷ ஒப்பந்தம் செய்துகொள்ளச் சொல்லுகிறார்.

தமிழர்களின் அவலத்தை அகிலத்துக்குச் சொல்ல ஆராய்ச்சி மணியடித்தது நோர்வே நாடுதானே. அவர்கள்தானே இத்தனை ஆண்டு காலமும் குரல்கொடுத்தார்கள். இரு சிறுநீரகங்களும் செயலிழந்துபோன பாலசிங்கத்தை காப்பாற்றியது நோர்வே. அவர்களுக்குத் தமிழர்கள் நன்றிக்கடன் பட்டவர்கள்.

விடுதலைப்புலிகள் போர்நிறுத்தத்தை மீறுவதாகச் சொல்லுகிறார்கள். போர்நிறுத்தத்தை முதலிலே அறிவித்தது யார்? விடுதலைப்புலிகள் தானே.

2000 ஆம் ஆண்டு, 2001 ஆம்ஆண்டு போர்நிறுத்தத்தை விடுதலைப் புலிகள் அறிவித்தனர்.

சிங்கள இராணுவத்தோடு இனி சண்டை போட முடியாதென்றா அறிவித்தார்கள், இல்லை. நாங்கள் பலம் வாய்ந்தவர்கள் என்று ஆனையிறவிலே நிரூபித்துவிட்டு உலகயுத்த சரித்திரத்திலே மகத்தான சாதனைகளைச் செய்தவர்கள். ஆம்! பொதுமக்கள் ஒருவருக்குக்கூட எதுவித ஆபத்தும் ஏற்படாமல் 27 விமானங்களை கட்டுநாயக்காவில் அழித்துவிட்டு நாங்கள் பலமானவர்கள் - போரினால் வெல்ல முடியாதவர்கள் என்று காட்டிவிட்டு போர்நிறுத்தம் செய்தார்கள்.

ஆனால் போர்நிறுத்தத்தை ஏற்பதாக இலங்கை அரசு அறிவித்ததா? போர்நிறுத்தத் தைத் தொடர்ந்து நீடித்தபிறகே கடைசி நேரத் தில் 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் நாள் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதாக அறிவித்தது. இந்தப் போர்நிறுத்தம் விடுதலைப்புலிகளால் கொண்டுவரப்பட்டது. சர்வதேச சமூகத்தின் முன்பாக குற்றவாளிக் கூண்டிலே நிற்க வேண்டிய நிலையில் போர்நிறுத்த ஒப்பந்தத்தில் அரசு கையெழுத்திட்டது.

அதன் பின்னர் பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டன. தாய்லாந்திலே விடுதலைப்புலிகளின் பிரதிநிதி அருமைச் சகோதரர் அன்ரன் பாலசிங்கத்துக்கு செங்கம்பள வரவேற்பளித்தார்கள். என்ற செய்தியை ஐ.பி.சி வானொலி மூலமாக சிறைக்குள்ளிருந்து கேட்டேன். தாய்லாந்து ஜனாதிபதி நம்முடைய பாலசிங்கத்தை 'யுவர் எக்செலன்சி' என்று அழைத்து செங் கம்பள வரவேற்பளித்தார். இதை நான் வானொலியில் கேட்டபோது எனக்கு எப்படி இருந்திருக்கும்?

தமிழர்களின் புனர்வாழ்வுக்கும், மறுசீரமைப்புக்கும் 4 பில்லியன் டொலரை சர்வதேச சமூகம் அளிக்க முன்வந்தது. முதல் கட்டமாக 18 ஆயிரம் கோடி ரூபாவில் ரூபா 380 கோடியை ஒரே கட்டமாக அளித்தார்கள்.


இந்தப் புனர்வாழ்வுப் பணிகளை இடைக்கால நிர்வாக அரசு இல்லாமல் எப்படி மேற்கொள்ள முடியும்?

ஏற்கனவே தங்களது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் விடுதலைப்புலிகள் ஆட்சி நடத்துகிறார்கள். உலக நாட்டிலே எந்த நாட்டிலும் இல்லாத சிறப்பான நிர்வாகம் ஈழத்திலே நடைபெறுகிறது. நல்ல அரசு நடத்தவேண்டுமானால், அங்கு போய் பாடம் கற்றுக்கொண்டு வரலாம்.

அந்தச் சூழ்நிலையில் நாடாளுமன்றத்தைக் கலைத்து சமூகத்தீர்வைக் கலைத்தது யார்? சிங்களவர்கள் தானே. அப்போது விடுதலைப் புலிகள் வன்முறைகளில் ஈடுபடுவதாக இங்கே சொல்லுகிற பத்திரிகையாளர்களைப் பார்த்துக் கேட்கிறேன். தமிழர் இணையத்தளத்தை தன் நுட்பமான நுழைபுலத்தால் நடத்திய தர்மரட்ணம் சிவராம் என்கிற தராக்கியை நடுரோட்டில் இழுத்துப்போட்டுச் சுட்டுக்கொன்றார்களே! உலகம் ஏன் வாய் திறக்கவில்லை? பத்திரிகையாளர்களான ஐயாத்துரை நடேசன், மயில்வாகனம் நிமலராஜன் இவர்களெல்லாம் தமிழர்களை ஆதரித்ததற்காகச் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்! இந்தப் படுகொலைகளெல்லாம் போர்நிறுத்தம் அறிவித்த பிறகுதானே நடந்தது.

விடுதலைப்புலிகளின் தளபதி கேணல் சங்கர், கௌசல்யன் என பலரும் சுட்டுக்கொல்லப்பட்டார்களே! சிட்டுக்குருவிகளைப்போல் விடுதலைப்புலிகளிடம் சிறிய விமானங்கள் இருப்பது இந்தியாவுக்கு ஆபத்தாம். நீங்கள் கொடுக்கப்போகிற ராடர்கள் யாரைக் கண்காணிக்க? நீங்கள் கொடுக்கிற ஆயுதங்களை வைத்துக்கொண்டு சிங்களவர்கள் யாருடன் சண்டைக்குப் போகிறார்கள்?

சீனாக்காரன், பாகிஸ்தானியக்காரன் ஆயுதங்களைத் தருவதால் நீங்களும் ஆயுதம் தருவதாகச் சொல்கிறீர்களே! சீனாக்காரனும் பாகிஸ்தானியக்காரனுமா அங்கே வாழ்கிறார்கள்? எங்கள் தமிழர்களல்லவா வாழ்கிறார்கள். சிங்கள இராணுவத்துக்காக ராடர்களைக் கொடுக்கிறீர்களே, அந்த இராணுவத்தைக்கொண்டு எங்கள் தமிழர்கள் கொல்லப்படுகிறபோது அந்தத் தமிழர்களுக்கு நீங்கள் பாதுகாப்பளிக்க வேண்டாமா? இந்திய இலங்கை இராணுவக் கூட்டுறவு ஒப்பந்தம் தொடர்பாக புதிய பிரதமர் மன்மோகன்சிங்குடன் நான் பலமுறை நேரில் சந்தித்து மனுக்கொடுத்திருக்கிறேன். சிங்கள அரசுக்கு உதவக்கூடாது என்று பலமுறை நாம் வலியுறுத்தினோம். அதையும் மீறி செய்திகள் வந்த போதெல்லாம் நான் மன்மோகன்சிங்கை வலியுறுத்தினேன். இவ்வளவு நிலைமைகளுக்குப் பிறகும் இந்தியா பேச்சுவார்த்தைக்கு உதவ வேண்டும் என்று சிங்களவர் சொல்கிறபோது நோர்வேதான் உதவவேண்டும் என்று நாங்கள் வலியுறுத்தினோம்.



இந்தியாவை சிங்களவர்கள் முன்நிறுத்திக் காட்டுவதே தங்களுக்கு இந்தியா சார்பாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்ளத்தான். அங்கே போர் மூளக்கூடாது என்றுதான் விரும்புகிறோம். அங்கே விவசாயிகளுக்கு, மீனவர்களுக்கு வாழ்வுரிமை இல்லை. அங்கேயுள்ள தமிழர் நாதியற்றுப் போகவில்லை. தாயகம் முழுதும் தமிழர் உள்ளார்கள். ஈழத்திலே உள்ள தமிழர்கள் வதைக்கப்பட்டால் தமிழர்களை ஒடுக்கிவிடலாம் என்று சிங்களவர்கள் எண்ணிவிடுவார்களேயானால் நயவஞ்சகமாக இந்தியாவைத் தந்திரமாகத் தக்கவைத்துக் கொள்ளலாம் என்று எண்ணினால் அது ஒருக்காலும் நடக்காது.



இந்த உணர்வு தமிழ்நாட்டிலே நீறுபூத்த நெருப்பாக உள்ளது. கருத்துக்கணிப்பு எடுக்கிறார்கள். ஈழத்தமிழர் ஆதரவு பற்றி ஆனையிறவுப்போரிலே வெற்றிபெற்றபோது கருத்துக் கணிப்பு எடுத்திருந்தால் 90 வீதமான மக்கள் வாழ்த்துச் சொல்லியிருப்பார்கள். இனத்துக்காரன், சகோதரன் களத்திலே நிற்கிறபோது ஆதரவு தானாகவே வரும்.

சிங்கள அரசின் வஞ்சக வலையில் இந்திய அரசு ஒருபோதும் விழாது என்று நம்புகிறோம். தமிழர்கள் மீது இனப்படுகொலையை ஏவிவிடலாம் என எண்ணினால் நாம் அனுமதிக்க மாட்டோம். ஈழத்தமிழர்களுக்கு நாம் உறுதுணையாக இருப்போம்.

அவர்கள் வீட்டைவிட்டுப் புறப்படும்போதே சாவைச் சந்திப்பது என்று தீர்மானிக்கிற தீரர்கள். மரணத்தை தங்கள் கழுத்திலே மாலைகளாகத் தொங்கவிட்டுள்ளார்கள். மண்ணின் மானம் காக்க வீரர்களும், வீராங்கனைகளும் தங்களையே அர்ப்பணித்துள்ளார்கள். மொத்தத் தமிழர்களும் அவர்கள்பக்கம் இருக்கிறார்கள். தேர்தலில் வாக்களிக்க வேண்டாம் என்று தடுத்தார்களா? ஒரு சதவீதத்துக்குமேல் வாக்குகள் விழவில்லையே? இங்குள்ள தமிழர்கள் உணர்வும் அதுதான். எங்கள் கடமையைச் செய்வோம்.

இலங்கைக்கு எந்த உதவியும் நீங்கள் செய்யக்கூடாது. ஆயுதங்களை, ராடர்களைக் கொடுக்காதீர்கள். பலாலி விமானத் தளத்தைப் பழுது பார்க்காதீர்கள்.

கொடுத்தால் என்ன ஆயிற்று? யார் என்ன



செய்யமுடியும் என நினைக்காதீர்கள். இங்கே இருக்கிற இளைஞர்கள் வைகோவைப்போல் அமைதியாக இருப்பவர்கள் அல்ல என்று எச்சரிக்கிறேன். இதனால் ஏற்படக்கூடிய உணர்வு - இங்கே கூப்பிடும் தூரத்தில்தான் இருக்கிறது மக்கள் போர்க்குழு என்ற அமைப்பு. இந்த இளைஞர்களின் இதயத்தில் பெற்றோலை ஊற்றி எரியூட்டாதீர்கள். தங்கள் இனத்துக்கு ஏற்படும் அநீதிகண்டு அவர்கள் கொதித்தால் மக்கள் போர்க்குழுக்கள் இங்கே உருவாகிவிடக்கூடும். நான் வன்முறையாளன் அல்ல.

கொசாவோவுக்குக் குரல் கொடுக்கிறீர்கள், மதத்துக்காகக் குரல்கொடுக்கிறீர்கள், எங்கள் இனத்துக்காக நாங்கள் குரல்கொடுக்கிறோம். வன்முறை இங்கே வரக்கூடாது. அதை நீங்கள் விதைத்துவிடக்கூடாது. எதிர்காலத்திலே வன்முறை விதைகளைத் தூவிவிடாதீர்கள். தீவிரவாத உணர்வு வளர இலட்சம்பேர் தேவையில்லை. ஆயிரம் பேர் போதுமே. எச்சரிக்க வேண்டிய கடமை எங்களுக்கு உண்டு.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மன்மோகன் சிங் அரசுக்கு முழு ஆதரவளிக்கிறோம், மதிக்கிறோம். தமிழர்களால் உருவாக்கப்பட்ட - 40 நாடாளுமன்ற உறுப்பினர்களால் உருவாக்கப்பட்ட இந்திய அரசு தமிழினத்துக்குக் கேடு செய்துவிடக்கூடாது என்பதற்காக இந்தத் தீர்மானத்தை முன்வைக்கிறோம். ஐ.நா.சபையிலே புதிய புதிய கொடிகள் பறக்கின்றன. எங்கள் தமிழீழக் கொடி அங்கே பறக்கும். தமிழீழம் விரைவில் மலரும் எனத் தெரிவித்தார் வைகோ. இந்தப் பொதுக்கூட்டத்திற்கு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் முன்னிலை வகித்தார்.

# நீதிபதியின் நியாயமான தீர்ப்பு

நேர்மை தவறாது தீர்ப்பு வழங்குவதில் திறமை பெற்ற நீதிபதியொருவர் அல்ஜீரியா நாட்டிலிருந்தார். அவர் பற்றி மக்கள் கூறுவதைக் கேட்ட, அந்த நாட்டு மன்னன் பவக்காஸ் அவை சரியானதா எனக் கண்டறிய வியாபாரி போல வேடமிட்டு நீதிபதியிருந்த நகரை நோக்கிக் குதிரையில் புறப்பட்டார். பிரதான நகர் வாயிலருகே, ஒரு ஊனமுற்ற முடவன் பவக்காஸிடம் பிச்சை கேட்டுத் தொந்தரவு செய்யவே, அவனுக்குப் பணத்தைக் கொடுத்துவிட்டுப் பயணத்தை ஆரம்பிக்க ஆயத்தமானவுடன், தன்னையும் சதுக்கத்துக்கு குதிரையிலேற்றிக் கொண்டு செல்லுமாறு அடம்பிடித்தான். அங்கு நின்றால் குதிரைகளும் ஒட்டகங்களும் தன்னைக் கொன்று விடும் என்றான்.

அவனைக் குதிரையிலேற்றிக் கொண்டு சென்று, அவன் இறங்குவதாகக் கூறிய இடத்தை அடைந்ததும் குதிரையை நிறுத்தி இறங்கி விடும்படி கூறினார். ஆனால் முடவன் குதிரையிலிருந்து இறங்க மறுத்தான். இது என் குதிரையாயிற்றே! ஏன் இறங்க வேண்டும்? என்று அதட்டினான் முடவன். உங்களால் கொடுக்கமுடியா விட்டால் நீதிபதியிடம் போய் நீதி கேட்போம் என்றான். அதையடுத்து இருவரும் நீதிபதியிடம் சென்றனர்.



நன்றி : ஜலன்ட்

அங்கே வேறு பலரது தீர்ப்புகளும் வழங்கப் படவிருந்ததால் தமது முறைக்காகக் காத்திருந்தனர். அப்போது கல்வியில் புலமை பெற்ற ஒருவருக்கும், விவசாயிக்குமிடையில் விசாரணை நடைபெற்றது. ஒரு பெண்ணை இருவரும் தத்தமது மனைவி என்று வாதிட்டுக் கொண்டிருந்தனர். அந்தப் பெண்ணை என்னுடன் விட்டுவிட்டு நாளைக் காலையில் வாருங்கள் என்று அனுப்பினார் நீதிபதி.

அவர்களைத் தொடர்ந்து, இறைச்சி விற்பனையாளனும், எண்ணெய் விற்பனையாளனும் உள்ளே வரவழைக்கப்பட்டனர். இறைச்சி விற்பனையாளனின் கை இரத்த நிறமாகவும், எண்ணெய் விற்பனையாளனின் கை எண்ணெய் தோய்ந்ததாகவும் காணப்பட்டது. தன் கையில் பணத்தைப் பிடித்தவாறு இறைச்சி விற்பனையாளனும், இறைச்சி விற்பனையாளனின் கையைப் எண்ணெய் விற்பனையாளனும் பிடித்துக்கொண்டு வந்தனர்.

ஐயா, இந்த மனிதனிடம் எண்ணெய் வாங்கினேன் பணத்தைக் கொடுப்பதற்காக என் பணப்பையை இழுத்தெடுத்தவுடன் என்னைப் பிடித்துப் பணத்தை அப்படியே பறித்தெடுக்க முயன்றான். என் பணப் பை என் கையிலும், என் கையை அவன் பிடித்தபடியும் தங்களிடம் நீதி கேட்க வந்திருக்கிறோம். அந்தப் பணம் என்னுடையது. அவனே திருட முயன்றவன் என்றான்.

அவன் சொல்வது உண்மையல்ல. என்னிடம் எண்ணெய் வாங்க வந்த போது, ஒரு குவளையில் ஊற்றி நிரப்பியபின் பணத்தைத் தந்தான். நான் அதை வாங்கிப் பெட்டியில் போடும்போது எடுத்துக் கொண்டு ஓட முயன்றவனின் கையை வலுவாகப் பிடித்து தங்களிடம் கொண்டு வந்தேன் என்றான் எண்ணெய் வியாபாரி.

சில கணம் சிந்தித்த நீதிபதி, பணத்தை என்னிடம் ஒப்படைத்துவிட்டு நாளைக் காலையில் வாருங்கள் என்றார். இப்போது பவக்காஸ் மற்றும் முடவனது முறை வந்தது. நடைபெற்றவைகளையெல்லாம் மதிப்பீடு செய்து கொண்டிருந்த பவக்காஸையும், முடவனையும் நீதிபதி அழைத்து விசாரணை செய்தார். அதற்கு முடவன்.

ஐயா, நான் என் குதிரையில் நகரினூடாகப் பயணம் செய்தபோது, இந்த வர்த்தகர் என்னை வழிமறித்து தானும் வருவதாகக் கூறி, அதில் ஏறிக்கொண்டார். இறங்க வேண்டிய இடம் வந்து, இறங்கக் கோரியும் இறங்காமல் அது தன்னுடைய குதிரை என்று வாதாடினார் என்றான்.

நீதிபதியும் ஒரு கணம் ஆழ்ந்து சிந்தித்து, குதிரை என்னிடம் இருக்கட்டும் நாளை காலையில் வாருங்கள் என்றார்.

மறுநாள் நீதிபதியின் தீர்ப்பைக் கேட்பதற்காக அவரின் இல்லத்தில் அனேகர் குழுமி நின்றனர்.

முதலாவதாகக் கல்விமான் - விவசாயி சம்பந்தப்பட்ட பிரச்சினைக்குத் தீர்வுகாணும் வகையில், அந்தப்பெண் கல்விமானுக்கே சொந்தமான மனைவி என்று தீர்ப்பளிக்கப்பட்டது. விவசாயிக்கு 50 சவுக்கடிகள் வழங்க உத்தரவிடப்பட்டது.

இரண்டாவதாக, இறைச்சி விற்பனையாளன் அழைக்கப்பட்டு பணம் அவனுக்குரிய தென்று தீர்ப்பளிக்கப்பட்டது. எண்ணெய் வியாபாரிக்கு 50 சவுக்கடிகள் கொடுக்க நீதிபதி ஆணையிட்டார். இப்போது பவக்காஸ், முடவன் பற்றிய பிரச்சினை வந்தது.

20 குதிரைகள் வரிசையாக நிறுத்தப்பட்டுள்ள இடத்தில் வந்து உங்கள் குதிரையைச் சரியாகக் காண்பிக்க முடியுமா? எனப் பவக்காஸிடமும், முடவனிடமும் கேட்டதற்கு இருவரும் ஆம் என்றனர். முதலில் பவக்காஸைத் தனியாக அழைத்துச் சென்ற நீதிபதியிடம் தன் குதிரையை அவர் அடையாளம் காட்டினார்.

அதேபோல, பவக்காஸ் சென்றபின் முடவன் அழைக்கப்பட்டு குதிரையைக் காண்பிக்குமாறு கேட்கப்பட்டபோது, அதே குதிரையையே அவனும் தொட்டுக் காட்டினான்.

தன் இருக்கையில் இருந்தவாறே, பவக்காஸை அழைத்த நீதிபதி குதிரை உன்னுடையதே. எடுத்துக் கொள் என்றார். முடவன் 50 கசையடிகளைத் தாங்க முடியாமல் அலறினான்.

தீர்ப்புகள் முடிந்ததும், அனைவரும் சென்றுவிட்டனர். நீதிபதியைத் தொடர்ந்து சென்ற பவக்காஸ் தனியாக அவரை இல்லத்தில் சந்தித்தார்.

என்ன விடயம்? என் தீர்ப்பில் மகிழ்ச்சியடையவில்லையா நீங்கள்? என வினவிய நீதிபதியிடம், உங்கள் தீர்ப்புகள் திருப்தியாக இருந்தன. ஆனால், அந்தப் பெண் கல்விமானுக்குரியவள், விவசாயிக்கல்ல எனவும், பணம் இறைச்சி வியாபாரிக்குரியது, எண்ணெய் வியாபாரிக்கல்ல எனவும், குதிரை எனக்கே சொந்தமானது, முடவனுக்கல்ல என்பதையெல்லாம் எப்படிக் கண்டு பிடித்தீர்கள். இதை அறியவே வந்தேன் என்றார் பவக்காஸ்

குறுகிய வாயுள்ள, தொட்டு எழுதும் பேனா மைக் குப்பிக்குள் மையை ஊற்றுவதற்கு அந்தப் பெண்ணை அழைத்தேன். அவள் மைக் குப்பியை எடுத்து விரைவாகக் கழுவிச் சுத்தம் செய்தபின், மிகப் பொறுமையாகவும், நிதானமாகவும் ஊற்றிய விதம் கல்விமானின் மனைவி என்பதை எளிதாக்கியது. விவசாயியின் மனைவியால் அப்படிச் செய்திருக்க முடியாது.

அடுத்து, தண்ணீர்க்கோப்பைக்குள் பணத்தைப் போட்டு காலையில் பார்த்தபோது நீரில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. அதாவது எந்தவித எண்ணெய்த்துளிகளும் மிதக்கவில்லை. எண்ணெய் வியாபாரியினதாக இருந்தால் கையிலிருக்கும் எண்ணெய்க்கறை பணத்தில் படிந்திருக்கும் நீரிலும் மிதந்திருக்கும் ஆகவே பணம் இறைச்சி வியாபாரியினுடையதுதான்.

இருவரும் ஒரே குதிரையைக் காண்பித்தபோது இருவரையும் தனித்தனியாகத்தான் அழைத்தேன். நீங்கள் குதிரையை அண்மித்ததும், அது தன் தலையை ஆட்டிஉங்களை நோக்கி வரமுயன்றது. ஆனால் முடவன் அதைத் தன்னுடையது எனத் தொட்டபோது காலை உயர்த்தியும், காதுகளைத் தட்டையாகவும் வைத்து குதூகலமின்றிக் காணப்பட்டது. நீங்களே அதன் சொந்தக்காரனென அது காண்பித்துவிட்டது என்றார்.

அப்போது பவக்காஸ், நான் வியாபாரியல்ல இந்த நாட்டு அரசன் பவக்காஸ். தீர்ப்பு வழங்குவதில் வல்லவர் என மக்களெல்லாம் உங்களைப் பற்றிக் கூறியதைக் கேட்டு, அது உண்மையா என அறிவதற்காக வந்தேன். நேரில் உங்கள் திறமையைக் கண்டு ஆச்சரியமடைகிறேன். நீங்கள் விவேகமுள்ள நீதிபதிதான். உங்களுக்கு என் பரிசு காத்திருக்கிறது எதையும் கேட்கலாம் என்ற அரசனிடம், எனக்கு எதுவும் தேவையில்லை என மறுத்துவிட்டார் நீதிபதி.





# புதிய ஆண்டு வருகிறது

புதிய ஆண்டு வருகிறது
புதுமைகள் பலவாய் வந்திடுமோ?
பழைய ஆண்டு கழிகிறது
பகைமைகள் இல்லா தழிந்திடுமோ?

புத்தாம் ஆடைகள் அணிந்திடுவோம்
புனிதமான மனம் வருமோ?
உறவுகள் கூடி மகிழ்ந்திடுவோம்
உறுதி எமக்குள் மலர்ந்திடுமோ?

புதிய ஆண்டே வருகவென்று
புகழ்ந்து வாழ்த்துக் கூறுகின்றோம்
பூமியில் பிறந்த அனைவருமே
சமமாம் என்று கொள்வோமோ?

இயேசு பிரானும் உயிர்த்தாரே
இரட்சித்திடவே உலகோரை
நாங்கள் உயிர்ப்பது எப்போது
அடிமை வாழ்வின் தளைவிட்டு.

-மாருதி.



# புதிய உலகம்

புதிய உலகம் தானாக வராது. எம்மால்தான் அது ஆகவேண்டும். அதற்கு நாம் எல்லோரும் நல்லவர்களாக இருக்க வேண்டும். நல்ல செயல்களைப் புரிய வேண்டும். எல்லோரிடத்தும் அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும். தன்னைப்போல் பிறரை நேசிக்கப் பழக வேண்டும். தனக்கு நேர்ந்த துன்பம் பிறருக்கு நேராதிருக்கப் பாடுபட வேண்டும். நேர்மையான செயல்களைத் துணிவோடு செய்ய முனைய வேண்டும். மற்றவர்கள் தன்னோடு இணைந்துகொள்ள வேண்டுமென விரும்புவதுபோல தானும் மற்றவர்களோடு சேர்ந்துகொள்ளப் பழகவேண்டும். அப்போதுதான் புதிய உலகம் ஒன்று எமக்குமுன்னே உருண்டோடும்... வாழ்வும் செழித்து ஓங்கும்.

-கிருபா.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா? அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந்தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.

இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது. நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.

கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.

உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந்தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் விடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

இளந்தேனீக்கள் கழகம்
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................

திகதி ............ ஒப்பம் ............

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் ............ பெற்றோர் ஒப்பம் ............

## இளந்தேனீக்கள் கழக அங்கத்தவர்கள்

பெயர் :- நாகரத்தினம் கரிதரன்
தரம் :- 04
பாடசாலை :- யா/உடுப்பிட்டி அ.மி.கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், T.V பார்த்தல்.



பெயர் :- விஜிதா அரியநாயகம்
தரம் :- 07
பாடசாலை :- கிளிநொச்சி பாரதி வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- கணிதத்துறை.



பெயர் :- தாட்சாயணி கந்தசாமி
தரம் :- 08
பாடசாலை :- யா/அச்சுவேலி மத்திய கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- பத்திரிகை வாசித்தல், வீட்டுத்தோட்டம் பராமரித்தல்.

பெயர் :- கிளியோபற்றா.ச
தரம் :- 08
பாடசாலை :- யா/புனித தெரேசாள் மகளிர் கல்லூரி.
ஆர்வமுள்ள துறைகள் :- கதைப்புத்தகம் வாசித்தல், வானொலி கேட்டல்.

பெயர் :- நடேசலிங்கம் சுரேஸ்
தரம் :- 10
பாடசாலை :- யா/மீசாலை விக்கினேஸ்வரா மகா வித்தியாலயம்.
ஆர்வமுள்ள துறைகள் :- கல்வித்துறை, விளையாட்டுத்துறை.

## அனகொண்டா

உலகில் வாழும் பாம்பு இனங்களில் மிகப் பெரியது அனகொண்டா எனப்படும் பாம்பாகும். மிகச் சக்திவாய்ந்த, மிக நீளமான, அதி நிறைகூடியது இது. இதன் நீளம் ஏறத்தாழ 37 அடிகள். இதன் நிறை 550 இறாத்தல்கள் மற்றும் 30 சென்றி மீற்றர் விட்ட முடைய இந்தப் பாம்பு தண்ணீரை அண்டிய அல்லது தண்ணீருக்குள் மறைந்திருந்து முதலைக்குட்டிகள், நீர்ப்பறவைகள்,



மற்றும் சிறுத்தைகளையும், இளம் பராயத்து மனிதர்களையும் கூட இரையாக்கிக் கொள்வதற்காகக் காத்திருக்கின்றன. தண்ணீருக்குயில் உடலை மறைத்துக்கொண்டும், தலையையும் குறிப்பாகத் தன் நாசியையும் தயார்ப்படுத்திக்கொண்டும் நீரருந்த வரும் விலங்குகளைப் பிடித்து வளைத்து நசுக்கிக் கொன்று இரையாக்கிவிடுகிறது. இந்தப் பாம்பு தென் அமெரிக்காவின் அமேசன் காடுகளில் காணப்படுகிறது.





## அத்துமீறாத ஆசை ஆபத்தானதே

தனது சகோதரர்களால் துரத்தப்பட்ட வாத்துக் குஞ்சொன்று புற்தரையில் அமர்ந்து சோர்ந்து போய் அழுது கொண்டிருந்தது.

அந்த வழியாக கீரியொன்று வந்துகொண்டிருந்தது. வாத்துக்குஞ்சு அழுவதைப் பார்த்து "என்ன இளைஞனே! பார்ப்பதற்கு இளவரசனைப்போல இருக்கிறாய். உனது பதவியைப் பறிப்பதற்கு யாரோ சதிசெய்து விட்டார்களோ? என்ன நடந்தது?" என்று வினாவியது.



"ஐயா! நீங்கள் சொல்வது உண்மை தான். எனது சகோதரர்கள் எனக்குத் துரோகம் செய்துவிட்டார்கள். என்னை அடித்துத் துரத்திவிட்டார்கள்" என்றது.

இப்பொழுது வாத்துக்குஞ்சு தனியனாகி இருப்பதைக் கீரிப்பிள்ளை உணர்ந்து கொண்டது. சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்பியது.

"இளவரசனே! நீ எதற்காகப் பயப்பட வேண்டும். ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். உனக்கான சகல சுகபோகங்களையும் நான் பெற்றுத் தருகிறேன். அவர்களை ஒரு கை பார்த்து விடுகிறேன். இப்பொழுது அவர்கள் இருக்கும் இடத்தை எனக்குக் காட்டு" என்று இதமாகக் கூறியது.

வாத்துக் குஞ்சு தனது இறக்கைகளை விசிறியபடி இராஜநடை நடந்தது. தனது சிம்மாசனத்தைக் கற்பனை செய்தபடி அசைந்து அசைந்து தனது சகோதரர்களின் இருப்பிடத்தை நோக்கி நடந்தது.

சிறிது தூரம் தான் நடந்திருக்கலாம். இராஜநடை நடந்த வாத்துக்குஞ்சின்மீது கீரிப்பிள்ளை ஒரே தாவலாகத் தாவி அதைக் கவ்வியது.

பயத்தினால் நடுங்கிய வாத்துக்குஞ்சு கீரிப்பிள்ளையை ஏதேதோ பேசவேண்டும் என்று வாயைத் திறந்தது. ஆனால் கீரியின் பிடிக்குள் அது வலுவாக இறுகிப் போயிருந்தது. அதனால் அசைய க்கூட முடியவில்லை.

கீரிப்பிள்ளை வாத்துக்குஞ்சைப் பார்த்துச் சிரித்தபடி சொன்னது. "அற்ப பிராணியே! நான் இதுவரை உன்னோடு விளையாடிப் பொழுதைக் கழிக்கவே விரும்பினேன். ஆனால் நீயோ என்னைப்பற்றி இதுவரை எதுவும் அறிந்து கொள்ளாமலா இருந்தாய்? என்று கேவலமாகக் கேட்டுக் கொண்டே வாத்துக் குஞ்சைக் கடித்து மெல்லத் தொடங்கியது. வாத்துக் குஞ்சினால் எதையுமே கேட்க முடியாமல் போனது.

குட்டிக்கதைகள்

## கடவுளிலும் மேலானவர்



பீர்பால் தந்த விளக்கத்தைக் கேட்டு இந்திரனைவிடத் தன்னை உயர்ந்தவன் என்று நினைத் தார் அக்பர்.

சிலநாட்கள் சென்றன.

வழக்கம்போல அரசவை கூடியிருந்தது.

"பீர்பாலே! நான் மேலானவனா? கடவுள் மேலானவரா? சொல்லும்" என்று ஆணவத்துடன் கேட்டார் அக்பர்.

"பேரரசே! நீங்கள் கடவுளைவிட மேலானவர். அதிலென்ன உங்களுக்கு ஐயம்?" என்றார் பீர்பால்.

இதைக்கேட்டு அவையில் இருந்த எல்லோரும் திகைத்துநின்றனர்.

'அரசரைப் புகழவேண்டியதுதான். அதற்கும் அளவு இல்லையா? கடவுளைவிட உயர்ந்தவர் அரசர் என்றா புகழ்வது?' பீர்பால் இப்படிக் பேசலாமா?' என்று முணுமுணுத்தார்கள்.

அக்பரின் உள்ளம் பெருமிதத்தால் மகிழ்ந்தது.

"பீர்பால்! எல்லோருக்கும் புரியும்படி எதையும் சொல்லும் வல்லமை உமக்கு உண்டு. நான் கடவுளினும் எப்படி மேலானவனாக விளங்குகிறேன்?" என்று கேட்டார் அக்பர்.

"பேரரசே! உங்களால் செய்ய முடிந்த செயலைக் கடவுளால் செய்ய முடியாது. அதனால் தான் உங்களைக் கடவுளினும் மேலானவர் என்றேன்."

"கடவுளால் செய்ய முடியாத செயலை என்னால் செய்ய முடியுமா? அது என்ன செயல்?" என்று தற்பெருமையுடன் கேட்டார் அக்பர்.

"பேரரசே! நீங்கள் யார் மீதாவது கோபம் கொண்டால் உடனே அவரை நாடு கடத்த முடியும். கடவுளால் அப்படிச் செய்ய இயலாது. ஏனென்றால் உலகம் முழுமையும் அவர் ஆட்சிக்கு உட்பட்டது. உங்களால் செய்ய முடிந்த இந்தச் செயலைக் கடவுளால் செய்ய முடியாது. அதனால்தான் உங்களைக் கடவுளினும் மேலானவர் என்றேன்" என்றார் பீர்பால்.

இதைக்கேட்ட அக்பர் வீணாகத் தற்பெருமை கொண்டோமே என்று தலை கவிழ்ந்தார்.

'எந்தப் பொருளில் பீர்பால் சொல்கிறார் என்பதை அறியாமல் அவரைத் தவறாக எண்ணி விட்டோமே' என்று அவையில் இருந்தவர்கள் வருந்தினார்கள்.

# உங்கள் மூளை விவேகமானதா? சோதித்துப் பாருங்களேன்...

1. கூட்டினாலும் பெருக்கினாலும் ஒன்றே வரும். அது என்ன என்றாள் மேனகா? நீங்கள் சொல்லுங்கள் அது என்னவாக இருக்கும்?
2. இரண்டு அம்மாக்களும் இரண்டு மகள்மாரும் சினிமாவுக்குச் சென்றனர். தியேட்டரில் 3 ரிக்கற் மாத்திரம் பெறக்கூடியதாக இருந்தது. ஆனால் எல்லோரும் படம் பார்த்தனர். அது எப்படி முடிந்தது?
3. ஒரு தாமரைக் குளத்தில் இருந்த தாமரைகள் ஒவ்வொருநாளும் இரட்டிப்பாகிக் கொண்டுசென்றன. அந்தக் குளம் தாமரையால் நிரம்ப 30 நாட்கள் எடுத்தன எனின் பாதிக்குளம் நிரம்ப எத்தனை நாட்கள் எடுத்திருக்கும்?

# அறிந்தும் அறியாமலும்...

* கேத்திரகணிதத்தின் தந்தை எனப்படுபவர் யார்?
  பைதகரஸ்
* சாரணர் சிறுவர் இயக்கத்தை ஆரம்பித்தவர் யார்?
  பேடன்பவல்
* நோபல் பரிசை ஆரம்பித்துவைத்தவர் யார்?
  அல்பேட் நோபல் பிரபு
* அணுகுண்டைக் கண்டுபிடித்தவர் யார்?
  ஒக்கேராஹான்
* புகைப்படக்கருவியைக் கண்டுபிடித்தவர் யா ?
  எஸ்.ஜே.எம்.பாகுரே
* ஒட்சிசன் வாயுவைக் கண்டுபிடித்தவர் யார்?
  ஜோசப் பிறிஸ்லி
* சைக்கிளைக் கண்டுபிடித்தவர் யார்?
  மக்மில்லன்

**ந.ஜீவன், தரம் - 09**
**யாழ்.சென்ஜேம்ஸ் கல்லூரி.**

# பொது அறிவு

01. உலகின் மிகப் பெரிய கட்டடம் எது?
    கிஸேபிரமிட் - எகிப்து
02. உலகின் மிகப்பெரிய விமானநிலையம் எது?
    றியாத் விமானநிலையம் - சவுதி
03. உலகின் மிகப்பெரிய சிலை எது?
    சுதந்திரசிலை
04. உலகின் மிகப்பெரிய ஆலயம் எது?
    புனித பேதுறு ஆலயம் - றோம்
05. தென்னாபிரிக்க நாடுகளில் ஏ.பி.சி நாடுகள் எவை?
    ஆர்ஜென்ரீனா, பிறேசில், சிலி
06. சூரியனை பூமி ஒருமுறை சுற்றிவர எடுக்கும் காலம்?
    365 நாட்கள்
07. பூமி தன்னைத்தானே சுற்றிவர எடுக்கும் காலம்?
    23 மணித்தியாலம் 56 நிமிடம்
08. அலம் தேவாலயம் எங்குள்ளது?
    ஜேர்மனில் உள்ளது. 532 அடி உயரம்
09. மீனாட்சியம்மன் கோவில் எங்குள்ளது?
    இந்தியாவில் மதுரையில் உள்ளது.
10. டிமிஸ் மடாலயம் எங்குள்ளது?
    ருஷ்யாவிலுள்ளது
11. சீக்கியரின் மிகப்பெரிய கற்கோயில் எங்குள்ளது?
    இந்தியாவின் அமிர்தசரசில்

**க.தர்சன், தரம் - 07, சாவகச்சேரி இந்துக்கல்லூரி.**

# உங்களுக்குத் தெரியுமா?

* லண்டன் பாராளுமன்றக் கட்டடத்தில் அமைந்திருக்கும் 'பிக் பென்' என்ற புகழ்பெற்ற மணிக்கூட்டைத் தாங்கிக்கொண்டிருக்கும் மணிக்கூட்டுக் கோபுரம் 320 அடிகள் உயரமானது. அதிலிருந்து மணி (Bell) காரணமாக அந்தப் பெயர் வந்திருக்கிறது. அதன் நிறை 13.5 தொன்கள்.
* எவரெஸ்ட் மலை கடலின் ஆழமான பகுதிக்குள் மூழ்குமானால் ஒரு மைல் தூரத்துக்கும் அதிக ஆழமுள்ள நீர், மலையின் உச்சிக்கும் மேலாகப் பாயத் தொடங்கும்.
* உலகில் அதி உயர மலை எவரெஸ்ட். அதையும்விட உயரமான மலை கடலுக்கடியில் இருக்கிற 'மோனா கோ' ஆகும். 33,476 அடிகள் உயரமான இந்த மலையின் உச்சி ஹவாய்த் தீவிலுள்ளது.
* கூம்பு வடிவத்திலான ஐஸ்கிறீம் கோண்கள் 100 வருடங்களுக்கு மேல் பழமையானது. ஒரு நூற்றாண்டுவரையிலும் அதன் உருவமைப்பு மாற்றமடையாமலிருக்கிறது. ஐஸ்கிறீம் கோன் தனது நூறாவது பிறந்தநாளை 2004 ஆம் ஆண்டில் கொண்டாடியது.
* ஒரு நத்தை ஷேவிங் பிளேட்டின் மேல் தன்னை வெட்டிக் கொள்ளாமல் நகர்ந்துசெல்லக்கூடியது.

# இலங்கை பற்றிய தகவல்கள்

1. இலங்கையின் நீளம் - 432 கி.மீ
2. இலங்கையின் அகலம் - 224 கி.மீ
3. இலங்கையின் முன்னைய பரப்பளவு - 65610 ச.கி.மீ
4. இலங்கையின் தற்போதைய பரப்பளவு - 65535 ச.கி.மீ
5. இலங்கையை இந்து சமுத்திரத்தின் முத்து என அழைப்பர்
6. இலங்கைக்கு வடக்கே பருத்தித்துறை அமைந்துள்ளது.
7. இலங்கைக்கு தெற்கே தெய்வேந்திரமுனை அமைந்துள்ளது.

**க.அனுசியா, தரம் - 06,**
**கிளி/பாரதி வித்தியாலயம்.**


# அறிந்துகொள்வோம்

* கடைசியாகக் கண்டறிந்த கிரகம் புளூட்டோ.
* இளகும் தன்மைகொண்ட உலோகம், தங்கம்.
* உலகின் அகலமான பாலம் சிட்னி ஹார்பர் பாலம்.
* ஆறுகளே இல்லாத நாடு சவுதி அரேபியா.
* ஆக்கூறைந்த சனத்தொகை கொண்டநாடு வத்திக்கான்.
* புகழ்பெற்ற பிரான்சின் கோபுரம் ஈகிள் கோபுரம். 1056 அடி உயரமானது.
* வெடி மருந்தைக் கண்டுபிடித்தவர் ஆல்பிரட் நோபல்.
* குறைந்த நாடுகளைக் கொண்ட கண்டம் அவுஸ்ரேலியா.

**கு.சபேசன், தரம் - 07,**
**யாழ்.வேலணை மேற்கு நடராஜா வித்தியாலயம்.**




# உங்கள் கைவண்ணம்



இ.சபாஸ்கரன், தரம் - 01
யா/அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி



க.கோகுலன், தரம் - 09
நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயம்.



பா.பாலினி, தரம் - 07
யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி



அ.மக்லின், தரம் - 07
யா/கலட்டி ஆண்கள் பாடசாலை.




ஞா.ஞானறொபின்சன், தரம் - 07
யா/கலட்டி றோ.க.ஆ.பாடசாலை.

# நான் யார்?

எனது பெயர் சுதாகரன் சிவோதயன். நான் 4 ஆம் ஆண்டில் கல்வி கற்கிறேன். எனது தந்தையாரின் பெயர் செ.சுதாகரன். எனது தாயாரின் பெயர் சிவாமினி. நான் யாழ்.மட்டுவில் சந்திரமௌலீச வித்தியாலயத்தில் கல்வி கற்கிறேன். எனது சகோதரரின் பெயர் வரோதயன். எனது சகோதரியின் பெயர் சஜிந்தா. எனது பொழுதுபோக்கு விளையாடுதல், படித்தல். எனது நண்பர்களின் பெயர் ச.தயாகரன், வி.யுவராஜ், ஞா.விவேந்தன், இ.கயன், ந.தர்சன். எனக்கு விருப்பமான பழம் அப்பிள்.

**சு.சிவோதயன், தரம் - 04,**
**யா/சந்திரமௌலீச வித்தியாலயம்.**

# ஒற்றுமையே பலம்

தனு, பாலினி, லதிகா என்னும் மூன்று சிறுமிகள் ஒரு வீதி வழியே சென்றுகொண்டிருந்தனர். அவர்கள் மூவரும் செல்லும் வழியில் ஒரு பெரிய கல்லைக் கண்டனர். உடனே லதிகா தனது நண்பர்களாகிய தனுவையும் பாலினியையும் அந்தக் கல்லை ஒரு கரைக்குத் தள்ளுவோமா எனக் கேட்டாள். தனு, பாலினி இருவரும் மறுத்தனர். தம்மால் இதை எப்படி தள்ளமுடியும் என எண்ணினர். அந்த நேரத்தில் அருகிலிருந்த தோட்டத்தில் ஒரு விவசாயி நிலம் உழுதுகொண்டிருந்ததைக் கண்டு அந்த விவசாயியிடம் இந்த மூன்று சிறுமிகளும் சென்று ஆலோசனை கேட்டனர். அதற்கு அந்த விவசாயி "முயற்சி உடையோர் இகழ்ச்சி அடையார்" எனக்கூறி, தானும் சேர்ந்து அந்தக் கல்லை வீதி ஓரமாகத் தள்ளுவதற்கு ஒத்துழைத்தார். கல்லும் கரைசேர்ந்தது. அப்போதுதான் மூவரும் உணர்ந்தனர், ஒற்றுமையே பலம் என்று.

**ம.சிவகௌரி, தரம் 07,**
**யா/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி**


# நரியின் வேண்டுகோள்



காட்டினூடாகச் சென்று கொண்டிருந்த நரியார் யானையொன்று இறந்து கிடப்பதைக் கண்டது. யானையின் இறைச்சியைச் சுவைத்துவிடவேண்டுமென்ற எண்ணம் எழுந்தாலும், அதன் தோல் மிகக் கடினமாகவும், கிழிக்க முடியாததாகவுமிருந்தது. அதற்காக அது வேறோரு மிருகத்தின் உதவியை நாட முயன்றது.



அது ஒரு சிங்கத்திடம் சென்று தலைவா! யானையொன்று இறந்து கிடக்கிறது. உங்களுக்காக நான் அதைத் பத்திரமாக வைத்துக்கொண்டிருக்கிறேன். தயவு செய்து வந்து சாப்பிடுங்கள் என்றது. சிங்கம் தனக்குப் போதுமானவற்றைச் சாப்பிட்டதும் மீதமுள்ளதைத் தானே சாப்பிட்டு விடலாமென நரிசிந்தித்தது.



அதைக்கேட்ட சிங்கம் நரிக்கு நன்றியை மட்டும் தெரிவித்ததோடு, வேறு எவராலும் கொல்லப்பட்ட மிருகத்தை நான் சாப்பிட விரும்பவில்லை. அதன் எல்லாவற்றையும் நீயே சாப்பிட்டு முடித்துக்கொள் என்றது.



சிறிது நேரம் கழித்து, அவ்வழியால் புலியொன்று வந்தது. அதனண்டை சென்ற நரி, நண்பரே, இங்கே யானையொன்று இறந்து கிடக்கிறது.அதைக் காவல் காக்குமாறு சிங்கம் எனக்கு உத்தரவு கொடுத்திருக்கிறது. அவர் இப்போது குளிக்கச் சென்றிருக்கிறார். அவர் குளித்து முடித்துவிட்டுத் திரும்புவதற்குள் நீங்களே அதைச் சாப்பிட்டு விடலாம் என்றது.






ஆனால் அதைமறுத்தபுலி இவ்வாறு கூறியது. ''சிங்கத்தின் உணவை நான் ஏன் திருடிச் சாப்பிடவேண்டும்? நான் ஒரு திருடனல்ல எனக்கான உணவைத் தேடி உண்பதற்கான தைரியம் என்னிடமிருக்கிறது'' என்று கூறிக்கொண்டே சென்று விட்டது.



அப்போது அவ்வழியால் சிறுத்தையொன்று வந்து கொண்டிருந்தது. அதை இடைமறித்த நரியார், ''நண்பா, சிங்கத்தினால் கொல்லப்பட்ட யானை இங்கிருக்கிறது. தான் குளித்து முடிக்கும் வரையிலும் என்னைக் காவல் காக்குமாறு அவர் கூறியிருக்கிறார். ஆனாலும் நீங்கள் சிலவற்றைச் சாப்பிடலாம், இறைச்சியைத் திருடித் தின்றது புலியார் தான் என்று சிங்கத்திடம் கூறுவேன்'' என்றது .



''எனதருமை நண்பரே உங்களுக்கு என் இதயபூர்வ நன்றிகள்!'' என்று கூறிய சிறுத்தை வேலையை உடனடியாக ஆரம்பித்தது. தன் கூரிய பற்களால் யானையைக் கிழித்து உண்டது.



திடீரென்று நரி உரத்த குரலில் சத்தமிட்டது, ''சாப்பிடுவதை உடனடியாக நிறுத்திவிடு! சிங்கம் திரும்பி வந்தது கொண்டிருக்கிறது'' என்றது தான் தாமதம் சிறுத்தை தலைதெறிக்க ஓடியது. நரியாரின் ஆசை நிறைவேறியது. ஆசை தீர, வயிறு புடைக்க யானையின் இறைச்சியை நரி பதம் பார்த்தது!

நமது ஈழநாடு

**வைர வரிகள்**

குடிசெய்வார்க்கு இல்லை பருவம் மடிசெய்து
மானம் கருதக் கெடும்.

- திருக்குறள்

## நமது நோக்கு

# யுத்த அச்சத்துடன் பிறக்கப்போகும் 2006

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி மற்றும் வன்முறைச் சூழலுக்கும், இராணுவத்தினரின் மரணங் களுக்கும் ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பி யினரது கடும் போக்கும் தீவிரவாதக் கொள்கைகளுமே காரணம் என பாதுகாப்பு அமைச்சகத்துக்கு அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில மூத்த அமைச்சர்கள் தெரிவித்துள்ளார்களாம்.

வடக்கு - கிழக்கில் படையினர் மீது மேற்கொள்ளப்படும் தாக்குதல்களின் போது கொல்லப்படும் இராணுவத்தினரின் இறுதிச்சடங்கு நிகழ்வுகளில் அமைச்சர் பொறுப்பிலுள்ள மிக முக்கிய பிரமுகர்கள் அவசியம் கலந்துகொள்ள வேண்டும் என்ற ஜனாதிபதி விடுத்துள்ள ஒரு உத்தரவைப் புறக் கணித்த அமைச்சர்கள் சிலரே மேற்கண்ட கருத்தை வெளி யிட்டுள்ளதுடன் - இத்தகைய சடங்குகளில் பங்கு கொண்டு மக்களின் தாக்குதல்களுக்கு இலக்காகத் தயாராகஇல்லை என்றும், வேண்டுமானால் இவற்றுக்குக் காரணமாக உள்ள ஜே.வி.பி - ஹெலஉறுமய பிரமுகர்களை சென்று பங்கேற்கச் சொல்லுங்கள் எனவும் கூறியுள்ளனராம்

இந்த அமைச்சர்களின் கருத்து நிலைப்பாடு இரண்டு செய்திகளைத் தெளிவாக உரைப்பதாக உள்ளது.

ஒன்று - ஜனாதிபதியின் உத்தரவைப் புறக்கணித்து நிராகரிக்கும் அளவுக்கு அரசாங்கத்தில் ஒரு அணியினர் துணிச்சலுடன் இருக்கிறார்கள் என்பதும், அவர்களுக்கு ஜே.வி.பி. மற்றும் ஹெலஉறுமயவினருடன் அரசின் நெருக்கம் குறித்து அதிருப்தியே நிலவுகிறது என்பதுமாகும்.

இரண்டாவது - இன்றைய அவலச் சூழலுக்கு ஜே.வி.பியி னரும், ஹெல உறுமயவினரும் கடும் போக்குக்குக் கட்டுப்பட்டு இயங்கும் ஜனாதிபதியின் இயலாமையை அது வெளிப்படுத்துகிறது என்பதாகும்.

இந்த அமைச்சர்களின் கருத்து இன்றைய தென்பகுதி அதிகார அரசியல் கள யதார்த்தத்தை உணர்ந்து கூறப்பட்ட ஒன்றேயாகும்.

இதேவேளை, இந்திய விஜயத்தில் ஜனாதிபதி எதிர்பார்த் துச் சென்ற பலவிடயங்களில் அவருக்கு மனநிறைவை அளிக்கும் வகையில் எதுவும் நடக்கவில்லை என்று அங்கி ருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

ஒற்றையாட்சியின் கீழான தனது தீர்வு நடவடிக்கைக்கு ஆதரவு கிடைக்கும் என நம்பிய மகிந்தருக்கு சமஷ்டி அடிப் படையில் அதிகாரவிலான அதிகாரப் பரவலாக்கல் குறித்த ஆலோசனையை இந்தியா வழங்கியுள்ளமை ஏமாற்றம் தரும் விடயமாகும்.

இரண்டாவது தமிழகம் நோக்கிய அவரது பயணத்தை தமிழக முதல்வர் ஜெயலலிதா பொருத்தமில்லாத காரணம் ஒன்றைக்கூறி கடைசி நேரத்தில் ரத்துச் செய்ய வைத்தமை யானது மகிந்தருக்கும் அவரது பரிவாரங்களுக்கும் பெருமள வில் ஏமாற்றமளிக்கும் விடயமாகவே அமைந்துள்ளது.

விடுதலைப்புலிகள் விடயத்தில் ஜெயலலிதாவின் அணுகு முறைகள் தமக்குச் சாதகமாக இருப்பதைப் பயன்படுத்தி தனது புலிஎதிர்ப்புச் செயற்பாடுகளுக்கு தமிழக அரசின் ஆதரவு கிடைக்கும் என நம்பிய மகிந்தருக்கு ஜெயலலி தாவின் கடைசி நேர முடிவு எதிர்பார்க்காத பின்னடைவா கவே அமைந்துவிட்டது.

மகிந்தவின் சென்னை விஜயத்தை தமிழகத்தின் தமிழ் இன உணர்வாளர்களும், திராவிடக் கட்சிகள் சிலவும், பாட் டாளிமக்கள் கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் மற்றும் தமிழர் தேசிய அமைப்பு போன்ற கட்சிகளும் தீவிரமாக எதிர்த்து முழு அளவில் கண்டனம் தெரிவித்தமையானது, மகிந்தரை வரவேற்பதில் இருந்து தமிழக அரசைப்பின்வாங்க வைத்து விட்டது என்றே கூறப்படு கிறது.

இதேவேளை, தமிழகக் கட்சிகள் பல மகிந்தரின் இனப் பிரச்சினை தொடர்பான கொள்கைகளுக்கு மத்திய அரசு ஆதரவளிப்பதானது ஈழத்தமிழ் மக்களை அழிப்பதற்கு வழங் கும் ஒத்துழைப்பாகிவிடும் என டெல்கி ஆட்சியாளருக்கு காட்டமாகவே தெரிவித்தமையானது - இலங்கையின் புதிய ஜனாதிபதியின் விருப்பத்திற்கு இசைவாக உடனடியாக, பகிரங்கமாக எதனையும் செய்யமுடியாத நிலையை இந்திய மத்திய அரசுக்கு ஏற்படுத்தியதாகத் தெரிகிறது. இந்த வகையில் மகிந்தரின் இந்திய விஜயம் அவருக்கு மட்டுமல்ல புதிய வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீரவுக்கும் ஒரு ராஜதந்திர பின்னடைவு என்றே அரசியல் நோக்கர்கள் கருது கிறார்கள்.

இந்த ஏமாற்றச் சூழலில் இலங்கைதிரும்பும் ஜனாதி பதியை கொழும்பிலும் நல்ல செய்திகள் வரவேற்பதாக இல்லை.

'விரைவில் போர் மூழும் சூழலுக்குள் இலங்கை' என்ற நோர்வே அரசினதும், போர்நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினதும், ஏனைய முக்கிய சர்வதேச நாடுகளினதும் எச்சரிக்கைகள் அபாயச் சங்காக ஒலிக்கும் நிலையிலேயே அவர் நாடுதிரும்புகிறார்.

அவர் பதவியேற்று வெறும் ஒரு மாதமும் 10 நாட்க ளுமே ஆகியுள்ள நிலையில் நாடு கடந்த நான்காண்டு கால தற்காலிக அமைதியையும் இழக்கும் அவல நிலையையே எட்டியுள்ளது என்பது கசப்பான உண்மையேயாகும்.

இதேவேளை நாளை மலரும் புத்தாண்டுத்தினம் தமிழ் பேசும் மக்களுக்கு துன்பமும், துயரமும் மிகுந்த கறுப்பு நாளாகவே பிறக்கப்போகிறது என்பதுடன், இந்த அரசு யுத்தத்தையே தமிழ் மக்களுக்கு புத்தாண்டின் வெகுமதியாக தரப்போகிறது என்ற அச்ச நிலையையே வடக்கு - கிழக்கின் இராணுவப் புறச்சூழல் மூலம் ஆட்சி அதிகாரத்திலுள்ளோர் ஏற்படுத்தியுள்ளனர் என்பதும் உண்மையேயாகும்.

267, Navalar Road,
Jaffna.
T.P. - 021-2225107
www.eezhanaadu.com

## நாடும் நடப்பும்




# மெல்லக் கற்கும் மாணவர்கள் மெல்லக் கற்பவர்களா.....?

நாட்டில் இலவசக் கல்வியை அறிமுகப்படுத்தி அரை நூற்றாண்டு கடந்தும் கூட மாணவர்கள் மத் தியில் இக்கல்வி பகிரப்பட்டதா? பகிரப்படுகின் றதா? என்றால் அது ஆய்வுக்குரிய விடயமாகிறது. அரசாங்கம் இலவசக்கல்வியை அறிமுகப்படுத்தி நடைமுறைப்படுத்தி வருகின்ற போதும், ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்களும் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகளுக்கு பெரிதும் துணை நிற்கின்றன.

இவை சகல மாணவர்களிடையேயும் சம நேரத் தில் சம அளவுடன் சென்றடைகின்றதா என்றால் இல்லை. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. ஒதுக்கப்பட்டும், தனிமைப்படுத்தப்பட்டும், பாட சாலையின் வேலைகளுக்கு மாணவர்களைப் பயன்படுத்தும் போது மெல்லக் கற்கும் மாணவர்கள் தோற்றம் பெறுகின்றனர். மெல்லக் கற்கும் மாண வர்கள் அதிகளவில் கிராமப்புறப் பாடசாலை களிலேயே உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிராமப் புறப்பாடசாலைகளுக்கு கல்விசார், கல்விசாரா வளங்கள் உரிய முறையில் பகிரப்படு கின்றதா? அப்பாடசாலை மாணவர்கள் மெல்லக் கற்கிறார்கள், அல்லது அடைவு மட்டத்தில் மிக வும் குறைவாக இருக்கிறார்கள் என்ற பாகுபாட் டுக்கு அப்பால் இதற்கான காரணத்தை கண்டறிய வேண்டும். ஆசிரியர்களின் மனநிலையையும் அவர்களது இலகுவான கற்பித்தலுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதா என்பதையும் முதலில் ஆய்வு செய்ய வேண்டும்.

பல நல்லாசிரியர்கள் உள்ள பாடசாலைகளில் ஒரு சில ஆசிரியர்களின் அசமந்தப் போக்கி னாலேயே இவ்வாறான மாணவர்கள் உருவாகின் றார்கள். இவன் சரியான குழப்படி, படிப்பு படு மோசம், ஏறவே ஏறாது. ஆனால் நல்லா வேலை செய்வான். அதோட இவனையே வகுப்புத் தலை வனாகப் போட்டுள்ளேன். கடைக்குப் போறது, பள்ளிக்கூடத்திலையும் எல்லாம் இவனைக் கொண்டே செய்து போடுவன் எனப் பெயர் குறிப் பிட விரும்பாத ஆசிரியர் ஒருவர் குறிப்பிடு கின்றார். தரம் ஐந்தில் கல்வி கற்கும் இந்த வகுப்பு தலைவனுக்கு கை எழுத்து வைக்கத் தெரியாது. வாசிக்கத் தெரியாது.

பாடசாலையில் ஐந்து வருடங்களாக கற்கின்ற மாணவனுக்கு கையெழுத்து வைக்கத் தெரியா தென்றால் யார் காரணம்.....? இதற்கு மேடை போட்டுப் பேசவேண்டிய தேவையில்லை. முழுப் பொறுப்பும் ஆசிரியர்களுக்கே. எல்லா ஆசிரி யர்களும் இல்லை. தம்மையே அர்ப்பணித்து செய லாற்றி வருகின்ற ஆசிரிய சமூகத்தின் மத்தியில் ஒரு சிலர் இருப்பதால் ஒட்டுமொத்த ஆசிரிய சமூகமும் அவமானத்துக்கு உள்ளாகிறது.

வன்னிப் பகுதியில் இருந்து வந்த மாணவர்கள் தான் கல்வியில் நாட்டமில்லாமல் இருக்கின்றனர். மெல்லக் கற்கும் மாணவர்களில் இவர்களே அதிக முள்ளனர் என்ற கருத்தும் ஆசிரியர்கள் மத்தியில் நிலவுகிறது. இக்கருத்தை ஏற்க முடியாது. அதிக பொழுதுபோக்கு சாதனங்களுக்கு கல்வியை இலக் காகக் கொண்டவர்களாக வன்னிப் பகுதி மாணவர் களைக் கூற முடியாது. ஒப்பிட்டு ரீதியில் வன்னிப் பகுதிகளில் இருந்து வந்த பிள்ளைகளே அதிக புள்ளிகளைப் பெறுவதுடன், வகுப்புப் பாடங் களிலும் முதன் நிலையில் இருந்து வருகின்றமை அவதானிக்கக் கூடிய ஒன்றாகவுள்ளது.

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு மேலதிக வகுப் புகள் நடாத்தப்பட வேண்டும். நடாத்தப்படுகின்றது போன்ற செய்திகள் வெளிவருகின்றன. ஆனால் இவர்கள் உருவாக்கும் சூழலை இனம் கண்டு ஆரம்பத்திலேயே இவர்களை மாற்றியமைக்க முனைந்திருக்கலாம்தானே.

பொதுநலவாய நிதியம் யாழ்ப்பாணத்தின் ஐந்து வலயங்களிலும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊடாக மெல்லக் கற்கும் மாணவர்களுக்கான விசேட கற்றல் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தியுள் ளது. ஒரு வலயத்தில் இருந்து 20 பாடசாலைகள் இனம் காணப்பட்டு இப்பாடசாலைகளில் இருந்தே மாணவர்களைத் தெரிவு செய்கின்றனர்.

மெல்லக் கற்கும் மாணவர்களுக்கு என பிரத்தி யேகமாக கற்பிப்பதற்கு உயர்தர பரீட்சையில் சித்தியடைந்த யுவதிகளுக்கும், பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கும் விசேட பயிற்சிகள் வழங்கப் பட்டுள்ளன. மெல்ல கற்கும் மாணவர்களுக்கு விசேட கல்வித் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ள இன்றைய நிலையில் மேற்படி ஆசிரியர்களினால் இம்மாணவர்கள் எந்தளவுக்குக் கவனிக்கப்படப் போகிறார்கள். ஒவ்வொரு நாளும் குறிப்பிட்ட சில மணித்தியாலங்களில் மாணவர்களை அடைவு மட்டத்தை நோக்கி நகர்த்த முடியுமா?

சிறுவர்கள் பல இலட்சியங்களுடன் ஆரம்ப காலங் களில் பாடசாலைக்கு செல்கிறார்கள். ஆனால் குறிப் பிட்ட சில வருடங்களிலேயே அவர்களது இலட்சி யங்கள், அலட்சியப்படுத்தப்படுகிறது. இவற்றை எழுது வதனால் ஒட்டுமொத்த ஆசிரிய சமூகத்தை குறை கூற வில்லை. ஒரு சில ஆசிரியர்களின் அலட்சியப் போக்கு ஆசிரிய சமூகத்துக்கே அபகீர்த்தியை ஏற்படுத்துகிறது.

பயனுள்ள கல்விச் சமூகத்தை மட்டுமன்றி சக்தி மிக்க துறை சார்ந்தவர்களையும் உருவாக்குவதில் ஊன்றுகோலாக இருப்பவர்கள்ஆரம்பப்பிரிவு ஆசிரியர்கள் என்பது மறுக்க முடியாத அதே நேரம் மறைக்க முடி யாத உண்மை.

ஒரே வயதுடைய மாணவர்கள் ஒரே நேரத்தில் குறிப்பிட்ட சில ஆசிரியர்களால் ஒரே சூழலில் கற்பிக்கப்படுகின்ற போது எவ்வாறு மெல்லக் கற்கும் மாணவர்கள் உருவாகின்றார்கள். 40 மாண வர்கள் இருக்கின்ற வகுப்பறையில் 10 மாணவர் களுக்கே கற்பிக்கின்ற தோரணையில் ஆசிரியர்கள் வகுப்பறைகளில் நடந்துகொள்கிறார்கள் என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட வேண்டியதாகும்.

மெல்லக் கற்கும் மாணவர்களை மெல்ல கற்க ஆரம்பிக்கும்போதே அவர்களை வலுப்படுத்த வேண்டும். சக மாணவர்களின் ஓட்டத்துடன் இவர் களையும் இணைக்க வேண்டும். மாறாக மெல்ல மெல்ல கற்கும் மாணவர்களை மெல்ல மெல்ல ஒதுக் குவோமாயின் ஆரோக்கியமான கல்விச் சூழலையோ, கல்விப் பாரம்பரியத்தையோ இனிவரும் காலங் களில் நாம் எதிர்பார்க்க முடியாது.

ஈழவன்

# இந்த வாரம் உங்கள் பலன் எப்படி? 31.12.2005 — 05.01.2006

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | சனி |
| யுரே | 30 கா.7.33 தனு - சந்<br>01 கா.8.30 மக - சந் | | |
| சுக்<br>நெப் | 03 கா.8.52 கும் - சந்<br>05 ப.10.28 மீன - சந் | | |
| சூ.புத | சந் | குரு | கேது |

## மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை1ஆம் கால்)



மேடராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படும். எடுத்த கருமங்கள் வெற்றியைத் தரும். புத்திரர்களால் உதவிகள் கிடைக்கும். பண வருவாய் திருப்திகரமாக இருக்கும். நண்பர்கள், உறவினர்கள் உதவி புரிவார்கள். விவாகாதி சுபகருமங்கள் வெற்றியளிக்கும். உத்தியோகத்தர்களுக்கு கருமங்கள் சீராக நடக்கும். பல வசதிகள் கிடைக்கும். மேலதிகாரிகளின் ஒத்துழைப்பும் உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக நடக்கும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். முதலீடுகளில் நல்ல லாபம் கிட்டும். வங்கி உதவிகளும் உண்டு. தொழிலாளர்களுக்கு நல்ல தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். லாபம் அதிகரிக்கும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம் ஏற்படும். ஆசிரியர், பெற்றோரின் பாராட்டுக்கள் உண்டு.

## இடபம்

(கார்த்திகை 2,3,4 ரோகினி, மிருகசீரிடம் 1,2)



இடபராசியில் பிறந்தவர்களுக்கு வாழ்க்கையில் நன்மைகள் கிட்டாது. குடும்பத்தில் சச்சரவுகள் அதிகரிக்கும். உறவினர்களுடன் மனத்தாங்கல்கள் ஏற்படும். புத்திரர்கள் தொல்லைகள் தருவார்கள். தொழில் வருவாய் குறையும். தேக சுகமும் பாதிப்படைய இடமுண்டு. குடும்பப் பெண்கள் விரக்தியுடன் காணப்படுவர். சுபகருமங்கள் இழுபறி நிலையைக் காட்டும். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பிரயாசைகள் கூடும். வேலைப்பளு அதிகமாகும். சக ஊழியரின் உதவிகள் கிடையாது. அதிகாரிகள் கடுமையாக நடந்துகொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலையை காட்டும். வாடிக்கையாளர்களின் வரவு குறையும். புதிய முதலீடுகளைத் தவிர்க்கவும். தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை குன்றும். தொழில்வாய்ப்புகள் குறையும். மாணவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்து காணப்படுவர்.

## மிதுனம்

(மிருகசீரிடம்3,4திருவாதிரை, புனர்பூசம் 1,2,3)



மிதுன ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப நிலை நன்றாக இருப்பினும் இடையிடையே பிரச்சினைகள் தோன்றும். பிரச்சினைகளை சுமுகமாக அணுக வேண்டும். நினைத்த கருமங்கள் தாமதத்தின் மேல் வெற்றியளிக்கும். பொருளாதாரம் அதிகம் பிரச்சினை தராது. மங்கள கருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு இருப்பினும் சமாளிக்க முடியும். கீழ் உத்தியோகத்தர்களால் கரைச்சல்கள் ஏற்படும். ஊதிய உயர்வு தாமதமடையும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக இருக்கும். விற்பனையைப் பெருக்க கூடிய முயற்சி தேவை. புதிய முதலீடுகளைப் பொறுத்துச் செய்வது நன்று. தொழிலாளர்களுக்கு உரிய காலத்தில் வேலையை நிறைவேற்ற முடியாமலிருக்கும். மாணவர்களுக்கு ஊக்கம் தேவை.

## கடகம்

( புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்)



கடக ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்ப வாழ்க்கை மகிழ்ச்சி தரும். தொழில் வருவாய் சிறக்கும். உறவினர், நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து வருவாய் கிட்டும். தேகாரோக்கியம் பாதிப்படையாது. எடுக்கும் முயற்சிகள் தங்குதடையின்றி நிறைவேறும். விவாகாதி சுபகருமங்கள் மனம் போல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு பிரமாதமாக இருக்கும். விரும்பிய வேலை மாற்றங்கள், வசதிகள் கிடைக்கும். உயர்ச்சி, ஊதிய உயர்வு வந்து சேரும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மிகச் சிறப்பாக நடக்கும். பழைய முதலீடுகள் நன்கு விற்பனையாகும். லாபம் பெருகும். புதிய முதலீடுகளுக்கு நன்று. தொழிலாளர்களுக்கு புதிய தொழில் ஒப்பந்தங்கள் கைச்சாத்தாகும். வருமானம் பெருகும். மாணவர்களுக்கு முன்னேற்றமும், பாராட்டுக்களும் கிடைக்கும்.

## சிங்கம்

( மகம், பூரம், உத்தரம் 1 ஆம் கால்)



சிங்கராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பநிலை சுமுகமாக இருக்கும். பொருளாதாரம் சிறப்பாக இருக்கும். உறவினர்களால் உதவி உண்டு. புத்திரர்களால் மகிழ்ச்சி ஏற்படும். தொடங்கும் கருமங்கள் வெற்றியளிக்கும். குடும்பப் பெண்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவர். விவாகம் போன்ற சுப கருமங்கள் விரைவில் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு அந்தஸ்து உயரும். சக ஊழியர்கள் உதவி செய்வார்கள். அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்குவர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். முதலீடுகள் விற்பனையாகும். வாடிக்கையாளர்களின் வரவு அதிகரிக்கும். வங்கி உதவிகள் கிட்டும். தொழிலாளர்களுக்கு தொழில் சிறப்பாக நடக்கும். மாணவர்களுக்கு கல்வி முன்னேற்றமுண்டு. உயர் கல்வி கற்க வாய்ப்புகள் உண்டு.

## கன்னி

(உத்தரம் 2,3,4 அத்தம், சித்திரை 1,2 கால்கள்)



கன்னிராசியினருக்கு குடும்ப வாழ்வில் நிம்மதி கிட்டாது. அன்றாடச் செலவுகள் அதிகரிக்கும். புத்திரர்களால் உதவி கிடையாது. உறவினர்களிடையே வாக்குவாதங்கள் ஏற்படலாம். தொழில் வருவாய் மந்தமாக இருக்கும். தேகசுகம் பாதிப்படைவதால் வைத்தியச் செலவு கூடுதலாக இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு அதிகமாகும். அலைச்சல், பிரயாசை கூடுதலாக இருக்கும். எப்படி வேலை செய்தாலும் நன்மை கிடையாது. மங்கள கருமங்கள் காலதாமதத்தை ஏற்படுத்தும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்த நிலை காட்டும். முதலீடுகள் தேங்கிக் கிடக்கும். புதிய முதலீடுகளைத் தவிர்த்தல் நன்று. தொழிலாளர்களுக்குள் ஒற்றுமை இருக்காது. வேலைகள் கைநழுவிப் போகும். மாணவர்கள் விளையாட்டில் கவனம் செலுத்துவர். தேவையற்ற விடயங்களில் தலையிடக் கூடாது.

## துலாம்

(சித்திரை 3,4ஆம் கால்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் கால்கள்)



துலாம் ராசியில் பிறந்தவர்களுக்கு இல்லறம் நல்லறமாக நடந்தாலும் இடையிடையே வாக்குவாதங்களும் ஏற்படும். சகோதரர்கள், உறவினர் ஆகியோரின் ஒற்றுமையால் மன நிம்மதி உண்டாகும். பெரியோர்களின் ஆசிகள் உண்டு. தேகசுகம் சுமாராக இருக்கும். விவாகம் முதலிய சுபகருமங்கள் தாமதத்தின் மேல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு வேலைப்பளு கூடுதலாயினும், சக ஊழியரின் உதவியுடன் சமாளிக்கலாம். அதிகாரிகளுக்கேற்ப நடந்து கொள்வது நன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். அதிக லாபத்தை எதிர்பார்க்க முடியாது. வங்கி உதவிகள் காலந்தாழ்த்திக் கிட்டும். தொழிலாளர்களுக்கு ஒற்றுமை வலுப்படும். தொழில் விருத்திபெறும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் வேண்டும். முயற்சி திருவினையாக்கும்.

## விருச்சிகம்

( விசாகம் 4, அனுஷம், கேட்டை)



விருச்சிகராசிக்காரருக்கு குடும்பநிலை சிறப்பாக இருக்கும். குடும்ப அங்கத்தவர்கள் புரிந்துணர்வுடன் நடந்து கொள்வர். புத்திரர்களால் மகிழ்ச்சி கிட்டும். நண்பர்கள், உறவினர்களின் உதவிகள் இருந்து கொண்டிருக்கும். பண வருவாய் திருப்தியளிக்கும். சிலருக்கு உல்லாசப் பிரயாணங்கள் அமையும். மங்கள கருமங்கள் கைகூடும். உத்தியோகத்தர்களுக்கு உதவி ஒத்தாசைகள் உண்டு. மேலதிகாரிகள் ஒத்துழைப்புடன் நடந்துகொள்வர். வர்த்தகர்களுக்கு வியாபாரம் நன்றாக நடக்கும். வாடிக்கையாளர்கள் கூடுதலாக வருகை தருவர். முதலீடுகள் விற்பனையாகும். தொழிலாளர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புக்கள் அமையும். வருவாய் சிறக்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஊக்கம் அதிகரிக்கும். பரீட்சைகளில் சித்தி உண்டு.

## தனுசு

(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் கால்)



தனுசு ராசியில் பிறந்தவர்களுக்கு இவ்வாரம் பல நற்பலன்கள் ஏற்படும். குடும்பத்தில் சுமுகமான நிலை காணப்படும். பணவருவாய் அதிகரிக்கும். புத்திரர்களால் உதவியும். மகிழ்ச்சியும் ஏற்படும். தொடங்கும் கருமங்கள் தங்குதடையின்றி வெற்றியளிக்கும். தேகசுகம் பாதிப்படையாது. மங்கள கருமங்கள் மனம் போல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு அலுவலகங்களில் வரவேற்பு பிரமாதமாக இருக்கும். ஒத்துழைப்புக்கள் சிறப்பாக இருக்கும். மேலதிகாரியின் பாராட்டுக்கள் கிடைக்கும். உயர்ச்சிகள் உண்டு. வர்த்தகர்களுக்கு வியாபாரம் மனம் போல் சிறப்பாக நடக்கும். நல்ல இலாபம் கிடைக்கும். புதிய முதலீடுகள் செய்தல் நன்று. வங்கி உதவிகள் உண்டு. தொழிலாளர்களுக்கு புதிய தொழில் வாய்ப்புக்கள் கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் முன்னேற்றம், பாராட்டுக்களும் கிடைக்கும்.

## மகரம்

( உத்தராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 )



மகர ராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் கஷ்டங்கள் அதிகரிக்கும். புத்திரர்களால் தொல்லைகள் ஏற்படும். எதிர்பாராத பணச் செலவுகள் வரும். எடுக் கும் கருமங்கள் தாமதத்தை ஏற்படுத்தும். தேகசுகமும் பாதிக்கப்படும். வருவாயிலும் பார்க்க செலவுகள் அதிகரிக்கும். மங்கள கருமங்கள் கால தாமதத்தை ஏற்படுத்தும். உத்தியோகத்தர்களுக்கு ஒழுங்காகப் பணியாற்ற முடியாத நிலை தோன்றும். சகாக்களாலும் தொல்லை ஏற்படும். அலைச்சல்மிகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் மந்தநிலை காட்டும். முதலீடுகளை விற்பனை செய்வதில் பலகஷ்டங்களை எதிர்நோக்குவர். தொழிலாளர்களுக்கு புதுத்தொழில் வாய்ப்புக்கள் குறையும். வருவாய்போதாமல் இருக்கும். மாணவர்களுக்கு கல்வி முன் னேற்றம் குறைவு. விளையாட்டுக்களில் ஈடுபாடு அதிகமாகும்.

## கும்பம்

( அவிட்டம் 3,4 ஆம் கால்கள் சதயம் பூரட்டாதி 1,2,3 ஆம் கால்கள்)



கும்பராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பம் மகிழ்ச்சியால் பொங்கும். பண வருவாய் அதிகரிக்கும். புத்திரர்களால் உதவியும், மகிழ்ச்சியும் உண்டு. நற்காரியக் கொண்டாட்டங்கள் மனதுக்கு மகிழ்ச்சியை கொடுக்கும். வெளியூர்களில் இருந்து நற்செய்திகளும் பணமும் கிடைக்கும். மங்கள கருமங்கள் விரைவில் மனம் போல் நிறைவேறும். உத்தியோகத்தர்களுக்கு அதிகாரிகளிடத்தில் செல்வாக்கு வளரும். பணக்கஷ்டங்கள் நிவர்த்தியாகும். ஊதிய உயர்வு கிட்டும். செல்வாக்குப் பெருகும். வர்த்தகர்களுக்கு வியாபாரம் சிறப்பாக இருக்கும், புதிய முதலீடுகளுக்கு சாதகமான காலம். பவுண் வியாபாரிகள் கூடுதலாக இலாபமடைவர். தொழிலாளர்களுக்கு புதிய தொழில் ஒப்பந்தம் செய்யப்படும். வருவாய் பெருகும். மாணவர்களுக்கு சகல துறைகளிலும் முன்னேற்றம் உண்டு.


## மீனம்

( பூரட்டாதி 4 ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி)



மீனராசியில் பிறந்தவர்களுக்கு குடும்பத்தில் நல்லுறவு வளரும். உறவினர்களிடையே கருத்து வேற்றுமை தோன்றும், வருவாய் தேவைக்கேற்ப அமையும். வெளிவிடயங்களில் தலையிடுவது நல்லதல்ல. தேகசுகத்தை பேணுவது நன்று. அநாவசிய செலவுகளைத் தவிர்த்துக் கொள்வது நல்லது. மங்கள கருமங்கள் தாம தத்தின்மேல் நிறைவேறும். உத்தியோகத் தர்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். எனி னும் சக உதவியுடன் சமாளிக்கலாம். அதிகாரிகளுக்கு ஏற்ப நடந்து கொள்வதுநன்று. வர்த்தகர்களுக்கு வியாபாரம் சுமாராக நடக்கும். முயற்சிதேவை. தொழிலாளர்களுக்குள் சில பிரச்சினை உருவாகும். பொறுமையாகப் பணி செய்தல் நன்மையானது. மாணவர்களுக்கு முயற்சியும், ஆர்வமும் இருந்தால் முன்னேறலாம்.

## இறுதிவரை தமிழ் தேசியத்துக்காக உழைத்த ஒரு மாமனிதர்...!



நள்ளிரவு நத்தார் ஆராதனையில் கலந்து கொண்டிருந்த மட்டக்களப்பு நாடாளுமன்றஉறுப்பினர் ஜோசெப் பரராசசிங்கம் கொலை வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட செய்தி கேட்டு வட தமிழீழம் துக்கத்தில் மூழ்கிவிட்டது. தமிழ் பேசும் மக்களின் உரிமைக்காக, விடு தலைக்காக இலங்கைத் தீவுக்கு வெளியேயும், உலக நாடுகள் பலவற்றிலும் குரல் கொடுத்த மாமனிதரின் உயிரைப் பறித்து விட்டனர். அவரைக் கொன்ற கொலைஞருக்குத் தெரிந்தது ஆலயங்களும், தேவாலயங்களும், பள்ளிவாசல்களும் கொலை செய்யப்படும் கொலைக்களங்கள் என்பதே. இதனால் தான் சென்ற திங்களில் அப்பாவி முஸ்லிம்களைத் தொழுகையிலிருந்த பொழுது பள்ளிவாசலில் வைத்துக் குண்டெறிந்து கொன்றார்கள். தற்பொழுது, கிறிஸ்து பிறந்த நத்தார் ஆராதனையில் கலந்து கொண்ட ஜோசெப் பரராசசிங்கம் கத்தோலிக்கத் தேவாலயத்தில் வைத்துக் கொலைஞர்களால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இந்தப் பயங்கரவாதிகளின் செயலைப் பற்றி என்ன கூறப் போகின்றது சர்வதேச சமூகம்? இதைப் புலிகளின் செயல் என்று வாய் கூசாது சிங்களப் படை அதிகாரிகள் கூறிய செய்தியைக் கேட்டு மனம் கவலை அடைகின்றது. போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழு - ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களையவேண்டு மெனப் பலமுறை கூறியிருந்ததையும், அண்மையில் பிரஷெல்சில் கூடிய இணைத் தலைமை நாடுகள் அவ்வாயுதக்குழுக்களின் ஆயுதங்களைக்களையுமாறு கூறியதையும் நிராகரித்த சிங்கள அரசு, எதற்காக அவ்வாறு மறுத்து வந்ததென்பதனை ஜோசெப் பரராச சிங்கத்தின் கொலை எடுத்துக் காட்டுகிறது. அரசு கொலையாளிகளை உடன் கைது செய்யுமாறு கூறித்தன்னைத்தானே திருப்திப்படுத்தவும், உலகத்தை ஏமாற்றவும் பார்க்கிறது. இந்தியாவுக்குச் செல்லவுள்ள நிலையில் மகிந்த அவசர அவசரமாகக் கவலை தெரிவித்துக் கண்டனமும் தெரிவித்துள்ளார். மாமனிதர் குமார் பொன்னம்பலம் கொலை செய்யப்பட்டார். கொலைஞர்களைக் கைது செய்தார்களா? மாமனிதர் சிவராம் கொலை செய்யப்பட்டார். கொலைஞர்களைக் கண்டு பிடித்தார்களா? கௌசல்யனும் அவருடன் மாமனிதர் சந்திரநேருவும் கொலை செய்யப்பட்டனர். கொலைஞர்கள் பிடிக்கப்பட்டார்களா? இவ்வாறு எத்தனை கொலைகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் நடைபெறுகின்றன. இந்தக் கொலைஞர்களைக் கைது செய்ய முடியாதா? அல்லது விருப்பமில்லையா? உண்மையில் இந்தக் கொலைகள் நடைபெறுவதை சிங்கள ஆட்சியாளர்கள் விரும்பவில்லை என்றிருந்தால், போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்ட உடனேயே ஆயுதக் குழுக்களின் ஆயுதங்களைக் களைந்திருப்பர். ஆயுதக் குழுக்களை வைத்துத் தமிழின உணர்வாளர்களையும், தமிழீழப் பற்றாளர்களையும் அழித்தொழிப்பதிலேயே சிங்கள அரசுக்கு அக்கறை இருந்ததேயன்றி, சமாதானத்தில் அக்கறை அறவே இருக்கவில்லை. ஆனால் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதி களாக உலகம் முழுவதிலும் காட்டிக் கொண்டு அரச பயங்கரவாதத்துக்குப் பக்கத்துணையாக இந்த ஒட்டுக் குழுக்களைப் பயன்படுத்தி வளர்த்து வருகின்றது சிங்கள அரசு. அக்குழுக்களும் அரச புலனாய்வுக் குழுவுமே இக்கொலையைச் செய்துள்ளதாகத் தமிழர் தரப்பு சாட்டியுள்ள குற்றம் மிகவும் சரியானதே. இதேவேளை ஜோசெப் பரராசசிங்கம் மாமனிதர் என்ற தமிழீழ உயர் விருது வழங்கப்பட்டுத் தமிழீழத் தேசியத் தலைவரால் போற்றப்பட்டுள்ளார்.

"பகைவனின் கோழைத்தனமான, கோரமான தாக்குதலுக்கு ஒரு மகத்தான மனிதர் பலியாகிவிட்டார். இது தமிழீழ வரலாற்றில் நிகழ்ந்த மாபெரும் துயர நிகழ்வு....தமிழீழ மக்களால் பெரிதும் போற்றப்பட்ட சிறந்த மனித உரிமைப் போராளி. அனைவரையும் கவர்ந்த ஒரு தமிழினப் பற்றாளர். இவரது சாவு தமிழர் தேசத்துக்கு என்றுமே ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.... ஜோசெப் பரராசசிங்கம் அவர்களின் இனப் பற்றுக்கும் விடுதலைப் பற்றுக்கும் மதிப்பளித்து அவரது விடுதலைப் பணியை கௌரவிக்கும் முகமாக மாமனிதர் என்ற அதி உயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகிறேன்டுடு.

சத்திய இலட்சியத்துக்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு என்றும் அழித்து விடுவதில்லை. சரித்திர நாயகனாக எமது தேசத்தின் ஆன்மாவில் அவர் என்றும் வாழ்வார்" என்று தமிழீழத் தேசியத் தலைவர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாமனிதனை, தமிழீழப் பற்றாளரைப் புலிகளே கொலை செய்திருப்பார்கள் என வாய் கூசாது அரசும், இராணுவப் பேச்சாளரும் கூறியிருப்பது வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சுவது போல் உள்ளது. சில தினங்களுக்கு முன்னர் தமிழ்த் தேசிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் கொலை அச்சுறுத்தல் உள்ளதெனவும், அவ்வாறு கொலை செய்து விட்டு அக்கொலைகளைப் புலிகளின் மேல்போடுவதற்கு சதி நடப்பதாகவும், ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருந்தன. அச்செய்திகளின் உண்மைத்தன்மை இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. இக்கொலை பற்றி சர்வதேச ஊடகமொன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தனிடம் கேட்ட போது, அவர் கூறியபதிலும் இங்கு கவனிக்கத்தக்கதாகும். "இக்கொலையைச் செய்தவர்களைக் கண்டுபிடிக்க வேண்டியது அரசின் கடமை. அதை விட்டுவிட்டுப் புலிகளின் மேல் குற்றஞ் சுமத்துவது பொருத்தமற்றது. விடுதலைப் புலிகள் இக் கொலையைச் செய்யவில்லை. அவர்கள் இக்கொலையைச் செய்ய வேண்டிய அவசியமுமில்லை. இது வீணான குற்றச்சாட்டு" என்று சம்பந்தன் கூறியிருந்தார். எனவே அரசு இக்கொலைக் குற்றச் சாட்டிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது.

இந்தியாவுக்குச் சென்றுள்ள மகிந்தர் இக் கொலையைப் புலிகள்தான் செய்தார்கள். ஜனநாயக விரோதி களான புலிகள் ஜனநாயக வழியில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினரைக் கொலை செய்து விட்டனர். புலிகளின் பயங்கரவாதத்துக்கு இது மற்றுமோர் எடுத்துக்காட்டு என்று பரப்புரை செய்ய முனைவா. அதற் காகவே அரச ஊடகங்கள் புலிகளின் மேல் சந்தேகம் உள்ளதாக உளறத்தொடங்கி உள்ளன. கெட்டிக்காரன் புழுகு எட்டுநாளைக்கு என்பது போல் சிங்களப் பேரின வாதிகளின் வேடம் விரைவில் கலையும் என்பது திண்ணம்.

மாமனிதர் ஜோசெப் பரராசசிங்கம் தமிழீழத்தைக் கூறுபோடுவதனை எதிர்த்தவர்களில் முதன்மையானவர். சிங்கள ஆட்சியாளர்கள் கருணா என்ற ஒருவரை தமிழீழத்தைக் கூறுபோடப் பயன்படுத்திய பொழுது அதனை முறியடித்துத் தமிழ்த் தேசியத்துக்கு வலுச்சேர்த்தவர். அவர் அடிக்கடி கூறுவார் மமவடக்கு - கிழக்கு ஒற்றுமைக்கு எத்தனையோ தியாகங்களைச் செய்துள்ளோம். அந்த ஒற்றுமையைச் சிதறடிக்க விடமாட்டோம் என்று அவரது வழியில் தமிழீழ மக்கள் அனைவரும் ஓரணியில் இறுக்கமாகப் பிணைந்து நின்று தமிழீழத்தை வென்றெடுப்பதே அவரின் நினைவாக அவரின் தியாகத்துக்கு நாம் செய்யும் கைமாறாகும்.

**மாசிலான்**

# தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கு நேர்முக தேர்வுக்கு அழைக்கப்பட்டோர்

## கணிதம்

ஏ.குகதாஸன் - வவுனியா, வி.ஐங்கரதாஸன் - கரவெட்டி, பி.யாழினி - வட்டுக்கோட்டை, எஸ்.நிமலன் - சாவகச்சேரி, டி.சண்முகப்பிரியா - யாழ்ப்பாணம், கே.சிவகரன் - மீசாலை, எஸ்.ஆரதி - வட்டுக்கோட்டை, ஜி.உமா ரமணன் - மட்டக்களப்பு, கே.பிரதீபா - புத்தூர், ரி.மதுரா - புத்தூர், எஸ்.சுதர்சினி - யாழ்ப்பாணம், ஜே.நல்லநாதன் - கோப்பாய், எஸ்.கமலநாதன் - இளவாலை, எஸ்.சிவநேசன் - சித்தன்கேணி, ஆர்.பிரியதர்சினி - யாழ்ப்பாணம், ரி.சுஜிகரன் - இளவாலை, எஸ்.சதீசன் - சாவகச்சேரி, எஸ்.சதீஸ்வரன் - சாவகச்சேரி.

எஸ்.விக்னேஸ்வரன் - யாழ்ப்பாணம், எஸ்.தயாளன் - உடுப்பிட்டி, ஆர்.றஜீந்தினி - சண்டிலிப்பாய், வி.நிரஞ்சனி - கோண்டாவில், ஏ.கிருஷ்ணவேணி - கோட்டைக்கல்லாறு 2, பி.அரவிந்தன் - உடுப்பிட்டி, எஸ்.சாமினி - தெல்லிப்பளை, வி.குமரன் - அல்வாய், கே.வாசுகி - யாழ்ப்பாணம், எம்.ஜெயராம் - பருத்தித்துறை, வி.வாசுகி - மொரட்டுவ, ஆர்.இராஜலோஜினி - கரவெட்டி, ரி.மகிஜா - சுன்னாகம், என்.விஜிந்தன் - ஏழாலை, ஆர்.சஞ்ஜீவன் - கிளிநொச்சி, ரி.தர்மராஜா - யாழ்ப்பாணம், பி.பிரதாப் - நீர்வேலி, கே.கோகுலன் - மிருசுவில்.

சி.கோகுலகாந் - ஏழாலை, எஸ்.சுபேந்திரன் - கோண்டாவில், எம்.அனுசியா - யாழ்ப்பாணம், எஸ்.இராஜகுமார் - சாவகச்சேரி, ரி.சுகன்யா - யாழ்ப்பாணம், கே.புவிகாந்த் - கொடிகாமம், ரி.மதிகரன் - உடுப்பிட்டி, கே.றிசிகேசன் - யாழ்ப்பாணம், கே.பிரசன்னா - சுன்னாகம், கே.நித்தியபரன் - சண்டிலிப்பாய், எஸ்.சேந்தன் - புத்தூர், கே.லவக்குமரன் - வல்வெட்டித்துறை, என்.தனஞ்செயன் - உடுப்பிட்டி, கே.சதீஸ் - பண்டத்தரிப்பு, கே.சுஜநிதா - அச்சுவேலி, வி.முரளீதரன் - வரணி.

ரி.காயத்திரி - யாழ்ப்பாணம், என்.வைகுந்தன் - கொக்குவில், கே.சுரேஸ்குமார் - காங்கேசன்துறை, ஜெ.ஜெயமரினோ - இளவாலை, ஏ.சுரேஸ் ஆனந்தன் - சுன்னாகம், எம்.சஞ்ஜீவன் - யாழ்ப்பாணம், எஸ்.சாருமதி - அச்சுவேலி, கே.பிரசாந்தன் - சாவகச்சேரி, எஸ்.சயந்தன் - வட்டுக்கோட்டை, கே.மதிரூபன் - உடுப்பிட்டி, கே.மேனகா - வல்வெட்டித்துறை, என்.பிச்சன் - கரவெட்டி, ஜெ.கோபிகிருஷ்ணா - யாழ்ப்பாணம், ரி.நிசாந்தினி - உடுப்பிட்டி.

எம்.பிரபாகரன் - பளை, வி.கார்த்தீபன் - கிளிநொச்சி, பி.பாமிலா - கிளிநொச்சி, என்.பாமா - யாழ்ப்பாணம், என்.நவரதனி - வவுனிக்குளம், எம்.கருணாமூர்த்தி - வவுனியா, ரி.சுகர்சன் - வவுனியா, ஜி.கஜதீபன் - வவுனியா, ரி.கோபி - மூதூர், கே.காயத்திரி - திருகோணமலை, வை.நிரோசிதா - திருகோணமலை, பி.ஜனப்பிரியன் - கல்முனை 02, ரி.பி.கபில்ராஜ் - திருக்கோவில், வி.சபேசன் - தம்பிலுவில் 02, ஏர்.ஆர்.எம்.றஸ்லீன் - சம்மாந்துறை 02, வி.பிரியலோஜினி - காரைதீவு 12, யு.பிரியதர்சன் - தம்பிலுவில் 01.

## விசேட கற்கைநெறி

ஜெ.அனுஷா - நாகர்கோவில், ஆர்.நதவர்சனி - திருநெல்வேலி, எம்.ஐ.அஸ்மீன் - பலகல, எம்.திஸரூபன் - பூநகரி, பி.திரியாம்பக்கி - கேகாலை, கே.சிவதர்சினி - கிளிநொச்சி, எஸ்.லக்ஷ்மிபிரபா - யாழ்ப்பாணம், வை.பிறேம்நாத் - வவுனியா, ரி.தர்சிகா - சாவகச்சேரி, எஸ்.சக்திதர்சன் - குப்பிளான், வி.மண்டலேஸ்வரன் - பளை, வி.விநாயகமூர்த்தி - கைதடி, எஸ்.நிசாந்தன் - முல்லைத்தீவு, ஈ.அஜந்தினி - தீவகம், ஆர்.ஜனன், கிளிநொச்சி, பி.கார்த்திகா - அளவெட்டி, ஆர்.றிசாலினி - அக்கரைப்பற்று.

ஏ.எல்.எம்.கலீம் - ஒலுவில் 05, வி.சாளினி - தாளையடி, கே.தேவிகா - சாவகச்சேரி, பி.சுரேஸ் - பருத்தித்துறை, பி.வனஜா - கோப்பாய், ரி.யதுகுலதரன் - மானிப்பாய், ரி.றமேஸ் - வவுனியா, கே.ஜெகரூபன் - இளவாலை, எஸ்.பிரதீபன் - சுன்னாகம், ஏ.அனிதா - பருத்தித்துறை, எம்.எம்.முபாரிஸ் - மருதமுனை 03, எஸ்.மலர்விழி - யாழ்ப்பாணம், கே.யோகநாயகி - மட்டக்களப்பு, ஜே.ஜெஜீபன் - புத்தூர், ஆர்.சோபிகா - இயக்கச்சி, எம்.தவச்செல்வம் - யாழ்ப்பாணம், ரி.துசாந்தினி - யாழ்ப்பாணம், எஸ்.டிமியா - யாழ்ப்பாணம், நிருபா - சங்கானை, எஸ்.இந்திராதேவி - மானிப்பாய், கே.சிந்துஜா - கரவெட்டி, ஏ.சர்மினி - சண்டிலிப்பாய், எஸ்.சிவசொரூபன் - தெல்லிப்பழை, கே.ராகுலன் - கல்வயல், எம்.உதயா - காரைநகர், வி.மேரி யூடிட் - வவுனியா,

எப்.ஏ.ஜெயந்தன் - மன்னார், எம்.விஜிதன் - மன்னார், எஸ்.சுசீலன் - முல்லைத்தீவு, ஜே.நிரஞ்சனா - முள்ளியவளை, எஸ்.ரஜிதரன் - முல்லைத்தீவு, டபிள்யூ.ஏ.ஹன்சுல் அஷ்மி - திருகோணமலை, ஆர்.ரஷ்மி - மூதூர் 01, எவ்.எம்.ரஃப்டீன் - கிண்ணியா, வி.ஜடா - வவுனியா, ஜே.சோபியா - யாழ்ப்பாணம்,

பி.யோகராணி - வவுனியா, ரி.முரளிதரன் - காரைதீவு 09, எஸ்.எம்.அமான் - சாய்ந்தமருது 01, ஏ.சி.எம்.அனீஸ் - சாய்ந்தமருது 12, எம்.ஐ.சியாத் - பாலமுனை 03, ஜே.செந்தில்நாதன் - சம்மாந்துறை, ரி.எஸ். ஏ.ஹூசைன் - நிந்தவூர் 04

## விவசாயம்

ஏ.எம்.பஃக்மி - கிண்ணியா 02, எஸ்.யதர்னி - வவுனியா, ஐ.தாட்சாயினி - சுன்னாகம், ஏ.சந்திரிகா - மட்டக்களப்பு - கே.பிரசாந்தி - மட்டக்களப்பு, எம்.மனோரஞ்சினி - வவுனியா, வி.எம்.ரவ்ஷான் - கிண்ணியா 03, ரி.கஜேந்தினி - மட்டக்களப்பு, எம்.ரி. ஷவ்னியா - தம்பதெனிய, ரி.எம்.ஜரூக் - கிண்ணியா 04, ஜே.எம்.ரபீக் - சைனாபே, எஸ்.மடோனா - வவுனியா, ஏ.தலீபா உம்மா - பொலநறுவ, ஏ.எஸ்.சலீம் - கிண்ணியா 03, எஸ்.யசோதரன் - கிளிநொச்சி -

எம்.ஏ.நுஃமான் - கிண்ணியா 03, ஆர்.பிரதீபா - வவுனியா, ஏ.அனித்தராஜி - முல்லைத்தீவு, ஈ.ஸ்ரென்சி நிருஜா - வவுனியா, எஸ்.எழிலரசி - வவுனியா, எஸ்.ரட்ணம் - அக்கரைப்பற்று 08, என்.விமலேஸ்வரன் - வவுனியா, பி.ராஜ்குமார் - யாழ்ப்பாணம், ஜே.றோஸ் கப்ரியல் - வவுனியா, ரி.சியாமிளா - வவுனியா, எஸ்.ஜெகதீபன் - வட்டக்கண்டல், எஸ்.சுலக்சனா - மட்டக்களப்பு, ஏ.எம்.நஜீம் - கிண்ணியா 06, எஸ்.போல்ராஜா - லுனுகல.

## ஆங்கிலம்

ஏ.எல்.உம்மு கபீபா - பண்டாரகோஸ்வத்த, பி.பிரதீபா - மாத்தளை, ரி.விஜிதலோஜினி - சுன்னாகம், எஸ்.ஜே.சி.சமலி - மாத்தளை, ஆர்.எவ்.நிகசா - நிகம்பஹறா, என்.எவ்.ருபிகா - கலவெல, எஸ்.மொகமட் நிசார் - நகொல்லகொட, கே.எல்.ஷகதியா - ஒட்டமாவடி, ரி.சுலக்சனா - மாவத்தகம, ஆர்.கோமதி - ஹொப்ரன், யு.ஜெஸ்மின் - அக்கரைப்பற்று 06, எம்.நந்தகுமார் - தர்கா ரவுன், ஜே.இஸ்தார் - வவுனியா, எஸ்.வசந்தகுமாரி - நிவிதகல, எஸ்.எவ்.டுல்சி - கேகாலை, எம்.வை.எம்.பசீர் - அம்பலாந்தோட்ட, எம்.என்.எவ்.நவ்லியா - பண்டாரகம, பி.சலிகா - குருதலவ, எம்.எம்.எம்.ரலீம் - அரநாயகே, எம்.எஸ்.எவ்.றினோசா - கேகாலை, எஸ்.சகிதா - முன்னேகுலம, இசற்.எவ்.இஹ்றாம் - அம்பலாந்தோட்டை, எம்.எல்.நிரோஷா பேகம் - புப்போகம, எஸ்.எவ்.பர்ஷனா - உடதலவின்ன, எம்.எவ்.எம்.இர்ஷாத் - பதுளை, எம்.எஸ்.எம்.பஹ்யான் - பண்டாரகம, எம்.எம்.சீனியா - அவிசாவளை, எம்.என்.என்.சரீனா - பாணந்துறை, எம்.வை.எம்.அஷ்ரக் - மாத்தளை, எம்.எம்.கே.ருவிஷா - காத்தான்குடி 02

## நாடகமும் அரங்கியலும்

எஸ்.செல்வகுமார் - கல்முனை, ஏ.தர்மலிங்கம் - மட்டக்களப்பு, ஏ.பகவதி - மட்டக்களப்பு, கே.தர்சினி - கல்முனை, ஜி.பிரியதர்சினி - மட்டக்களப்பு, எஸ்.சுகன்யா - கரவெட்டி, பி.உமாகாந்தன் - கிளிநொச்சி, ஆர்.எஸ்.சதீஸ்குமார் - செட்டிபாளையம், கே.தீபரஜினி - கல்முனை, டி.உதயச்செல்வன் - மட்டக்களப்பு, வசந்தகுமார் - கல்முனை, ஏ.பாமதி - மன்னார், எஸ்.எம்.டிலிமா - மட்டக்களப்பு, எஸ்.இளங்கீரன் - செட்டிபாளையம், ஜி.சுதாகரன் - கரவெட்டி, எம்.எம்.ஏ.திரேசா - யாழ்ப்பாணம், கே.நிசாந்தன் - களுவாஞ்சிக்குடி, என். நிர்மலா - பண்டத்தரிப்பு, எஸ்.தயானி - இணுவில், கே.ஜீவிதா - பண்டத்தரிப்பு, ரி.பிரியாழினி - மட்டக்களப்பு, ஏ.பிரபாகரன் - தீவகம், எஸ்.ரஹீல் - மட்டக்களப்பு, எஸ். துஷ் யந்தி - சுன்னாகம், எஸ்.ராஜாராம் - யாழ்ப்பாணம், எல்.ராஜரட்ணம் - மட்டக்களப்பு, ஏ. யோகமலர் - மன்னார், பி.நந்தகுமார் - வல்வெட்டித்துறை, ஏ.உமாப்பிரியா - களுவாஞ்சிக்குடி, ஏ.ரட்ணம் - கரவெட்டி, ஆர்.சிவரூபி - பருத்தித்துறை, ஆர்.தாரணி - காரைநகர் - பி.றினோத் - கொடிகாமம் -

ஜே.மரியதாஸ் - மடத்தடி - ஜே.யதுஷானந்த - சுன்னாகம், எஸ்.விஜிதா - பண்டத்தரிப்பு - இ. ஜிவநந்தினி - தீவகம், வி.பிரகாஷ் - நீர்வேலி, எல்.நிசாந்தன் - மல்லாகம், என்.சிறிவிஜி - நீர்வேலி, எஸ்.மேகலா - மிருசுவில், வி.தயாநிதி - கல்முனை, கே.கே.ஆர்.பிரபாபு - கல்முனை, எஸ்.கோபு - கல்முனை, எஸ்.கோமதி, நாவிதன்வெளி, ரி.பாலச்சந்திரன் - கல்முனை

## தமிழ்

எம்.பி.னுஷ்ரா ரஃபி, ஆரையம்பதி, என்.ஊர்மிளா - கல்முனை, வி.தர்சினி - பருத்தித்துறை, பி.ஏகலிங்கம் - வழைச்சேனை, எஸ்.ரூபவேணி - கல்முனை, ஐ.எஸ்.ஷாஜகான் - முன்னிகுலம, ஏ.கந்தசாமி - கிளிநொச்சி, எஸ்.ரட்ணசிங்கம் - புத்தூர், ரி.சுதர்சன் - வட்டுக்கோட்டை, எஸ்.யசோதா - மாங்குளம், ஏ.ஆர். மொகமட் றிம்ஷான் - அட்டாளச்சேனை 1, ஏ.தமிழினி - தம்பிலுவில் 01,

ஐ.எல். எம்.றிஸ்வான் - சம்மாந்துறை, எம்.ஐ.எவ்.சம்ஷிதா - மருதமுனை 02, ஏ.றஹீம் - சம்மாந்துறை, ரி.காயத்திரி - வல்வெட்டித்துறை, எம்.வை.எம்.தஸ்ரீவ் - மருதமுனை 06, ஏ.எல்.எம்.ஹரீத் - சாய்ந்தமருது 10, ஏ.பௌசுனா - சம்மாந்துறை 02, ஆர்.நிலாயினி - அக்கரைப்பற்று, கே.நிரோசினி - வத்தகொட, ஏ.ஆர்.எஸ்.அன்வர் - நிந்தவூர் 04, எம்.உதயா - காரைநகர், பி.எவ்.பிரியசினி - மட்டக்களப்பு, எம்.ஏ.சஜிதா - கல்முனை, வி.ரி.மொகமட் ஜனூன் - ஏறாவூர் 01, ரி.தவராசா - மிருசுவில், எஸ்.ராஜரட்ணம் - நீர்வேலி, கே.தினேஸ் - யாழ்ப்பாணம்,

பி.பாலதர்சினி - பளை, எம்.ஜே.எம். நியாஸ் - ஹற்றன், பி.சுபகலா - கந்தப்பொல, எஸ்.கிருபானந்தராஜா - ஹற்றன், என்.சுதாஜினி - கரவெட்டி, எஸ்.மதுரா - சுன்னாகம், வை. முகுந்தன் - யாழ்ப்பாணம், எஸ.வசீகரநாதன் - வரணி, ரி.நவரட்ணமலர் - பருத்தித்துறை, ரி.வதனரூபன் - மிருசுவில், என்.பாமினி - யாழ்ப்பாணம், எம்.உஷாபேபி - உரும்பிராய், எஸ்.பிரதீபன் - மானிப்பாய், கே.பூபாலசிங்கம் - கிளிநொச்சி, பி.ஸ்ரீபன் - பளை, கே.பத்மாவதி - வட் டக்கச்சி,

எஸ்.ரவீந்திரன் - உடையார்கட்டு, ஏ.ஜெயநேசன் - முல்லைத்தீவு, ஆர்.சசிகரன் - முல்லைத்தீவு, ரி.கோகிலப்பிரியன் - நெடுந்கேணி, ஈ.ராஜநந்தினி - வவுனியா, எம்.நிர்மலகணேஷ் - வவுனியா, என்.சிவரஞ்சனி - மூதூர், ரி.வதனகுமாரி - மூதூர், ஏ.எஸ்.மொகமட் நசீர் - கிண்ணியா 05, எம்.எஸ். பஸ்னின் - கல்முனை, கே.சுதர்சன் - திருக்கோயில் 01, ஏ.எல்.அஸ்மீர் - சம்மாந்துறை 01, கே.அருள்வாணி - கல்முனை, பி.விஜிதா - சம்மாந்துறை, எ.கே.ஷிபானா - அட்டாளைச் சேனை 02

## சங்கீதம்

எஸ்.சிவகரன் - சாவகச்சேரி, ஈ.தேன்மொழி - தெல்லிப்பளை, கே.அஜந்தினி - பருத்தித்துறை, ஆர்.பிரியதர்சினி - சித்தன்கேணி, எஸ்.கவிதா - தெல்லிப்பளை, எஸ்.அருணா - கோப்பாய், ரி.விஜிதலோஜினி - சுன்னாகம், கே.கோபிகா - வரணி, எஸ்.யமுனா - வரணி, ரி. ராசரட்ணம் - பரந்தன், ஆர்.லதாங்கினி - மல்லாவி, ஜே.ஆர்.சசிகலா - முருங்கன், எம்.சுபாசினி - கோண்டாவில், எம்.கார்த்திகா - சுன்னாகம், எஸ்.சங்கரேஸ்வரன் - நெடுங்கேணி, ரி.சுலக்சனா - குப்பிளான், பி.கோகிலா - கொடிகாமம், ரி.மகிஷா - சுன்னாகம், ரி.கைலன் - வவுனியா, ரி.கல்யாணி - தாளையடி, எஸ்.தயாளினி - சுழிபுரம், வி.புஷ்பவாணி - ஊர்காவற்துறை, வி.கணேஸ்வரன் - சங்கானை, எஸ்.விஜயலலிதா - முருங்கன்,

ஆர்.ரதிகா - பரந்தன், ஆர்.கமலவேணி - கொடிகாமம், பி.அஜந்தா - யாழ்ப்பாணம், கே.நடராஜா - யாழ்ப்பாணம், எஸ்.சங்கரேஸ்வரி - நெடுங்கேணி, எஸ்.விஜிதா - ஒட்டுசுட்டான், ஆர்.ஜெய தர்சினி - இணுவில், எவ்.ஏ.பிரியந்தினி - யாழ்ப்பாணம், எஸ்.புவனேஸ்வரி - நீர்வேலி, என்.சுமித்திரா - கொடிகாமம், ரி.கலைவாணி - இணுவில்,

பி.தர்சிகா - கொக்குவில், எஸ். சங்கீர்தா - சுன்னாகம், ரி.சங்கீதா - வரணி, என்.மகாதிலகலட்சுமி - உரும்பிராய், கே.சேனுயா - உடுவில், எஸ்.சுவிதா - வரணி, எம்.லலிதா - மானிப்பாய், கே.யசோதா - நெடுங்கேணி, எம்.தினேஸ்குமார் - காரைநகர், கே.சிறிதரன் - வவுனியா, எஸ். வினோஜிதா - திருகோணமலை, ஆர்.அனுஷியா - திருகோணமலை, கே.அஜந்தா - திருகோணமலை, எஸ்.தவச்செல்வன் - கல்முனை 02, கே.மேகலா, காரைதீவு.

## இந்துசமயம்

வி.தர்சினி - பருத்தித்துறை, பி.ஏகலிங்கம் - வாழைச்சேனை, ஏ.கந்தசாமி - கிளிநொச்சி, எஸ்.ரட்ணசிங்கம் - புத்தூர், கே.மீரா - மீசாலை, ரி.சுதர்சன் - வட்டுக்கோட்டை, எஸ்.யசோதா - மாங்குளம்,

ஏ.தமிழினி - தம்பிலுவில் 01, கே.நிரோசினி - வட்டகொட, எஸ்.திருக்கேதீஸ்வரன் - பருத்தித்துறை, பி. பிரதீபா - யாழ்ப்பாணம், வி.ஜீவரஜனி - யாழ்ப்பாணம், கே.தினேஸ் - யாழ்ப்பாணம், எம்.வத்சன் - வவுனியா, கே.மைதிலி - சாவகச்சேரி, என்.சிவரஞ்சனி - மூதூர்,

கே.கே.சர்மினி - சாவகச்சேரி, எஸ்.நாராயணி - அச்சுவேலி, வை.முகுந்தன் - யாழ்ப்பாணம், எம்.ஆர்த்திகா - இணுவில், பி.தர்மசீலன் - கொக்குவில், கே.சுதர்சன் - திருக்கோயில் 01, எஸ்.கமலேஸ்வரன் - மீசாலை, ஆர்.நிலானி - வவுனியா, ஏ.தாரகா - திருகோணமலை,

ரி.கோகிலப்பிரியன் - நெடுங்கேணி, பி.விஜிதா - சம்மாந்துறை, எஸ்.தாட்சாயனி - வவுனியா, எஸ்.வசீகரநாதன் - வரணி, எஸ்.மதனிகா - சாவகச்சேரி, எஸ்.பிறேமினி - மீசாலை, பி.ஸ்ரீபன் - பளை, ரி.நவரட்ணமலர், பருத்தித்துறை - ஏ.பகவதி - மட்டக்களப்பு, என்.மனோகரன் - திருகோணமலை, ஜே.மதுரா - வரணி,

எம்.நிரோஜினி - குருக்கள்மடம், கே.பத்மாவதி - வட்டக்கச்சி, எஸ்.துவாசினி - மீசாலை, என்.தவராசா - முல்லைத்தீவு, என்.வதனகீதா - கரவெட்டி, எஸ்.ரமேஸ்குமார் - வட்டகொட, கே.குகனேஸ்வரி - வட்டகொட, கே.விஜயகாந்தன் - கொடிகாமம், என்.அனித்தா - மானிப்பாய், பி.மோகன்ஜா - யாழ்ப்பாணம் -

எஸ்.சிவதரிசி - கோண்டாவில், எம்.சுதர்சினி - நயினாதீவு, பி.காயத்திரி - உடுப்பிட்டி, கே.ரேணுகா - வல்வெட்டித்துறை, ஏ.வானதி - அச்சுவேலி, ரி.சிவதர்சினி - யாழ்ப்பாணம், பி.கோபிகா - கோண்டாவில், வி.கிருஷ்னவேணி - சுழிபுரம், ரி.நிசாந் - வல்வெட்டித்துறை, பி.விஜயவர்தனி - கரவெட்டி, வி.துளசி - அச்சுவேலி, ஏ.முத்துலிங்கம் - சித்தன்கேணி, வி.குமணரஞ்சினி - பரந்தன்,

வி.வினோதினி - கிளிநொச்சி, பி.பிரகலாதன் - பூநகரி, வி.குமுதினி - மடு தேவாலயம், எம்.சிந்துஜா - மன்னார், பி.சியாமளா - அடம்பன், கே.மைதிலி - முள்ளியவளை, ஏ.பிரபாகர் - புதுக்குடியிருப்பு, ரி.கார்த்திகா - முள்ளியவளை, கே.நிரஞ்சனி - வவுனியா, எஸ்.செல்வரட்ணம் - வவுனியா,

எஸ்.எஸ்.ரசீகரம் - வவுனியா, பி.ஜெயசீலன் - ஈச்சிலம்பற்று, ரி.அகிலன் - மூதூர், எஸ்.கமலேஸ்வரன் - ஈச்சிலம்பற்று, ஏ.சந்திரிகா - தம்பிலுவில் 01,

எம்.குமுதன் - காரைதீவு 01, எஸ்.சரண்யா - காரைதீவு 10, வை.கமலினி - கல்முனை, வி.சர்மிளாதேவி - கல்முனை, எஸ்.சந்திரப்பிரியா - மல்வத்த, ஜி.சரண்யா - அக்கரைப்பற்று 07, கே.தேவதாசன் - கல்முனை, யு.இசற்.ஜயஷானி - சிலாபம், எஸ்.கருணேஸ் - புத்தளம்

## நடனம்

ரி.ஏ.தாரணி - கொச்சிக்கடை, ஏ.தமிழினி - தம்பிலுவில் 01, தர்மலிங்கம் - மட்டக்களப்பு, பி.சர்மிளா - சாவகச்சேரி, எஸ்.சங்கீதா - புதுக்குடியிருப்பு - எம்.பிரியா - தம்பிலுவில் 02, ஜி.டொன் பஸ்கா - முல்லைத்தீவு,

யு.பி.சுப்பிரமணியம் - யாழ்ப்பாணம், ரி.வினோதினி - செட்டிபாளையம், ஆர்.கிரிசுதா - கொக்குவில், எஸ்.நீரஜா - மட்டக்களப்பு, வீ.வரதினி - வவுனியா, பி.தாட்சாயணி - இணுவில், ரி.ஜெயரஞ்சினி - யாழ்ப்பாணம், ரி.சுகப்பிரியா - திருகோணமலை,

எஸ்.அஸ்வினி - மட்டக்களப்பு, ரி.சுரேகா - உடுப்பிட்டி, கே.சிவக்கொழுந்து - வட்டக்கச்சி, ஏ.சுஜாத்தா - ஆனைக்கோட்டை, எஸ்.கார்த்திகா - சுன்னாகம், ஜே.சோபியா - மன்னார், ஏ.சுதர்சிகா - தர்மபுரம், எஸ்.சிவகௌரி - முள்ளியவளை,

எஸ்.கணேஸ்வரன் - சங்கானை, கே.சியாமளா - வவுனியா, ஜே.அந்தோனிராஜன் - எழுதூர், எம்.அனுஷா - கொக்குவில், எஸ்.அஸ்வினி - களுவாஞ்சிக்குடி, ரி.கிருபாஹரி - தம்பிலுவில் 01, கே.மாலதி - கொடிகாமம், ஏ.சிந்துஜா - யாழ்ப்பாணம், எச்.உஷாந்தினி - ஊர்காவற்துறை - ஜி.டல்சி - உரும்பிராய்,

வி.ஜீவிதா - கோப்பாய், எஸ்.விவிதா - கரவெட்டி, எஸ்.லஜின்ரா - மானிப்பாய், எஸ்.நிரேஜா - ஏழாலை, பி.சுவர்னா, அல்வாய், எம்.சுஜித்தா - கொடிகாமம், ஏ.அனித்தா - கோப்பாய், ஆர்.அனுசியா - கரவெட்டி, கே.வித்யா - கோண்டாவில், ஈ.சர்மிளா - வவுனியா,

பி.லோஷனா - கரவெட்டி, ஆர்.சரண்யா - வவுனியா, எஸ்.மேகலா - திருகோணமலை, ரி.சுஜந்தினி - அம்பாறை, எல்.தீபானந்தி - கல்முனை 03, ஆர்.ராஜ்பிரவீனா - தம்பிலுவில் 01, எம்.டினோஷா - கல்முனை 02, பி.கிரியாணி - திருக்கோயில் 02, எஸ்.சுபோதினி - தம்பிலுவில் 02,

## விஞ்ஞானம்

எச்.டி.மும்தாஜ் பமிலா - கல்கமுவ, வி.கௌரிபாலன் - கிளிநொச்சி, ஆர்.எவ்.எவ்.ஷரூபா - டெல்தோட்ட, ஏ.பி.எவ்.டானியா - காத்தான்குடி - 02, எஸ்.எம்.நஸ்ராத் ஜகன் - புத்தளம், வி.ஐங்கரதாசன் - கரவெட்டி, ரி.கௌதமி - வவுனியா, பி.கஜேந்திரன் - வல்வெட்டித்துறை, எஸ்.நித்தியரூபன் - கோப்பாய்,

கே.வசந்தி - மாத்தளை, ஏ.எல்.எம்.கிஷாம் - இறக்காமம், எஸ்.தயாளன் - உடுப்பிட்டி, பி.அரவிந்தன் - உடுப்பிட்டி, எம்.ஏ.பிலிக்ஸ் - வவுனியா, எம்.ஏ.எம்.அலியார் - மல்வத்த, ரி.கோகுலன் - வவுனியா, வி.வசந்தன் - மட்டக்களப்பு,

எம்.எஸ்.பிபாஷா - தெஹிவளை, ஆர்.சஞ்சீவன் - கிளநொச்சி, கே.ஜெயவாணன் - பூநகரி, எம்.விஜயதர்சன் - மட்டக்களப்பு, பி.மோகனதாஸ் - தம்பிலுவில் 01, ஜே.பகீரதன் - சித்தாண்டி, எம்.ராஜமேனகன் - சுன்னாகம், கே.புவிகாந்த் - கொடிகாமம்,

பி.துஷாந்தி - கரவெட்டி, ரி.மதிகரன் - உடுப்பிட்டி, எம்.எச்.இசற்.ஹரீரா - கொழும்பு 14, எஸ்.சஞ்சிகா - மட்டக்களப்பு, எல்.ரி.எஸ்.பிரசாந்தினி - வல்வெட்டித்துறை, எம்.எம்.றிஸ்வி - ஓட்டமாவடி 03, ஏ.ஆர்.யூ.சலீமா - குளியாப்பிட்டிய, என்.பரராஜசிங்கம் - தெஹிவளை, எம்.நிரூபா - காரைதீவு 05, ஏ.குருமதி - மானிப்பாய்,

பி.தாட்சாயனி - விசுவமடு, எஸ்.சுதாமதி - இளவாலை, எம்.ரஜீவ்வாசன் - மட்டக்களப்பு, யூ.சகாப்தீன் - சம்மாந்துறை, என்.காண்டீபன் - மட்டக்களப்பு, எஸ்.எஸ்.சிவராஜா - வவுனியா, ஏ.எம்.றிஸ்வான் - நயினாகாடு, ஜி.அனுதர்சன் - தீவகம், ஏ.சுமன் - கல்முனை, ஏ.பாத்திமா ருக்சனா - சியாம்பலகஸ்கொட்டுவ, கே.பிரசாந்தன் - சாவகச்சேரி, எஸ்.எஸ்.றிபானா - மாத்தளை, எஸ். ரி.சிபானா - மருதமுனை,

(தொடரும்)

நமது ஈழநாடு
Namathu Eezhanadu
*The Leading Daily of Tamils' Homeland*

# குடாநாட்டில் படையினரின் ஆளணி வளம் அதிகரிப்பு!

## இராணுவத் தளபதி தெரிவிப்பு

கொழும்பு —

யாழ். குடாநாட்டின் புலோலிப் பகுதியில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலை அடுத்து - இராணுவத்தினரின் ஆளணி வளம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன், சுற்றிவளைப்புகள் போன்ற நடவடிக்கைகளுக்காக இராணுவத்தினருக்குத் தேவையான போக்குவரத்து வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி லெப். ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

கொழும்பிலிருந்து வெளிவரும் ஆங்கில நாளிதழொன்றுக்கு அளித்த பேட்டியிலேயே இராணுவத் தளபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

யாழ். குடாநாட்டில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் போன்ற தாக்குதல்கள் மேலும் நடக்காமல் தடுப்பதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இராணுவத்தினர் ஏற்கனவே எடுத்துள்ளனர்.

யாழ். குடாநாட்டின் அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதியில் பெருமளவான விடுதலைப் புலிகள் தங்கியிருந்து தாக்குதலை நடத்துவதென்பது சாத்தியமில்லை. யாழ்ப்பாணத்தில் நிலவும் தற்போதைய நிலைமையைத் தணிப்பது தொடர்பாக விடுதலைப் புலிகளின் பிரதேச தலைவர்களுடன் பேச்சு நடத்துவது அரசியல்வாதிகளின் வேலையாகும். விடுதலைப் புலிகளுடன் இராணுவம் பேச்சுக்களை நடத்துவதில்லையெனத் தீர்மானித்துள்ளது எனத் தெரிவித்தார்.

இதேவேளை, புலோலியில் இராணுவத்தினர் மீது நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலை அடுத்து யாழ். குடாநாட்டுக்கு விஜயம் செய்த இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, அனைத்து களமுனைத் தளபதிகளையும் சந்தித்து பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# தமிழக கரையோரத்தில் பாதுகாப்பு அதிகரிப்பு!

சென்னை —

இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் மூளும் அபாயநிலை தோன்றியுள்ளதால் -

தமிழ் நாட்டின் இராமநாதபுர மாவட்டத்திலுள்ள கடற்படை, கடலோர காவற்படை, கியூ பிராஞ், புலனாய்வுப் பிரிவு, பொலிஸார் மற்றும் மீன்வளத் துறை அதிகாரிகளுக்கு கடலோரப் பாதுகாப்புக் குறித்த அவசர ஆலோசனைக் கூட்டமொன்று விரைவில் நடத்தப்படவுள்ளதாக மாவட்ட அதிகாரி செல்லமுத்து தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது -

இலங்கையில் போர் மூளும் பட்சத்தில் தமிழ் நாட்டிற்கு அகதிகள் வந்தால் ஏற்படும் பிரச்சினைகளைச் சமாளிக்க இராமநாதபுரம் மாவட்ட நிர்வாகம் தயாராக உள்ளது., அகதிகள் வந்தால் அவர்கள் அனைவரையும் மண்டபமுகாமில் தங்கவைக்க தேவையான அனைத்து முன்னேற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அத்துடன், விரைவில் நடத்தப்படவுள்ள கூட்டத்தில் மாவட்ட நிர்வாகம் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் குறித்து ஆலோசிக்கப்படும். அகதிகள் என்ற போர்வையில் போராளிகள் ஊடுருவிவிடாமல் தடுக்கும் வகையில் 24 மணி நேரமும் கடலோரப்பகுதி முழுவதும் தீவிரமாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மகிந்தவின் இந்திய...

ராஜபக்ஷ முன்வைத்த கோரிக்கைகளுக்குச் சாதகமாகப் பதிலளிக்கப்படவில்லை.

இதனால் தனது மூன்று நாள் விஜயத்தின் மூலம் இந்தியாவின் பேராதரவுடன் புலிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை சர்வதேச அரங்கில் முன்னெடுக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ போட்டிருந்த திட்டங்கள் தோல்வியில் முடிந்திருப்பதாகத் தெரியவருகிறது.

ஒற்றையாட்சிக்குள் தீர்வு என்ற நிலைப்பாட்டில் இறுக்கமாக இருக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கு - இந்தியத் தலைவர்கள் கூடுதல் அதிகாரப் பரவலை வழங்கும் சமஷ்டி அரசியல் தீர்வே பொருத்தமானதென இறுக்கமாகத் தெரிவித்துள்ளனர்.

இது மகிந்த ராஜபக்ஷவுக்கும் ஜே.வி.பி. மற்றும் ஹெல உறுமய போன்ற இனவாதக் கட்சிகளுக்கும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியிருக்கிறது.

இதேவேளை - சமாதான முயற்சிகளில் நேரடியாகத் தலையிடவும் இந்தியா விரும்பவில்லை என்பதுடன் நோர்வேயின் பங்களிப்பை வரவேற்றுள்ளது.

பாதுகாப்பு உடன்பாடு உள்ளிட்ட இந்திய இராணுவ உதவிகளை இலங்கை அரசு எதிர்பார்த்தபோதும் - அது குறித்த பேச்சுக்கள் நடத்தப்படவில்லை என்றும் கூறப்படுகிறது.

இவற்றைவிட தமிழக முதல்வர் ஜெயலலிதா - ஜனாதிபதி மகிந்தவை சந்திக்க மறுத்துவிட்டதும் - இதனால் இவரது சென்னைப் பயணம் இரத்தானதும் தமிழகத் தலைவர்களின் வெறுப்புக்குரியவராக மகிந்த அடையாளப்படுத்தப்பட்டுள்ளார் என் பதை எடுத்துக்காட்டுகிறது.

மகிந்த ராஜபக்ஷவின் விஜயத்தின் இறுதியில் நேற்றுமாலை வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் கூட இலங்கை அரசு எதிர்பார்த்த எந்த விடயமும் உள்ளடக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒட்டுமொத்தத்தில் மகிந்த ராஜபக்ஷவின் இந்திய விஜயம் அவருக்குப் படுதோல்வியைக் கொடுத்திருப்பதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

அதேவேளை, சமாதானப் பேச்சுக்களை விரைவில் மீளத் தொடங்குவதென்ற இலங்கை அரசின் நிலைப்பாட்டை இந்திய அரசாங்கம் வரவேற்றுள்ளதாக இரு நாடுகளும் இணைந்து வெளியிட்ட கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கூட்டறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடனான கலந்துரையாடலில்- படையினர்மீது அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் மற்றும் வன்முறைகள் குறித்து ராஜபக்ஷ எடுத்து விளக்கினார். இந்த வன்முறைகள் போர்நிறுத்த உடன்படிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்துமென இருவரும் கவலையடைந்தனர்.

சமாதானப் பேச்சுவார்த்தையை விரைவில் தொடங்குவதென்ற இலங்கையின் நிலைப்பாட்டை இந்தியா வரவேற்றது. அத்துடன், போர்நிறுத்தத்தை வலுவுள்ளதாக்குவதற்கு விரைவில் பேச்சுக்கள் நடத்தப்படவேண்டுமென்பதில் இரு தலைவர்களும் உடன்பட்டனர்.

இலங்கையின் இறைமை மற்றும் ஒருமைப்பாட்டைப் பாதுகாக்கும் வகையில் இனப்பிரச்சினைக்கான தீர்வு சகலரும் ஏற்றுக்கொள்ளும் வகையில் அதிகாரப் பரவலாக்கலை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்படவேண்டும்.

பிரிவுபடாத இலங்கைக்குள் சகல மக்களும் ஏற்றுக்கொள்ளும் வகையில் ஏற்படுத்தப்படும் தீர்வுக்கு இந்தியா தனது பூரண ஒத்துழைப்பை வழங்கும். சமாதான முயற்சிகள் மூலம் கூடியளவிலான அதிகாரப் பரவலாக்கம் மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யாழ்...

ஜெனரல் மற்றும் லெப். கேணல், கேணல், பிரிகேடியர் தர அதிகாரிகளே தமது முகாமிலிருந்து பலாலி படைத்தளத்திற்கு செல்வதற்கு ஹெலிகளை வழங்குமாறு கோரியுள்ளனர்.

தரைப்பாதை ஊடாக போக்குவரத்தில் ஈடுபடும்போது கைக்குண்டுத் தாக்குதல்கள் மற்றும் கிளைமோர் தாக்குதல்கள் தம்மீது நடத்தப்படுவதாகவும் -

எனவே தமது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டிய தேவை உள்ளதால் யாழ். மாவட்டத்திற்கு நான்கு ஹெலிகளை வழங்குமாறும் அவர்கள் கோரியுள்ளனர்.

# வரணியில்...

சத்தங்களும் தொடர்ந்து கேட்ட வண்ணமிருந்ததாக செய்திகள் தெரிவித்தன. இந்தச் சம்பவத்தில் ஆறு படையினர் காயமுற்றதாக இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

# மட்டக்களப்பில்...

பொலிஸார் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் நான்கு கொன்ஸ்டபிள்கள் காயமடைந்தனர் சேனநாயக்க, தர்மசிறி, அனுர, விமலசிறி ஆகிய பொலிஸாரே காயமடைந்தவர்களாவர்.

இதேவேளை - மட்டு - ஊறணியில் நேற்றுக்காலை 10 மணியளவில் இரு பொலிஸார் மீது இனந்தெரியாத நபர்கள் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததில் ஒருவர் படுகாயமடைந்தார்.

காயமுற்ற ஐந்து பொலிஸாரும் மட்டக்களப்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# அரசடி...

இந்தச் சம்பவத்தில் தமது தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை எனவும் இராணுவ வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. இந்தச் சம்பவத்தை அடுத்து அரசடி வீதியில் பெருமளவு படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டதுடன் பலர் தாக்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் இராணுவ ரோந்து அணி மீது இணுவிலில் நடத்தப்பட்ட தாக்குதலில் கொடிகார என்ற சிப்பாய் காயமுற்று பலாலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நல்லூரில் நேற்றுமுன்தினம் காலை நடத்தப்பட்ட கிரனேட் தாக்குதலில் சிப்பாய் ஒருவர் காயமுற்றதாகவும் இராணுவத் தரப்பு அறிவித்துள்ளது.

# படையினரது...

சிகிச்சை பெறுகின்றனர்.

வீதிச் சோதனைகள் மற்றும் வீடுகளில் படையினரால் கைதுசெய்யப்படுவோர் உரிய சட்ட நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்படாது தொடர்ந்து தடுத்து வைக்கப்படுகின் றனர். இது குறித்து எவ்வித தகவலும் தரப்படுவதில்லை. இவ்வாறு கைதுசெய்யப்படுவோர் காணாமற்போயுள்ளமை கடந்தகால உண்மையாகும்.

படையினரது மேற்குறித்த அத்துமீறல்கள் யாவுமே படைத்தரப்பினரது மனித உரிமை மீறலாகவும், போர்நிறுத்த மீறலாகவும் உள்ளன. அத்துடன் இவை போர்நிறுத்த உடன்படிக்கையை நெருக்குவாரங்களுக்கு உட்படுத்தும் நடவடிக்கைகளாகும். இவை மீறல்கள் என்பதற்கும் அப்பால் திட்டமிட்ட வகையில் போர்நிறுத்த உடன்படிக்கையை வலுவற்றதாக்கி, சமாதான செயற்பாடுகளை முடக்குவதற்கும், போரை தமிழர்கள் மீது திணிப்பதற்கு மான உள்நோக்கம் கொண்டவை யாக உள்ளன என்பது தெளிவாகின் றது.

எம்மால் பெரிதும் மதிக்கப்படுவதும், படையினரது நடவடிக்கைகளால் பெரும் நெருக்குவாரங்களுக்குள் உட்படுத்தப்பட்டுள்ளதுமான போர்நிறுத்த உடன்படிக்கையை பலப்படுத்தி நடை முறைப்படுத்துவதற்கான தங்களது நடவடிக்கையை எதிர்பார்க்கிறோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

D.C.M.
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
A/L 2008
கலை,வர்த்தகம்
ஆரம்பம்
ஜனவரி 7
சனி காலை
8.00 (ப.நே)
(அ-4963)

# மன்னார் கிளைமோருக்கும் புலிகளுக்கும் தொடர்பில்லை

## மாவட்ட அரசியற்துறை அறிக்கை

மன்னார் —

மன்னாரில் நேற்றுமுன்தினம் படையினர் மீட்டதாகக் கூறப்படும் கிளைமோருக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென விடுதலைப் புலிகளின் மன்னார் மாவட்ட அரசியற்துறை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக மன்னார் மாவட்ட அரசியற்துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் -

அரச படையினர் கடந்த ஒரு வார காலமாக மன்னார் மாவட்டத்தில் மக்களின் இயல்பு வாழ்வை சீரழித்து, அவர்களை போர்க்கால நெருக்கடிக்குள் தள்ளிவிட்டுள்ளனர்.

இதனடிப்படையில் கடந்த வெள்ளிக்கிழமை பேசாலைப் பகுதியில் கிளைமோர் தாக்குதலில் கொல்லப்பட்ட கடற்படையினருக்குப் பதிலாக மக்களைப் பழிவாங்கும் நோக்கில் அன்றைய தினம் அதேயிடத்தில் - நூறு வீட்டுத் திட்ட கிராமத்தில் உள்ள நான்கு வயதுக் குழந்தை உட்பட நான்கு பொதுமக்களை வெட்டிக்கொன்று, அந்தக் கிராமத்தில் இருந்த மக்களை அடித்து விரட்டி வெளியேற்றியுள்ளனர். இருபதுக்கும் மேற்பட்ட பொதுமக்களைக் காயப்படுத்தியுள்ளனர். அவர்களின் வீடுகளை தீயிட்டுக் கொளுத்தி வீட்டிலிருந்த உடைமைகளையும் சூறையாடிச் சென்றுள்ளனர்.

இதனால், அந்தக் கிராமத்தில் உள்ள மக்கள் இடம்பெயர்ந்து அருகிலுள்ள பற்றிமா தேவாலயத்தில் இன்று வரை தஞ்சமடைந்துள்ளனர்.

இவர்களில் பலரது நிலை ... றுள்ளது எனத் தெரியாமல் உ... கள் - போர்நிறுத்தக் கண்கா... குழுவிடமும், மனிதநேய அ... களிடமும் முறைப்பாடு செய்து...

பிடிக்கப்பட்ட இளைஞர்கள் ... பாக இவர்கள் விசாரித்தபோது... எவரையும் கைதுசெய்யவில்லை... படையினர் மறுத்துவருவது பல... ஞர்கள் காணாமற்போய்விட... என்ற அச்சத்தை ஏற்படுத்தியு...

எனவே, படையினர் தப... வடிக்கைகளைத் தீவிரப்படுத்... கும் முயற்சியாகவும், தமது ... பாட்டை நியாயப்படுத்தும் ...ோ டும் போர்ச்சூழலை - நெருக்க... மக்களுக்கு ஏற்படுத்தவும் நேற்... தினம் மன்னார் - பட்டித்தே... பகுதியில் இராணுவத்தினரே ... மோரை வைத்து மீண்டும் எடு... யும், மன்னார் - மதவாச்சி ... கிளைமோரை வைத்து வீதிச் சே... என்ற பேரில் மீண்டும் எடு... யும் சான்றாக அமைகின்றன...

இவ்வாறான கிளைமோ... கப்பட்ட செயற்பாடுகளு... தலைப் புலிகளுக்கும் எவ்வி... தமும் இல்லையென்பதைத் ... துக்கொள்ளும் நாம், இவ்... அரச படைகளின் செயற்பாட்... மையாகக் கண்டிக்கிறோ... அந்த அறிக்கையில் தெரிவி... டுள்ளது.

# இலங்கைக்கு எந்தவித...

பேரினவாத அரசுகள் கடைப்பிடித்துவருகின்ற இனஒடுக்கல் அடக்குமுறைகளால் சொல்லொணாக் கொடுமைகளுக்கும், துயரங்களுக்கும் ஆளான தமிழ்மக்கள் மானத்தோடு வாழவும், உரிமைக்காகவும் போராடி வருகின்றனர்.

சமாதானப் பேச்சு மூலம் தமிழ்த் தேசிய இனத்திற்கு உரிய தீர்வு ஏற்பட கடந்த 5 ஆண்டு காலமாக நோர்வே அரசு மனிதநேயத்தோடு தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டது.

அதன் விளைவாக சிங்கள அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டு, பேச்சு நடைபெற்றது.

இலங்கையில் அண்மையில் நடைபெற்ற தேர்தலுக்குப் பின் அமைந்துள்ள மகிந்த ராஜபக்ஷ அரசு - ஈழத் தமிழர்களுக்கு அடிப்படை உரிமைகளைக்கூட காலம் காலமாக மறுத்து வரும் சிங்களப் பேரினவாதக் குழுக்களான ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய அமைப்புக்களுடனும், புத்தபிக்குகளுடனும் கைகோர்த்துக்கொண்டு, தமிழர் பகுதிகளில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் கொடிய அடக்குமுறையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது. இதனால் தமிழர்களின் இயல்புவாழ்வு அடியோடு பாதிக்கப்பட்டது.

இந்த நிலையில், நோர்வே அரசாங்கத்தை பின்னுக்குத் தள்ளிவிட்டு, இந்திய அரசை முன்னிறுத்தி - சிங்கள அரசுக்கு சார்பு நிலையை இந்தியா மேற்கொள்வதைப் போன்ற தோற்றத்தை சர்வதேச அரங்கில் உருவாக்கவும் தந்திரமாக வகுக்கும் இலங்கை அரசின் திட்டத்திற்கு இந்திய அரசு இடம்கொடுக்கக்கூ...

இராணுவத் தளபாடங்க... பது உட்பட போர்ப் பயிற்சி அ... விமான மற்றும் கடற்படைத்... களைப் புதுப்பித்துத் தருவது ... எந்தவிதமான இராணுவ உத... யும் இலங்கை அரசுக்கு இந்தி... தக் காரணத்தை முன்னிட்டு... யக்கூடாது.

அப்படி எந்தவித உதவி வ... பட்டாலும், அது தமிழர்களுக்கு... விளைவிக்கும் என்பதாலும், ... கையில் உள்ள தமிழர்கள் மட்டு... தாய்த் தமிழகம் மற்றும் உல... கும் உள்ள தமிழர்களின் உ... களைக் காயப்படுத்தும் என்ப... இலங்கை அரசுக்கு இந்தியா இ... ரீதியில் எவ்விதமான உதவியு... யக்கூடாது என்று மத்திய அர... தக் கூட்டம் வற்புறுத்திக் ... கொள்கிறது.

இந்தத் தீர்மானத்தை திர... கழகத் தலைவர் கி.வீரமணி... மொழிந்தார். அரங்கில் இருந்... உணர்வாளர்களை இந்தியத் ... நகரம் புதுடெல்கியின் காதுகளு... கேட்குமாறு தொடர்ந்து கர... எழுப்பி முன்மொழியுமாறு அ... டுக்கொண்டபோது, இந்தத் தீர்... துக்கு ஆதரவளிக்கும் வ... தொடர்ச்சியாக கரகோசம் செய்து... மக்கள் முன்மொழிந்தனர்.

இந்தக் கூட்டத்தில் - ம... மாமனிதர் ஜோசப் பரராஜசிங்க... வணக்கம் செலுத்தும் வ... அனைவரும் எழுந்து நின்... நிமிட நேரம் மெளனமாக நின்... கல் தெரிவித்தனர்.

# இராணுவ வன்முறை...

கொள்ள வேண்டும் என்றால் அதை விட வேறுவழியில்லை.

எங்கள் பகுதிக்குள் பாதுகாப்புத் தேடி வருகிற மக்களுக்கான ஏற்பாடுகளை நாம் நிச்சயமாக ஒழுங்குபடுத்துவோம். எங்கள் மாவட்ட அரசியல் பணிமனைகளில் அதற்கான வேலைகளை நாங்கள் செய்திருக்கிறோம்.

நாங்கள் யுத்தத்தை விரும்பவில்லை. யுத்தத்தைத் தவிர்த்து சுமுகமான சூழலை உருவாக்குவது தொடர்பாக நாங்கள் முயலுகிறோம்.

ஆனால், சிங்களப் படைகள் இப்படியாக வெறியாட்டம் புரிந்து எங்கள் மீது யுத்தத்தைத் திணிக்கும் போது நாங்கள் தொடர்ந்தும் பொறுமை காப்பது சமாதான காலத்தில் சிரமமானதுதான்.

நிச்சயமாக சர்வதேச அனுசரணையுடன் உடன்பாட்டுக்கு வந்த நாங்கள் அதைப் பின்பற்றுவோம் என அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

தரைமார்க்கமாக கிளிநொச்சிக்கு வருகைதந்த ஆயர்கள் குழுவில் - இலங்கையின் மறை மா... களின் அதி. வணக்கத்துக்குரிய... களான - தோமஸ் சௌந்தரந... (யாழ்ப்பாணம்), இராயப்பு ... (மன்னார்), வியானி பெர்னா... (கண்டி), டுலிப் டி சிக்கெர (கொ... குமார இலங்கசிங்க (குருந... ஆகியோருடன் வணக்கத்திற்... வர்களான ஜயசிறி பீரிஸ் (தேசிய... தவ சபையின் பொதுச் செயல... எபனிசர் ஜோசப் (மெதடிஸ்த... யங்களின் தலைவர்), ஜெயக்... (யாழ். மனித அபிவிருத்தி நிலை... கியுடெக்), கதிர்காமர் (மெத... ஆலயங்களின் பிரதான போ... எஸ்.பி.நேசகுமார் (யாழ். மா... தின் தலைமை தியாக்கோன்)... யோர் பங்கேற்றனர்.

விடுதலைப் புலிகள் தரப்பி... சியற்துறைப் பொறுப்பாளர் ... தமிழ்ச்செல்வன், அரசியற்... துணைப் பொறுப்பாளர் சோ.த... சமாதான செயலகப் பணிப்... புலித்தேவன், மகளிர் அ... துறை துணைப் பொறுப்பாளர் ... விழி ஆகியோர் கலந்துகொண்...

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 31.12.2005 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்...

# ஹலோட்ரஸ்ட் வாகனங்கள் இராணுவத்திடம் ஒப்படைப்பு

## ஊழியர்கள் அனைவரும் இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம்—

யாழ்.குடாநாட்டில் கண்ணி வெடியகற்றும் பணிகளை தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ள ஹலோட்றஸ்ட் நிறுவனம் - தனது 400 வாகனங்களையும் பலாலியில் இராணுவத்தினரின் பாதுகாப்பில் ஒப்படைத்துள்ளது.

அண்மையில் ஹலோட்ரஸ்டின் 2 வாகனங்கள் இனந்தெரியாதோரால் கடத்திச் செல்லப்பட்டு பின்னர் கண்டுபிடிக்கப்பட்டன. இந்த நிலையில் யாழ். குடாநாட்டில் தமது செயற்பாடுகளை நிறுத்தியுள்ள ஹலோட்ரஸ்ட் நிறுவனம் கண்ணிவெடி அகற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்டுவந்த சுமார் 400 வாகனங்களையும் பாதுகாப்புக் கருதி இராணுவத்தினரிடம் ஒப்படைத்துள்ளது. இவை பின்னர் உயர் பாதுகாப்பு வலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. அத்துடன், இந்த நிறுவனத்தில் பணியாற்றிய ஊழியர்கள் மறு அறிவித்தல் வரும்வரை பணியிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

சிறிய குழு ஒன்றே வாகனங்கள் இரண்டையும் கடத்தியதாக ஹலோட்ரஸ்ட் அதிகாரிகள் தெரிவித்திருப்பதுடன், யாழ்.குடாநாட்டில் வழமையானநிலை திரும்பும்வரை தமது வாகனங்கள் அனைத்தும் இராணுவ உயர்பாதுகாப்பு வலயப் பகுதிக்குள் தரித்து நிற்குமெனவும் தெரிவித்தனர்.

## ஒளிவிழாவும், சான்றிதழ் வழங்கலும்

கரவெட்டி—

கரவெட்டிப் பிரதேசத்தின் பங்குக்குட்பட்டவர்களுக்கான ஒளிவிழாவும், சான்றிதழ் வழங்கும் வைபவமும் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திரு இருதயக்கல்லூரியின் மண்டபத்தில் தலைமை மறை ஆசிரியர் சி.ஜேசுநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதிசுகாதார சேவைகள் மாகாண ஆணையாளரும், திரு இருதயக் கல்லூரியின் பழைய மாணவருமாகிய வைத்திய கலாநிதி கேதீஸ்வரன் பிரதம விருந்தினராகவும், புனித பொஸ்கோ பாடசாலை அதிபர் அருட்செல்வி ஜீவந்தி சிறப்பு விருந் தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இதில் புனித விவிலிய நூலில் வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கலும், ஒளிவிழாப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசுவழங்கலும் மற்றும் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன என கரவெட்டி அந்தோனியார் ஆலயத்தின் அருட்தந்தை சுவாமி சி.ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.(12)

## வண்ணார் பண்ணையிலுள்ள வீடுகளில் நேற்று திருட்டு

யாழ்ப்பாணம்—

யாழ்.வண்ணார் பண்ணைப் பகுதியில் ஓடை ஒழுங்கையில் நேற்று இரவு இனந் தெரியாத கும்பல் ஒன்று சில வீடுகளினுள் உட்புகுந்து நகை, பணம் என்பவற்றை திருடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -அதிகாலை 2 மணியளவில் வண்ணை மேற்கு ஓடை ஒழுங்கைப் பகுதியில் உள்நுழைந்த கொள்ளைக்கும்பல் ஒன்று கூரையைப்பிரித்து வீட்டினுள் இறங்கி அங்கு இருந்த பெண்களிடம் இருந்த நகைகள் மற்றும் பணம் என்பவற்றை திருடிக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர். இதேவேளை குறித்த வீட்டிற்கு அண்மையாகவுள்ள வீடு ஒன்றினுள்ளும் இந்தத் திருட்டுக்கோஷ்டி சென்று அங்கிருந்தும் நகைகள், பணம் என்பவற்றை திருடிச் சென்றுள்ளது.

இதேவேளை மேற்படி பகுதியில் நேற்று இரவு சீருடை தரித்த ஆயுததாரிகளின் நடமாட்டத்தை மக்கள் அவதானித்ததாகவும், திருட்டுச் சம்பவம் நடைபெற்றபோது மேற்படி வீட்டுக் காரர்களின் கூச்சல் சத்தம் கேட்டு அயலவர்கள் வீதிக்கு வந்த போது, இந்த ஆயுத தாரிகளின் நடமாட்டத்தினை அவதானித்ததாகவும். மக்கள் தெரிவிக்கின்றனர். இந்தத் திருட்டு தொடர்பாக யாழ்.மனிதஉரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.



சங்கானை மக்கள் வங்கியின் நடமாடும் சேவை அண்மையில் பனிப்புலம் பகுதியில் இடம்பெற்றபோது வடவலய மக்கள் வங்கி பிராந்திய முகாமையாளர் து.ரகு, சிசு உதான கணக்கில் வைப்பிலிட்ட பிள்ளையின் தாயார்ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும், அருகில் பண்டத்தரிப்பு மக்கள் வங்கியின் கருமபீட முகாமையாளர் கே.ஜெகதீசன் மற்றும் சங்கானை மக்கள்வங்கி முகாமையாளர் பொன். அச்சுதம்பிள்ளை ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (48)



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தால் சுனாமியால் பாதிக்கப்பட்ட கற்கோவளம் இளைஞர்களுக்கு வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சியில் கிறிஸ்தவ நிதியப் பிரதிநிதி ஆனந்த் பேர், பயிற்சியாளர்களுடன் காணப்படுவதைப் படத்தில் காணலாம். (91)

## மாதகலில் மீன்பிடிக்க படையினர் தடை!

மாதகல்—

மாதகல், மாரீசன்கூடல், குசுமன்துறை, போதித்துறை, சம்பில்துறை ஆகிய நான்கு மீன்பிடித் துறைகளிலும் கடற்தொழில் செய்வதற்கு கடற்படையினர் முற்றாகத் தடை விதித்துள்ளனர்.

இந்த உத்தரவை பொன்னாலை கடற்படை அதிகாரி நேரடியாக மாதகல் துறைக்குச் சென்று தொழிலில் ஈடுபட்டிருந்தவர்களிடம் கடந்த புதன்கிழமை காலை தெரிவித்ததுடன், நேற்று முன்தினம் பிற்பகல் 6 மணிக்கு முன்னர் கடற் தொழில் உபகரணங்களான படகு, இயந்திரம், வலைகள் ஆகியவற்றை வெளியில் கொண்டு செல்லும்படியும், பாதுகாப்பு அமைச்சினால் தான் இந்த உத்தரவு வழங்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

இந்தச் செய்தி அறிந்து இந்தப் பிரதேசங்களில் தொழில் புரியும் 850 குடும்பங்கள் தமது வாழ்கையை எவ்வாறு கொண்டு நடத்துவதெனத் தெரியாது வேதனையடைந்துள்ளனர்.

இந்தப் பிரச்சினையை கடற்தொழில் சம்மேளனத்தின் ஊடாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

## போராட்டத்தை சித்தரிக்கும் கசற்றுக்கள், இறுவட்டுகள் இராணுவத்தினரால் எரிப்பு

வடமராட்சி—

வடமராட்சியில் கடந்த புதன்கிழமை வீடியோக் கடைகளை இராணுவத்தினர் சோதனையிட்டு அங்கிருந்த விடுதலைப் போராட்டத்தைச் சித்தரிக்கும் வீடியோ நாடாக்கள், விடுதலைப் போராட்ட எழுச்சிப் பாடல்கள் அடங்கிய இறுவட்டுக்கள் போன்றவற்றை படையினர் அடித்து, நொருக்கியதுடன் கடைகளுக்கு முன்னால் போட்டு எரித்தும் உள்ளனர்.

இதேபோல் நேற்று முன்தினம் சோதனை நடத்திய படையினர் நெல்லியடி மத்திய சந்தைக்குச் சென்று விடுதலைப்புலிகளுக்கு சைக்கிள் பாதுகாப்பு நிதியிலிருந்தோ அல்லது வியாபாரிகளின் நிதிகளிலிருந்தோ எவ்வித வரிகளும் வழங்கப்படக் கூடாது எனவும் எச்சரித்துள்ளனர்.

மேலும் நெல்லியடியிலுள்ள வீடியோக் கடைகளில் விடுதலைப்புலிகள் சம்பந்தமான எவ்வித இறுவட்டுக்களும் இருக்கக் கூடாது எனவும், மீறி வைத்திருக்கும் கடைகள் சீல்வைத்து மூடப்படும் எனவும் அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து வர்த்தகர்கள், சந்தை ஊழியர்கள் பெரும் அச்சத்தில் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (12)

## இ.போ.ச விண்ணப்ப முடிவு திகதி நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிப்பு!

யாழ்ப்பாணம்—

இலங்கை போக்குவரத்து சபையின் சாரதி, நடத்துனர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்ப முடிவுத்திகதி -எதிர்வரும் ஜனவரி 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்ப முடிவுத்திகதி இன்று என்பதால் - பின்தங்கிய கிராமப்புற இளைஞர்கள் நன்மை கருதி விண்ணப்ப முடிவுதிகதியை நீடிக்குமாறு நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் போக்குவரத்துச் சபையிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனையடுத்தே விண்ணப்ப முடிவுத்திகதி ஜனவரி 10 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

சாரதிக்கு விண்ணப்பிப்பவர்கள் 23 வயதுக்கும், 45 வயதுக்கும் இடைப்பட்டவர்களாகவும், 9 ஆம் ஆண்டு சித்தியுடன், 2 வருடங்கள் பாரஊர்திச் சாரதி அனுபவமுடையவர்களாகவும் இருக்க வேண்டும்.

பஸ் நடத்துனர் பதவிக்கு 18 வயதுக்கும், 45 வயதுக்கும் இடைப்பட்ட க.பொ.த.சாதாரண தரப்பரீட்சையில் இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில் கணிதம், தாய்மொழியுடன் ஆறுபாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

தகுதியானவர்கள் கொழும்பு 5, கிருல வீதி, இலக்கம் 200 எனும் முகவரியில் அமைந்துள்ள இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு பதிவுத் தபாலில் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு இ.போ.சபையின் ஆளணி முகாமையாளர் பத்திரிகைச் செய்தி மூலம் அறிவித்துள்ளார்.

தகுதியானவர்களை மேற்படிப் பதவிக்கு 10.01.2006 இற்கு முன் விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : க.அசிதன்
முகவரி : கிளிநொச்சி

அகவை இரண்டு



பெயர் : க.சுஜானி
முகவரி : மல்லாகம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு :



கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன

பெற்றோர் ஒப்பம்


## சென்றல் விளையாட்டுக்கழக 4 ஆம் ஆண்டு நிறைவுவிழா!

யாழ்ப்பாணம்—

யாழ்.மத்திய கல்லூரி பழைய மாணவர்களால் 30.12.2001 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட யாழ். சென்றல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் கடந்த 15 ஆம் திகதி நடைபெற்றது.

கழகத் தலைவர் என். செல்வநாயகம், கழகக் காப்பாளர் கே.இராசதுரை ஆகியோர் அமரர்களாகிவிட்டதால், கழகத்தின் நான்காவது ஆண்டு நினைவினையும், மத்தியின்தினத்தையும் அமைதியான முறையில் இன்று கொண்டாடுவதெனத் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்.சென்றல் விளையாட்டுக் கழகத்தின் அடுத்த ஆண்டுக்கான நிர்வாகிகளாக தலைவர் ஏ.சி. ஜோர்ச், உப தலைவர்கள் - கே. ஜெகதாஸ், சி.றஜீவ், செயலாளர் சொ.சிவபாலன், உப செயலாளர் சொ. விமலநாதன், பொருளாளர் உ.தவபாலன், நிர்வாக சபை உறுப்பினர்கள் ரி.ராஜேந்திரா, ஆர்.றமண பிரகாஸ், எஸ்.ஈழ மாறன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

## கைதான இளைஞன் விடுவிக்கப்படவில்லை!

சாவகச்சேரி—

சாவகச்சேரி அரசடியில்வைத்து கடந்த திங்கட்கிழமை படையினரால் கைது செய்யப்பட்ட மூன்று இளைஞர்களில் ஒருவர் இன்னமும் விடுவிக்கப் படவில்லையெனத் தெரியவருகிறது.

கடந்த திங்கட்கிழமை படையினரால் கைதுசெய்யப்பட்ட இந்த மூன்று இளைஞர்களில் இருவர் புதன்கிழமை கிராம அலுவலர் மூலம் விடுவிக்கப் பட்டனர். கனகசபை கஜந்தன் (வயது 21) சாவகச்சேரி வடக்கு மற்றும் மயூரன் (வயது 19) கோயில் குடியிருப்பு ஆகிய இரு இளைஞர்களுமே விடுவிக்கப்பட்டவர்களாவர்.

இதேவேளை, கைது செய்யப்பட்ட மற்றைய இளைஞர் இன்னமும் விடுவிக்கப்பட வில்லை என்பது குறிப்பிடத் தக்கது.

# ஊடகவியலாளர் லோகீசனின் 'அலையின் வடுக்கள்' நூல்வெளியீடு

முல்லைத்தீவு—

சுனாமி கடல் அனர்த்தம் முல்லைத்தீவில் ஏற்படுத்திய கோரத்தை வெளிப்படுத்தும் வகையில் ஈழநாதம் நாளேட்டின் ஊடகவியலாளர் அ. லோகீசன் எழுதிய அலையின் வடுக்கள் என்ற நூல் - கடந்த திங்கட்கிழமை வெளியிடப்பட்டது. நூலினை தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படை சிறப்பு தளபதி கேணல் சூசை வெளியிட்டு வைத்தார். சுனாமியின் போது உயிரிழந்தவர்களின் நினைவாக கடற் கரையோரத்தில் அமைக்கப்பட்ட நினைவாலயத்தில் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது.

நூலின் முதல் பிரதியை தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படை சிறப்புத்தளபதி கேணல் சூசை வெளியிட்டு வைக்க, அனர்த்தம் ஏற்பட்ட சமயம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு நிலமைகளைச் சீராக்குவதற்கு உழைத்த முல்லைத்தீவு பங்குத்தந்தை அருட்திரு. ஜேம்ஸ் பத்திநாதர் அடிகள் பெற்றுக் கொண்டார்.

அதனைத் தொடர்ந்து அனர்த்தம் நிகழ்ந்தது முதல் அந்த மக்களின் வைத்தியத் தேவைகள், சுகாதார நடவடிக்கைகளைச் சீரான முறையில் மேற்கொண்ட முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா பெற்றுக் கொண்டார்.

அடுத்த பிரதியை கடலலையில் சிக்கி உயிரிழந்த மக்களை அடக்கம் செய்வது மற்றும் பாதிக்கப்பட்ட மக்களைப் பராமரிப்பது போன்ற வேலைகளை ஒழுங்குபடுத்திச் சிறப்பான முறையில் செயற்பட்ட முல்லைத்தீவு மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ. முகுந்தன் பெற்றுக்கொண்டார்.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி நிகழ்ந்த கடல் புவி நடுக்கத்தால் எழுந்த கடற் பேரலைகள் கரையோரப் பிரதேசங்களைத் தாக்கியிருந்தது. இதன் விளைவாக கரையோரப் பிரதேசங்கள் பேரழிவைச் சந்தித்தன.

இதனால் அழிந்துபோன முல்லைத்தீவின் கொடுமையான நிலையை வெளிப்படுத்தும் முகமாக, சம்பவத்தில் பாதிப்படைந்தவர்கள் மீட்பு நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள், அதனை நெறிப்படுத்தியவர்களின் அனுபவங்கள் அடங்கியுள்ளதாக இந்த நூல் வெளிவந்துள்ளது.

சுனாமி முல்லைத்தீவில் ஏற்படுத்திய கோரத்தாண்டவம் என்ற தலைப்பில் ஈழநாதம் நாளேட்டில் 57 தொடர்களாக வெளிவந்த அனுபவப் பகிர்வுகள் திருத்தியமைக்கப்பட்டு "அலையின் வடுக்கள்" என்ற இந்த நூல் வெளிவந்துள்ளது.

## அவுஸ்ரேலிய மருத்துவ நிதியத்தினரால் பல் மருத்துவத்தை மேம்படுத்த நடவடிக்கை

ஆழியவளை—

அவுஸ்ரேலிய மருத்துவ நிதியத்தின் அனுசரணையுடன் நல்வாழ்வு அபிவிருத்தி நிறுவனம் இணைந்து பல் மருத்துவ சேவையை மேம்படுத்தும் வகையிலான நிகழ்வும், சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் அண்மையில் 1-9 தங்கக மண்டபத்தில் நடைபெற்றது.

மருத்துவத்துறை மாணவன் தீபன் தலைமையில் நடைபெற்ற அந்த நிகழ்வில் வரவேற்புரையை மருத்துவ மாணவன் இசையமுதன் நிகழ்த்தினார்.

இந்த நிகழ்வில் சிறப்புரையை நலவாழ்வு அபிவிருத்தி நிறுவனப் பணிப்பாளர் இரட்ணம், புலிகளின் குரல் பணிப்பாளர் ந.தமிழன்பன் மருத்துவப் பிரிவு வைத்தியர் வாமன் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து வைத்தியர் வாசுகி அவர்களினால் பயிற்றுவிக்கப்பட்ட சுகாதார தொண்டர்களுக்குச் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சான்றிதழ்களை தமிழீழ மருத்துவப்பிரிவுப் பொறுப்பாளர் ரேகா, இரட்ணம், வாசுகி பற்சுகாதார மருத்துவர் அபிராமி ஆகியோர் வழங்கி வைத்தனர்.

இந்தநிகழ்வில் பூநகரி, ஆழியவளை, மாங்குளம், கற்சிலைமடு, அளம்பில் ஆகிய திலீபன் மருத்துவமனைகளுக்கு பல் மருத்துவத்துக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

தொடர்ந்து பற்சிகிச்சை எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், இது போன்ற மருத்துவ சேவையினை எப்படிச் செய்யவேண்டும் என்றும் மருத்துவ மாணவர்களாலும், மருத்துவர் வாசுகி அவர்களாலும் விளக்கி வைக்கப்பட்டது.

# சுனாமியால் பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு வைப்பகத்தில் பணம் வைப்பிலிடப்பட்டது!

முல்லைத்தீவு—

முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தினால் வெளிநாட்டில் புலம்பெயர்ந்து வாழும் அன்பர் ஒருவரின் நிதியுதவியுடன் சுனாமியால் தாய் தந்தையரை இழந்த 17 பிள்ளைகளுக்கு தமிழீழ வைப்பகக் கணக்கில் 1000 ரூபா வைப்பிலிடப்பட்டு புத்தகம் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வு முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு சமாசத் தலைவர் மரியராசா தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வின் கருத்துரைகளை முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா முல்லைத்தீவு நகர தமிழீழ கடற்படையின் தளபதி க.தினேஸ் ஆகியோர் நிகழ்த்தினர்.

தொடர்ந்து வைப்புக் கணக்குப் புத்தகங்களை முல்லைத்தீவு மாவட்ட வைத்திய அதிகாரி தர்மேந்திரா, முல்லைத்தீவு நகர தமிழீழ கடற்படையின் தளபதி க.தினேஸ் ஆகியோர் வழங்கி வைத்தனர்.

சுனாமியால் தாய், தந்தையரை இழந்த 163 பிள்ளைகளுக்கு ஏற்கனவே இவ்வாறாக பணம் வைப்பிலிட்டு, புத்தகங்கள் வழங்கப்பட்டது. இப்போது 17 பிள்ளைகளுக்கு வழங்கப்பட்டுள்ளதோடு, தொடர்ந்தும் தமிழ் அன்பர்களின் ஆதரவுடன் வழங்கவுள்ளதாகவும் சமாசத் தலைவர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## அனுமதியற்ற இடங்களில் விலங்குகளை வெட்டுவதை தவிர்க்குமாறு வேண்டுகோள்

-தமிழீழ சுகாதார சேவையினர்-

கிளிநொச்சி—

அனுமதிக்கப்பட்ட விலங்கறுமனைகள் தவிர்ந்த பிற இடங்களில் இறைச்சிக்காக விலங்குகள் வெட்டுவதை தவிர்த்துக்கொள்ளுமாறு தமிழீழ சுகாதார சேவையினர் அறிவித்துள்ளனர்.

எமது தாயகப் பகுதியில் அனுமதிக்கப்பட்ட விலங்கறுமனைகள் (கொல்களங்கள்) தவிர்ந்த பிற இடங்களில் இறைச்சித் தேவைக்காக விலங்குகள் வெட்டப்படுவது அவதானிக்க முடிகிறது. விலங்கறுமனைகள் தவிர்ந்த பிற இடங்களில் விலங்குகளுக்கு தொற்று ஏற்பட்ட நிலையில் வெட்டப்படும் உணவு தேவைக்கு வழங்கப்படுவதால் பல்வேறு தொற்றுநோய் பரவும் சாத்தியம் அதிகரித்துள்ளமை அவதானிக்க முடிகிறது.

இவ்வாறான நிலைமையை கருத்திற்கொண்டு விலங்கறுமனைகள் தவிர்ந்த பிற இடங்களில் விலங்குகள் வெட்டுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அத்துடன் அவசிய தேவையின் போது வெட்டப்படும் சந்தர்ப்பங்களில், அனுமதி பெற்றே வெட்டப்பட வேண்டும் என தமிழீழ சுகாதார சேவையினர் தெரிவித்துள்ளனர்.



தமிழர் தாயகத்தில் சிங்களப் படைகள் நடத்தும் படுகொலைகளைக் கண்டித்து அக்கராயன் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற கண்டனப் பேரணியின் ஒருசில காட்சிகள்.

## காலச் சுவட்டில்...

### இன்றைய நாளில் அன்று நிகழ்ந்தவை

### டிசெம்பர் -31

1999: இன்று தீர்ப்பு நாள். உலகம் அழிந்து போகப் போகிறது என்று கருதிய ஐரோப்பாவிலுள்ள குழுமினர் தமது உடமைகள் முழுவதையும் வண்டில் வண்டியாக ஏற்றிவந்து தேவா லயங்களில் கொடுத்து இறைனின் அருளைப் பெற பிரார்த்தித்தனர்.

1695: பிரிட்டனில் " ஜன்னக்வரி" முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. இது காரணமாக மக்கள் தமது வீடுகளில் இருந்த ஜன்னல்களை கற்கள் கொண்டு கட்டி அடைத்து விட்டனர்.

1719: புகழ்பெற்ற பிரிட்டிஸ் வானியலாளரான " ஜோன் பிளம்ஸ்டீன்" காலமானார். 2884 நிலையான நட்சத்திரங்களைக் கொண்ட பட்டியலைத் துல்லியமாக கணித்துத் தயாரித்துத் தந்தவர் இவராவார். இவரது நட்சத்திரப் பட்டியல் சேர் சோக் நியூட்டன் உட்பட பல வானியலாளர்கள் தமது ஊகக் கருத்துக்களைப் பரிசோதித்துப் பார்க்க உதவியது.

1891: வெளிநாடுகளிலிருந்து குடியேறவரபவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுப்பதற்காக அமெரிக்காவின் நியூயோர்க்கில் எல்லிஸ் தீவில் " குடியேறுவோர் மையம்" திறக்கப்பட்டது.

1909: மார்க்கோணிக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. குல்லியெல்மோ மார்க்கோணி என்ற முழுப்பெயர் கொண்ட இவர் தான் 1896 இல் தனது 22 ஆவது வயதில் வானொலியைக் கண்டுபிடித்துத் தந்திருந்தார்.

1911: ஆஸ்திரியாவைச் சேர்ந்த விக்டர் பிரான்சிஸ் ஹெஸ் என்பவர் விண்வெளியிலிருந்து கதிர்வீச்சு ஏற்படுவதைக் கண்டுபிடித்து அறிவித்தார்.

1915: விண்வெளியின் ஒரு வளைவு காரணமாகவே புவியீர்ப்பாற்றல் விளைவுகள் உண்டாகின்றது என்ற தனது புதிய கோட்பாட்டை இன்றேற்பட்ட சூரிய கிரகணத்தின்போது ஜேர்மனியரான ஆல்பர்ட் ஜன்ஸ்டீன் (ALBERT EINSTIN) வெளியிட்டார்.

1917: பிரிட்டனில் உணவுப் பங்கீட்டு முறை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

1917: கனடாவில் மதுவிலக்கு அமுலுக்கக் கொண்டுவரப்பட்டது.

1917: இந்த டிசம்பர் மாதத்தில் மட்டும் ஜேர்மனியின் நீர்மூழ்கிக் கப்பல் தாக்குதல்களால் நேசநாட்டுக்கப்பல்கள் 160 மூழ்கடிக்கப்பட்ட தாகவும் அறிவித்தது.

1918: பிரிட்டிஸ் படைகளில் ஆட்குறைப்புச் செய்யப்பட்டது. ஏறக்குறைய 280000 இராணுவத்தினர் பணியிலிருந்து நீக்கப்பட்டனர்.

1918: இந்த ஆண்டில் மட்டும் 7000 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நேசநாட்டு விமானங்களைச் சுட்டு வீழ்த்தியிருப்பதாக ஜேர்மனி அறிவித்தது. அத்துடன் நேசநாடுகளைச் சேர்ந்த 1077கப்பல்களும் மூழ்கடிக்கப்பட்டதாகவும் அறிவித்தது.

1919: கிழக்கு சைபீரியா பற்றி பிரிட்டன் ஜப்பான் அமெரிக்கா ஆகிய நாடுகளிடையே ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டது.

1921: இன்சுலின் கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

1923: முதன் முதலாக பிக்பென் கடிகாரத்தின் மணி ஓசை BBC வானொலியில் ஒலிபரப்பப்பட்டது.

1938: வாகனங்கள் ஓட்டும் போது மது அருந்திவிட்டு வாகனம் ஓட்டுகிறார்களா என்பதைக் கண்டுபிடிக்க உதவக் கூடியதும் டொக்டர் ஆர்.என்.ஹார்க்ன் என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டதுமான " டிராங்கோ மீற்றர்" என்ற கருவி இந்தியானா காவல் துறையினரால் அதிகாரபூர்வமாக அறிமுகப்படுத்தப்பட்டது.

1942: இந்த ஆண்டில் மட்டும் முப்பது இலட்சத்துக்கு மேற்பட்ட போலந்து யூதர்கள் மரண முகாம்களில் கொல்லப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

1942: இந்த மாதத்தில் மட்டும் 18000 ரஷ்ய வீரர்கள் போர்க்கைதிகள் முகாமில் பசியால் இறந்ததாக அறிவிக்கப்பட்டது.

1944: ஹங்கேரி ஜேர்மனி மீது போர்ப் பிரகடனம் செய்தது.

1951: வொஷிங்டனைத் தலைமையகமாகக் கொண்டு அமெரிக்கா மாநிலங்கள் கூட்டமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

1956: சுமத்திராவை ஆக்கிரமித்திருப்பதாக இந்தோனேஷிய அதிபர் சுக்ர்னோ அறிவித்தார்.

1960: வடவியட்நாம் ஆக்கிரமிப்பைத் தொடர்ந்து வாவோஸ் ஐக்கிய நாடுகள் சபையின் உதவியை நாடியது.

1960: பிரிட்டனில் 13 ஆம் நூற்றாண்டிலிருந்து புழக்கத்திலிருந்து வந்த "பார்த்திங்" நாணயம் புழக்கத்திலிருந்து நிறுத்தப்பட்டது.

1968: ஒலியைவிட வேகமாகச் செல்லக்கூடிய விமானமான சோவியத் சூப்பசோனிக் டூப் வெல் டி.யூ -144 விமானத்தின் வெள்ளோட் டம் நடைபெற்றது.

தொகுப்பு:- சந்துரு